உ

சரசாலை, இலந்தைத்திடல்

# ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயம்



# மஹா கும்பாபிஷேக மலர்

2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



சரசாலை இலந்தைத்திடல்

## ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயம்

# மஹா கும்பாபிஷேக மலர்

## 2013


மலர் ஆசிரியர்கள்

ச. லலீசன்

வை. விஜயகுமாரன்



வெளியீடு:

பரிபாலனசபை

ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயம்

சரசாலை

01-05-2013

(விஜய ஸ்ரீ சித்திரை மீ 18ஆம் நாள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலமூர்த்தி



பிள்ளையார்




எழுந்தருளி



சுப்பிரமணியர்



தில்லைக்காளி அம்மன்



சந்தானகோபாலர், வைரவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


விடயம் பக்கம்

1. ஆசியுரை:- *சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள்* ........ 5

2. ஆசியுரை:- *சிவஸ்ரீ சி. கிருபாகரக்குருக்கள்* ........ 7

3. ஆசியுரை:- சிவஸ்ரீ கி. *சோமசுந்தரக்குருக்கள்* ........ 8

4. ஆசியுரை:- *நல்லை ஆதீன குரு முதல்வர்* ........ 9

5. ஆசியுரை:- *செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன்* ........ 10

6. சரசையில் கோயில் கொண்டருளும் ஸ்ரீ வீரமாகாளி – *ச. லலீசன்* ........ 11

7. ஆலய கோபுரம் வளர்ந்த வரலாறு – *வை. விஜயகுமாரன்* ........ 15

8. அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே..... – *ச. லலீசன்* ........ 16

9. குருத்துவ மரபில் பொன்விழாக்கண்ட சி. சிதம்பரநாதக்குருக்கள் – *ச. லலீசன்* ........ 20

10. ஆலய வரலாற்றுப் பதிவுகள் ........ 24

11. தமிழ் நாட்டிலுள்ள தில்லைக் காளியம்மன் ஆலயம் - *சாந்திப்பிரியா* ........ 26

12. காளி மகத்துவம் - *சுவாமி கமலாத்மானந்தர* ........ 30

13. கவிரத்ன காளிதாசன் - *நி. த. நடராஜதீக்ஷிதர்* ........ 32

14. ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம் - *ஜடாயு* ........ 37

15. ஸ்ரீ லலிதா சஹஸ்ர நாம வரலாறு - *இணையன்* ........ 44

16. காளியின் அருள்பெற்ற காளமேகம் - *இணையன்* ........ 48

17. காளி வழிபாடு - *வாழ்வியற் களஞ்சியம்* ........ 49

18. காளி தத்துவம் - *சாம்பசிவ சோமாஸ்கந்த சிவாச்சார்யர்* ........ 54

19. அம்பிகை வழிபாடும் ஸ்ரீ சக்கர பூஜையும் - *தி. மயூரகிரிசர்மா* ........ 57

20. ஸ்ரீமாதா - *சுகி. சிவம்* ........ 61





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. ஆலயத்தின் பொருள் விளக்கம் - *தே. சந்திரசேகரப்பட்டர்* ........ 64

22. அட்டபந்தனம் எனப்படும் மருந்து சாத்துதல்

*பெ. ராம. லெ. ராம. ராமனாதன் செட்டியார்* ........ 67

23. இலந்தைத்திடலில் நான்கண்ட அன்னை பராசக்தி

*சிவஸ்ரீ கி. சோமசுந்தரக்குருக்கள்* ........ 68

24. சக்திவிரதங்கள் - *பிரம்மஸ்ரீ சி. ஜெகதீஸ்வரசர்மா* ........ 71

25. விரதங்களை அனுட்டிக்கும்போது கைக்கொள்ள வேண்டிய

விதிகளும் மரபுகளும் - *கோப்பாய் சிவம்* ........ 75

27. திருவூஞ்சல் *ச. பொன்னம்பலபிள்ளை* ........ 78

28. பின்னிணைப்பு I ........ 82

*29.* பின்னிணைப்பு II ........ 83

30. எமது மனமார்ந்த நன்றிகள் – *வை. விஜயகுமாரன்* ........ 84





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆலயப் பிரதமகுரு "வேதாகம சோதிட பூஷணம்"
## சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் அவர்களின்
# ஆசியுரை

பிரபஞ்சத்தின் தோற்றத்துக்கும், இயக்கத்துக்கும், ஒடுக்கத்துக்கும் காரணமான சக்தியை பெண்ணாக உருவகித்து வழிபடும் பெருமையுடையது எமது சமயம். இப்பெண்தெய்வ வழிபாடே சக்தி வழிபாடு எனப் போற்றப்படுகின்றது. காலத்துக்குக் காலம் பல்வேறு பெயர்களுடன் பல வழிகளில் சக்தியை வழிபட்டு அன்னையின் அருளைப் பெற்றோர் பலர்.

சீர்காழியிலே அவதரித்து சைவம் வளர்த்த திருஞானசம்பந்தர் குழந்தைப் பருவத்திலே "அம்மா" என்று அழுதகுரல் கேட்டு ஓடோடி வந்து அன்னை ஞானப்பால் ஊட்டினார். ஆதிசங்கரர் அன்னையின் அருள் பெற்று பல அற்புதங்களைச் செய்தார். திருக்கடவூரில் வாழ்ந்த அபிராமிப்பட்டர் அம்மையின் அருளாலே அபிராமி அந்தாதி பாடினார். ஊமையாக இருந்த காளிதாசன் அன்னை அருள்பெற்று பல காவியங்களைப் படைத்தார்.

இவ்வாறு வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் அன்னையை பல இடங்களிலும், பல்வேறு வடிவங்களுடனும் பல நாமங்களோடும் வழிபட்டு வருகின்றனர். வீரம், செல்வம், கல்வி ஆகியவற்றை வழங்கும் அன்னை பராசக்தியை நவராத்திரி காலங்களில் துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி ஆகிய மும்மூர்த்திகளாக வணங்கி வருகின்றனர்.

தென்மராட்சி சரசாலைப் பதியில் இலந்தைத்திடல் என்னும் திவ்விய ஷேத்திரத்தில் "வீரமாகாளி" என்னும் திருநாமத்துடன் வீற்றிருந்து பல்லாண்டுகளாக திருவருள் பாலித்து வருகின்றமை எல்லோரும் அறிந்ததே.

இந்த ஆலயம் பரிவாரங்களுடன் புதுப்பிக்கப்பட்டு 1985இல் ஒரு கும்பாபிஷேகமும், உள்வீதி கொட்டகைகள் நிறைவேற்றப்பட்டு 1999இல் இரண்டாவது கும்பாபிஷேகமும், தற்போது திரிதள இராஜகோபுரம், முன்மணிமண்டபம், தில்லைக்காளி மண்டபம் என்பன நிறைவேற்றப்பட்டு 18-03-2013இல் மூன்றாவது கும்பாபிஷேகமும் சிறப்பாக நிறைவேற்றப்பட்டது. இம்மூன்று கும்பாபிஷேகங் களையும் செய்வதற்கு அம்பாள் அடியேனுக்கு திருவருள் பாலித்துள்ளதை பெரிய பாக்கியமாகக் கருதுகின்றேன்.

மஹாகும்பாபிஷேகம் 12 வருடங்களுக்கு ஒரு முறை நிகழ்த்தப்பட வேண்டுமென்று ஆகமங்கள் விதித்திருந்தாலும், நாட்டு நிலைமை, கோவிலின் நிதி நிலைமை போன்றவற்றால் காலந்தள்ளிப் போவதையும் தவிர்க்க முடியாதது.

கும்பாபிஷேகம் அனாவர்த்தனம், ஆவர்த்தனம், புனராவர்த்தனம், அந்தரீதம் என நான்கு வகைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிலே இல்லாத புதிய இடத்தில் ஆலயம் அமைத்து கும்பாபிஷேகம் செய்து பூஜிப்பது அனாவர்த்தனம் என்றும், பல ஆண்டுகளுக்கு முன்னதாக பூஜையில் இருந்த கோவில் அழிவடைந்து, சீர்குலைந்துபோக முன்போல் சீர்திருத்தி ஆலயத்தை அமைத்து கும்பாபிஷேகம் செய்வதை ஆவர்த்தனம் என்றும், கர்ப்பக்கிருகம், விமானம், பலீபீடம், கர்ப்பாவரணம்,விக்கிரகம் இவைகள் பழுது பட்டிருந்தால் அவைகளைச் சீர்செய்வதற்கு பாலாலயம் அமைத்து அதில் சுவாமியை வைத்துப் பூஜித்துக்கொண்டு, திருத்த வேலைகளைச் செய்து கும்பாபிஷேகம் செய்தல் புனராவர்த்தனம் என்றும், ஆலயத்தில் சண்டாளர் உட்புகுந்து திருட்டு நடந்தாலோ பிம்பத்துக்குப் பழுது ஏற்பட்டாலோ அவற்றைத் திருத்தி கும்பாபிஷேகம் செய்தல் அந்தரீதம் என்றும் சொல்லப்படும். அந்தரீதப் பிரதிஷ்டைக்கு நாள் நட்சத்திரம் பார்க்க வேண்டியதில்லை. எனவே இங்கு நடை பெற்றது புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் எனப்படும்.

கும்பாபிஷேகத்தில் யாகம் முக்கிய இடம் வகிக்கின்றது. 1, 5, 9, 17, 25, 33 வகையான குண்டங்கள் அமைத்து அக்கினிப் பிரதிஷ்டை செய்து ஆகுதிகள் நடை பெறுகின்றன. இவை ஆலயத்தின் வசதி, பொருளாதாரம் என்பவற்றுக்கேற்ப நடைபெறுகின்றது. யாக குண்டங்களில் சமித்துக்களையிட்டு அக்கினியை வளர்த்து, சுத்தமான நெய்யினால் ஆகுதிகளைச் செய்து ஹோமம் நடைபெறும். இங்கு மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றினாலும் வழிபாடு நிகழும். ஓம குண்டங்களில் எழும் புகையும், மந்திர ஒலிகளும், அடியார்களின் நல்லெண்ணங்களும், பக்திப்பாக்களும் எங்கும் வியாபித்திருக்கின்ற அருட்சக்தியைத் தூண்டி கும்பத்தில் பிரகாசிக்கச் செய்யும். யாகத்துக்கும் மூலமூர்த்திக்கும் தொடர்பை ஏற்படுத்தி அதன் மூலம் யாகத்தில் நிறைந்திருக்கின்ற சக்திகளை பிம்பத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கும் கிரியை நிகழும். பின்பு கும்பம் பிரதட்சிணமாக எடுத்துச் செல்லப்பட்டு விமானத்துக்கும், மூல மூர்த்திக்கும், பரிவார மூர்த்திகளுக்கும் அபிஷேகம் செய்வதால் பிம்பம் அருட்சக்தி நிறைந்து தரிசிக்கும் அடியார்களுக்குத் திருவருள் கிடைக்கின்றது.

கும்பாபிஷேகம் செய்த நாளிலிருந்து 45 நாட்கள் மூர்த்திகளுக்கு விசேட அபிஷேகம், ஆராதனை நடைபெறுவதை மண்டலாபிஷேகம் என்பர். இறுதித் தினத்தில் சங்காபிஷேகம், பூஜைகள், விழா நடைபெற்று கும்பாபிஷேகக் கிரியைகள் பூர்த்தியாகும்.

கும்பாபிஷேகத்தின் பின் நித்திய நைமித்தியங்கள் ஒழுங்காக நடைபெற வேண்டும். அடியார்களின் நேர்த்திக்கடன்கள் நிறைவேற்றப்படவேண்டும். தெய்வத்தின் அருட்சக்தி மேலும் பெருகும். கும்பாபிஷேகம் செய்தல், செய்வித்தல், துணைபுரிதல், பொருளுதவி செய்தல், சரீர உதவி செய்தல், கண்டு களித்தல் யாவும் சிவ புண்ணியத்தை ஈட்டித்தரும் செயல்களாகும்.

ஆலயத் திருப்பணிக்கு பொருள் கொடுத்தவர்கள், வாகன உதவி புரிந்தவர்கள், சரீர உதவி செய்தவர்கள், பணிகளைத் திறம்படச் செய்த ஆசாரிமார், வர்ணம் தீட்டியோர், இன்னும் பலவகையிலும் உதவியவர்கள், கும்பாபிஷேகத்தை தரிசித்தவர்கள், மண்டலாபிஷேகத்தில் பங்கு கொண்டவர்கள், வழிபாடு செய்தவர்கள் எல்லோருக்கும் எல்லாம் வல்ல அம்பாள் நிறைந்த திருவருளை வாரி வழங்க வேண்டுமென்று அம்மையின் திருப்பாதங்களை வழுத்தி, அனைவருக்கும் ஆசிகூறி அமைகின்றேன். ☐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய நித்திய குரு "வேதாகம ஜோதி, கிரியா வித்தகர்"
சிவஸ்ரீ சி. கிருபாகரக் குருக்கள் அவர்களின்

# ஆசியுரை

இலந்தைத்திடலில் அருள்பாலிக்கும் சர்வலோக நாயகியாகிய அன்னை, ஸ்ரீவீரமாகாளியாக சரசாலை இலந்தைத் திடலில் கோயில் கொண்டு அருள்பாலிக்கிறாள். நமது தந்தையார் நாடோறும் பூசித்து வழுத்திய அன்னையின் திருவடிகளை தற்போது நித்தமும் பூசித்து வழுத்தும் பேறு எனக்கு வாய்த்துள்ளது. ஆலய வரலாற்றில் இடம்பெற்றது நான்காவது கும்பாபிஷேகமாகும். இதில் மூன்று கும்பாபிஷேக கிரியைகளில் பங்கேற்கும் வாய்ப்பை அன்னை எனக்கு வழங்கியிருக்கிறாள். அத்துடன் மஹோற்சவம் முதலாய கிரியைகளை ஆற்றும் பாக்கியமும் எனக்குக் கைகூடியுள்ளது. அன்னையை வழுத்தும் யாவரும் சகல சௌகரியங்களையும் பெற்று வாழ பிரார்த்திக்கின்றேன்.□

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### பிரதிஷ்டாவித்தகர்
## சிவஸ்ரீ கி. சோமசுந்தரக்குருக்கள் (மட்டுவில்)
### அவர்கள் வழங்கிய
# ஆசியுரை

எல்லாம் வல்ல அன்னை பராசக்தி அருள்மிகு வீரமாகாளி அம்பிகையின் பாதங்களைப் பணிந்து, பிரதம சிவாச்சாரியார் அவர்களின் திருவடியை வணங்கி, சரசாலை இலந்தைத்திடல் வீரமாகாளி அம்பாளுக்கு மகாகும்பாபிஷேகம் நன்றாக நிறைவேறியுள்ளது. அம்பிகையினுடைய திருவருள் பிரவாகம், ஆலயத்தின் சிறப்பு, அடியார்களின் திருப்தி பூர்வமான தன்மைகள் என்பவற்றுடன் ஆலய தர்மகர்த்தாக்களின் மூன்று தலைமுறைக்குரிய பரம்பரை ஆலய சிவாச்சாரியார்களின் மூன்று தலைமுறையான பரம்பரை என்பன ஒன்றாக இணைந்து அடியார்கள் அறக்கொடை வள்ளல்கள் என்பவர்களுடைய பக்தி பூர்வமான நிதியுதவியோடு அன்று தொடக்கம் இன்றுவரை வளர்ந்து வந்த இவ் ஆலயத்தின் இந்தத் தலைமுறையில் மூன்றாவது மகாகும்பாபிஷேகமானது அம்பிகையின் திருவருளோடு சிறப்புற நடைபெற்றுள்ளது.

இவை எல்லாவற்றிற்கும் அம்பிகையினுடைய திருவருளும், பிரதம சிவாச்சாரியார் அவர்களுடைய பக்தி பூர்வமான முன்னேற்பாடுமே காரணம். எனவே ஆலய பிரதம சிவாச்சாரியார் அவர்கள், ஏனைய சிவாச்சாரியார்கள், ஆலய பரிபாலன சபையினர், சிற்பக் கலைஞர்கள், அறக்கொடை வள்ளல்கள் வழிபடுமடியார்கள் அனைவரும் பெரியவர்கள், பெருமைமிக்கவர்கள்.

அனைவரும் அன்னை பராசக்தி அருள்மிகு வீரமாகாளி அம்பிகையின் திருவருளினால் சகல செல்வயோக மிக்க பெருவாழ்வு வாழ அன்னை அடிபணிந்து வாழ்த்துகிறேன். ☐

வாழ்க! வளர்க!
வணக்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் : ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

நல்லூர், யாழ்ப்பாணம்.
இலங்கை.

தொலைபேசி: 021 222 2870



## நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கிய

# ஆசியுரை

சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயம் தென்மராட்சியில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அம்பாள் ஆலயங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. கிராம எல்லையில் தெய்வக்காவலாக நம்முன்னோர் கோவில்களை நிறுவினர். சரசாலைக் கிராமத்தின் எல்லையில் இந்த ஆலயம் அமைந்து அருள்சுரக்கிறது.

காளியை வணங்கி அருள் பெற்றோர் பலர். மகாகவி காளிதாசர், இராமகிருஷ்ணர் என இப்பட்டியல் நீண்டது. வழிதவறிச் சென்றவர்களையும் அரவணைத்து நல்வழிப்படுத்தி ஆதரிக்கும் அருட்திறன் காளிக்குரியது.

யாழ்ப்பாண அரசர்களது வழிபாட்டுடனும் காளி வழிபாடு தொடர்புபட்டுள்ளது. நல்லூர் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயம் இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு. யாழ்ப்பாணத்தில் உள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் குலத்தொழில் சிறக்கப் பத்திரகாளி அம்மன் ஆலயங்களை நிறுவி வழிபாடாற்றுகின்றனர். சரசாலை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயம், வேளாண்மையை நாடும் மக்களால் மருத நிலச் சூழலில் அமைக்கப்பட்ட ஆலயமாகத் திகழ்கின்றது.

"பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம் காத்தவளே பின் கரந்தவளே என ஐந்தொழில் ரூபமாக அபிராமியைக் காண்கிறார் அபிராமிப்பட்டர். சர்வலோகங்களையும் காத்தும் படைத்தும் கரந்தும் இயக்குகின்ற சக்தியாக அன்னை விளங்குகின்றாள். இதனால் இவளை ஸ்ரீமாதா என ஸ்ரீலலிதா சகஸ்ரநாமம் பூஜிக்கின்றது.

சரசாலை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் 1985, 1999, 2013 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மகாகும்பாபிஷேகங்களில் நேரில் கலந்து கொள்ளும் பாக்கியம் எமக்கு வாய்த்தது. இது எமது திருவருட்பயன்.

இவ்வாலயத்தின் பிரதம குருவாகத் திகழும் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள் எமது மண்ணில் இன்று வாழும் அந்தணோத்தமர்களுள் ஒருவர். விப்ரசிரேஷ்டராகக் கொள்ளத்தக்கவர். இவ்வாலய எழுச்சியினூடாக குருக்களின் ஆளுமைத்திறனும் நன்கு வெளிப்படுகின்றது.

சர்வலோக நாயகியாகிய அன்னையின் திருவருள் யாவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம். □

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செஞ்சொற்செல்வரின் ஆசியுரை

**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன்**

தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை
தலைவர், சிவபூமி அறக்கட்டளை

அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம் என்ற வார்த்தைக்கு அமைய வையகத்தை வாழவைக்கும் பராசக்தியை நம்பி வழிபாடுசெய்யும் அடியார்கள் நம்பிக்கை வீண்போவதில்லை.

தென்மராட்சியில் சைவத்தமிழ் நெறி காத்த சரசாலைத் திருவூரில் அமைந்த ஸ்ரீ வீரமாகாளி அம்பாளின் மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன்.

சிவநெறி வழுவாச் சீலர்கள் வாழ்ந்த இத்திருவூரில் பழம்பெருந் தெய்வமாக ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் வீற்றிருந்து அருள்மழை பொழிவது அனைவரும் அறிந்ததே. காலத்துக்குக் காலம் சரசாலைவாழ் மக்கள் இக்கோவிலைப் புனருத்தாரணம் செய்து பேணிப்பாதுகாத்து வருகின்றனர். அவ்வாறே இவ்வாண்டு புதிய இராஜகோபுரத்தோடு நிறைவாகத் திருப்பணிகள் நிறைவு பெற்று பல ஆயிரம் அடியவர்கள் முன்னிலையில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றமை பெருமைக்குரிய விடயமாகும்.

சிவாச்சார்ய சிரேஷ்டர் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக்குருக்களின் கைகளால் இப்புனித கைங்கரியம் நிறைவேறியமை மேலும் சிறப்பைத் தருகின்றது.

இத்திருக்கோவிலின் நித்திய நைமித்தியக் கிரியைகளை நடத்துகின்ற சிவாச்சாரியார்களின் பணியை அனைவரும் வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளோம். இவ்வாலயத்தின் இன்றைய அறங்காவலர்களாகத் திருப்பணியை முன்னின்று நடத்திய தொண்டர்கள் நன்றிக்குரியவர்கள்.

கோவில் திருப்பணி, சாதாரணமான விடயமல்ல. தெய்வத்திருவருள் முன்னின்று வழிநடத்தாவிட்டால் எக்காரியத்தையும் நிறைவாக மேற்கொள்ள முடியாது. அன்னை வீரமாகாளி தான் விரும்புவதை அடியவர்கள் மூலம் நிறைவேற்றிக்கொள்கிறாள். பலலட்ச ரூபா செலவில் மகத்தான திருப்பணி நிறைவேறியுள்ளது. இப்புண்ணியமான திருப்பணியை எதிர்காலச் சந்ததியினர் நன்முறையில் பேணிப்பாதுகாக்க வேண்டும்.

எம்மண்ணில் ஆத்மீக எழுச்சியை ஏற்படுத்துவதற்குத் திருக்கோவில்கள் நன்முறையில் பேணப்படவேண்டும். சரசாலை மக்கள் தமது முன்னோர் பேணிய உயர்சைவப் பண்பாட்டு விழுமியங்களை மிக அக்கறையோடு பேணி வருவதை யாமறிவோம்.

இவ்வூர் மக்கள் உலகின் பல பாகங்களிலும் உயர்நிலையில் வாழ்கிறார்கள். அவர்களிடம் ஊர்ப்பற்றும் சமய ஒழுக்கமும் ஒன்றியிருப்பதை நேரில் கண்டுள்ளேன். இவையாவும் வீரமாகாளி அம்பாள் போன்ற குலதெய்வங்களின் திருவருளே.

அம்பாள் திருவருளால் எதிர்காலத்தில் எம்மண் விடிவு பெற்று அறநெறியில் அனைவரும் வாழ வழிகாட்டவேண்டும் என்று வாழ்த்திப் பிரார்த்தித்து ஆசி கூறி அமைகின்றேன். □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வரலாற்றில் தடம் பதித்தோர்




மனேஜர் எஸ்.பொன்னுஸ்வாமி



ந.கிருஷ்ணசாமிக் குருக்கள்
(பொன்னுஸ்வாமிக் குருக்கள்)



ச.கணபதிப்பிள்ளை




பௌராணிகர் நமசிவாயம்



ம.க.முத்துக்குமாரு



க.மகேஸ்வரன்



கு.நகுலேஸ்வரன்



ந.சிவகாமசுந்தரி



சி.வைரவப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய வரலாறு



# சரசையில் கோவில் கொண்டருளும் ஸ்ரீ வீரமாகாளி

**ச. லலீசன்**

விரிவுரையாளர்,

கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

தென்மராட்சி சரசாலைப் பதியில் உள்ள கனகன்புளியடிச் சந்தி யாழ்ப் பாணத்தில் பிரசித்தமான ஓரிடம். ஐந்து சந்திகளைக் கொண்டதாக விளங் குவதே இதற்குப் பிரதான காரணம் கனகன்புளியடிச் சந்தியில் இருந்து மீசாலை செல்லும் பாதையில் 300 மீற்றர் தொலைவில் அமைந்து அருள்புரியும் அற்புத ஆலயந்தான் ஸ்ரீ விரமாகாளி அம்மன் கோவில்.

19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சரசையில் வாழ்ந்த கதிரவேலு என்ற காராளர் இறை சிந்தையுடவராக வாழ்ந்து நான்கு ஆண் பிள்ளைகளையும் மூன்று பெண்பிள்ளைகளையும் பெற்றெடுத்தார். வாழ்வியலின் ஒரு கட்டத்தில் மனைவியை இழக்கும் சூழல் கதிரவேலருக்கு ஏற்பட்டது. கவலையை மறந்து மனவமைதி காணத் தனது சகோதரன் சுப்பிரமணியத்துடன் சிதம்பரத்திற்கான (தில்லை) தல யாத்திரையை மேற்கொண்டார். அங்கு சற்குரு ஒருவருடன் ஏற்பட்ட தொடர்பின் நிமித்தம் சிதம்பரத் தலத்தின் எல்லையில் அமைந்து அருள் பாலிக்கும் தில்லைக் காளியின் பெருமைகளை உணர்ந்தார். குருவின் உபதேசப்படி சிதம்பரத்திலிருந்து ஊர் திரும்பும் போது தில்லைக் காளியின் திருவுரு ஒன்றையும் எடுத்து வந்தார். சரசையூரின் தெற்கு எல்லையில் இலந்தைத்திடல் என்ற புண்ணிய பூமியில் பிரதிட்டை செய்து ஆதரிக்கத் தொடங்கினார்.

கதிரவேலர் இயற்கையெய்த அவர் வழித் தோன்றல்களும் உறவுகளும் கோவிலைப் பராமரித்தனர். ஆடிப்பூரம், நவராத்திரி, தைப்பொங்கல், வருடப் பிறப்பு முதலிய விசேட நாட்களில் பூசை நியமங்களை வீர சைவர்கள் மேற்கொள்ள அவர்கள் வழிவகுத்தனர்.

## முதலாவது மஹாகும்பாபிஷேகம்

கதிரவேலு, சிவகுரு, வேதவனம், சங்கரப்பிள்ளை என ஆலயத்தைப் பேணும் பொறுப்புக் கைமாறிச் சென்றது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆலய முகாமைப் பொறுப்பு சங்கரப் பிள்ளையின் மைந்தன் பொன்னுஸ்வாமியிடம் சேர்ந்தது. மலாயாவில் அரசுத்துறையில் பணியாற்றிய பொன்னுஸ்வாமி தனது உத்தியோக வருமானத்தில் இருந்தும் கொடை வள்ளல்களின் உதவியுடனும் கோவிற் திருப்பணிகளிற் கணிசமானவற்றை நிறைவேற்றினார். மைத்துனர் கணபதிப்பிள்ளை, ஒன்று விட்ட சகோதரனாகிய பௌராணிகர் நமசிவாயம் ஆகியோரது உதவியுடன் கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம், சபா மண்டபம், சிற்பங்களுடன் கூடிய கண்கவர் ஸ்தூபி, தீர்த்தக்கிணறு என்பவற்றை மலாயாவில் இருந்தவாறே சமர்ப்பித்தார். இதன் பயனாய் அன்னை வீரமாகாளி அம்பாளுக்கு 1927 ஆம் ஆண்டளவில் முதலாவது திருக்குட முழுக்குப் பெருவிழா நிகழ்ந்தது. கும்பாபிஷேகத்தின் பின்னர் பூசைக்கிரமங்களைச் சிவப்பிராமணர்கள் மேற்கொள்ளத் தொடங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோவிலுக்குத் தனித்துவமான கண்டாமணி

தென்மராட்சியில் சரசையூர்க் காளிகோவில் மணி விசேடமானது. மலாயாவில் உள்ள கிறிஸ்தவ ஆலயம் ஒன்றிற்காக லண்டனில் தயாரிக்கப்பட்ட கண்டாமணி விதிவசத்தால் சரசைப் பதியை வந்தடையும் பாக்கியம் பெற்றது. இங்கிலாந்தின் Gillett Johnston Croyoon நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இந்த மணி 1935ஆம் ஆண்டில் வைரக்கல்லால் நிர்மாணிக்கப்பட்ட உயர்ந்த மணிக் கோபுரத்தில் நிறுவப்பட்டது. அதிகாலை யில் நிசப்தவேளைகளில் ஒலிக்கும் வெண்கலமணியின் நாதம் இன்றும் மூன்று மைல்தொலைவில் உள்ள சாவகச்சேரி நகர்வரை சென்றடைகிறது.

## இரண்டு பொன்னுஸ்வாமிகள்

1940 ஆம் ஆண்டளவில் சிவஸ்ரீ ந. கிருஷ்ணசாமிக்குருக்கள் என்ற பொன்னு ஸ்வாமிக்குருக்கள் ஆலயப் பூசைப் பொறுப்புக்களை ஏற்றார். வேத, ஆகம, புராண இலக்கியங்களில் திறன் பெற்ற வராக இவர் திகழ்ந்தார். நவராத்திரி பூசையின்போது ஸ்ரீ சக்கர யந்திரபூசை செய்யும் வழக்கத்தை ஆரம்பித்தார். நாளாக நாளாக அடியவர்கள் அன்னை யின் அருள் மழையால் ஈர்க்கப்பட்டனர். அதிக பக்தர்கள் ஆலயத்தை நாடத் தொடங்கினர். 1948இல் ஆலய பரிபால கராகத் திகழ்ந்த பொன்னுஸ்வாமியும் மலாயாவில் இருந்து சரசைக்கு வந்து மீள்குடியேறினார். குருக்கள் பொன்னுஸ் வாமியின் வேதபாராயணத்திலும் பரி பாலகர் பொன்னுஸ்வாமியின் திராவிட கான மழையிலும் ஆலயத்தில் அருள் வெள்ளம் கரைபுரண்டோடியது. ஆலயத் தில் இடம்பெற்ற புராணபடன நிகழ்வில் பங்கேற்கவும் பயன்கேட்கவும் அயல் ஊர்களில் இருந்தெல்லாம் பக்தர்கள் ஆலயத்தை நோக்கிப் படையெடுத்தனர். வருடத்தில் ஒருமுறை நிகழும் மானம்புத் திருவிழாவைக் காணப்பலரும் ஆல யத்தை நாடினர்.

## விசேடம் பெற்ற புராண படன நிகழ்வு

தென்மராட்சியில் புராண படன விற்பன்னர்களாகத் திகழ்ந்த பலர் சரசாலைப் பதியைச் சேர்ந்தவர்கள். கந்த புராணம், திருவாதவூரடிகள், புராணம், சிவராத்திரி புராணம் என்பன இங்கு படிக்கப்பட்டுப் பயன் சொல்லப்பட்டதாக அறியமுடிகின்றது. தர்மகர்த்தா பொன் னுஸ்வாமியின் தம்பியார் நமசிவாயம் தலைமையில் புராணபடனம் இடம் பெற்றுவந்தது. குருக்கள் பொன் னுஸ்வாமி, மனேஜர் பொன்னுஸ்வாமி, செல்லையா உபாத்தியாயர், முத்துக் குமாரு உபாத்தியாயர், கணபதிப்பிள்ளை, வைத்திலிங்கம், சோமசுந்தரம், வைரவிப் பிள்ளை உபாத்தியாயர் ஆகியோர் வாசினைகாரராகவும் பயன்சொல்வோ ராகவும் செயற்பட்டனர். காலப்போக்கில் திருவெம்பாவைக் காலத்தில் திருவாத வூரடிகள் புராணம் மாத்திரம் படிக்கப் படலாயிற்று. க.அருள்மொழித்தேவன், செ.சுப்பிரமணியம் என்போர் வாசினை காரராகச் செயற்பட்டனர். க. முத்துக் குமாரு உபாத்தியாயர், சி.வைரவிப் பிள்ளை உபாத்தியாயர் ஆகியோரால் ச.லலீசனும் இத்துறைக்குள் ஈடுபடுத்தப் பட்டார். 2000 ஆம் ஆண்டில் சரசாலைக் கிராமம் சந்தித்த பாரிய இடப்பெயர்வைத் தொடர்ந்து புராணபடன மரபும் கைவிடப் பட்டது.

### சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்களின் பொற்காலம்

சிவஸ்ரீ பொன்னுஸ்வாமி குருக் கள் தனக்குப் பின்னான பூசைப் பொறுப்புக்களைத் தனது மருகரான சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக்குருக்களிடம் கையளித்தார். திருக்கணித பஞ்சாங்கக் கணிதராகவும் வேதாகம சோதிட வல்லுநராகவும் திகழும் இவர் 1962 இல் குருப்பட்டம் தரித்துப் பூசைப் பொறுப்புக் களை ஏற்றுக்கொண்டார். 1974 இல் பரிபாலகர் பொன்னுஸ்வாமி காலமாகி யதைத் தொடர்ந்து அவரது மருகனார் கு.நகுலேஸ்வரன் முகாமைப் பொறுப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை ஏற்றுக்கொண்டார். தனது மனைவி சிவகாமசுந்தரியின் பேராதரவுடன் கோயிலைப் பரிபாலித்தார்.

சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள் தனது சொந்தக் கோவிலாகக் கருதிச் செயற்படுமளவிற்கு ஆலய பரிபாலகர் கு. நகுலேஸ்வரன் குடும்பத்தினர் அவருடன் நல்லுறவைப் பேணினார். இதன் பயனாக திருப்பணிகளை நிறைவேற்றுவதற்குரிய உபயகாரர்களைக் குருக்கள் கண்டறிந்து செயலுருக் கொடுத்தார். குருக்களின் காலம் ஆலய வளர்ச்சியில் பொற்காலம் என்றால் மிகைப்படாது.

## இரண்டாவது மஹாகும்பாபிஷேகம்

வீரமாகாளி அன்னைக்கு இரண்டாவது கும்பாபிஷேகத்தை நிறைவேற்றும் சூழல் 1980களில் கனிந்தது. 1981 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு பிள்ளையார் கோவில், வசந்த மண்டபம், வைரவர் கோவில், யாகசாலை, மடைப்பள்ளி, களஞ்சியம் என்பன புதிதாக நிர்மாணிக்கப்பட்டன. 1985 யூலை 04 ஆம் நாள் திருவோண நட்சத்திர நாளில் இரண்டாவது திருக்குடமுழுக்குப் பெருவிழா சிவஸ்ரீ. சி. சிதம்பரநாதக் குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. அன்று தொடக்கம் காலை மாலை என இருகாலப் பூசைகள் இடம்பெறத் தொடங்கின. திருக்குடமுழுக்குப் பெருவிழாக் கண்ட ஆனிமாதத் திருவோண நட்சத்திர நாளை நிறைவு நாளாகக் கொண்டு அலங்கார உற்சவமும் இடம்பெறத் தொடங்கியது. ஆலயத் திருவிழாக்களில் பங்கேற்கும் அடியவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கத் தொடங்கியது.

காளிகோவிலில் இடம்பெறும் சிவராத்திரிக் கலை நிகழ்வுகளும் பிரபலமடையத் தொடங்கிற்று. கலை நிகழ்வுகளைக்காண தென்மராட்சியின் பலபாகங்களில் இருந்தும் அடியவர்கள் படையெடுத்தனர்.

## ஆலயத் தொண்டர் சபை

ஆலயத்துடன் ஆர்வமுற்றுச் செயற்படும் இளைஞர்களை உள்வாங்கி 1990 இல் ஆலயத் தொண்டர் சபை அமைக்கப்பட்டது. 2000 ஆம் ஆண்டில் இடம்பெற்ற தென்மராட்சி இடப்பெயர்வு வரை ஆலயத்தின் பெரும்பாலன செயற்பாடுகள் தொண்டர் சபையினராலேயே முன்னெடுக்கப்பட்டன. இதன் காப்பாளர்களாக சிதம்பரநாதக்குருக்கள், வைரவிப்பிள்ளை உபாத்தியாயர் ஆகியோரும் தலைவராக ச.லலீசன், செயலாளராக வை. விஜயகுமாரன், பொருளாளராக ப.றமேஸ் உறுப்பினர்களாக அ. புரந்தரன், அ.புவனன், க.தெய்வீகநாதன், வே.கதிரேசன், இ.பாலச்சந்திரன், மு.ஜெயரத்தினம், ந.ஸ்ரீதரன், வை.நந்தகுமாரன், இ.ராஜ்குமார், இ.நிசாந்தன், சி.செல்வமயூரன் ஆகியோரும் செயற்பட்டனர்.

## பூசைப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட மைந்தர்

சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக்குருக்களுடன் சேர்ந்து பூசைப் பணிகளில் பங்கேற்ற அவரது மைந்தர் சிவஸ்ரீ சி. கிருபாகரக்குருக்கள் 1998 இல் குருப்பட்டாபிஷேகம் பெற்று ஆலயக் குருத்துவப் பணிகளை மேற்கொள்ளத் தொடங்கினார். நித்திய பூசைகள் பெரும்பாலும் கிருபாகரக்குருக்களால் மேற்கொள்ளப்படலாயின.

## மூன்றாவது மஹா கும்பாபிஷேகம்

ஆலய உட்பிரகாரத்தைச் சூழவும் கூரை அமைக்கப்பட்டு சீமெந்தினால் நில வேலை நிறைவேற்றப்பட்டு 01.07.1999 இல் ஆனிமாத திருவோண நட்சத்திர நாளில் திருக்குடமுழுக்குப் பெருவிழா இடம்பெற்றது. இது ஆலய வரலாற்றில் இடம்பெற்ற மூன்றாவது கும்பாபிஷேக நிகழ்வாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பரிபாலனசபை அமைப்பும் மஹோற்சவ ஆரம்பமும்

2000 இல் நிகழ்ந்த தென்மராட்சி இடப்பெயர்வு சரசையூரைப் பெரிதும் பாதித்தது. படிப்படியாக இடம்பெற்ற சரசையூரரின் மீள் குடியமர்வைத் தொடர்ந்து ஆலய வளர்ச்சியில் (அதிபர்) வை.விஜயகுமாரன் அதிக அக்கறை கொண்டார். இவரைச் செயலாளராகக் கொண்டு 2002 இல் ஆலயப் பரிபாலன சபை அமைக்கப்பட்டது.

இறைவியின் திருவருள் 2003 இல் கொடித்தம்பம் நிர்மாணிக்கப்பட்டு மகோற்சவம் இடம்பெறக் கூடிய வாய்ப்பினை ஏற்படுத்தியது. ஆனி மாதத் திருவோண நட்சத்திரத்தை நிறைவு நாளாகக் கொண்டு பத்து நாட்கள் மகோற்சவம் இடம்பெறத் தொடங்கியது.

### நான்காவது மஹாகும்பாபிஷேகம்

பரிபாலன சபைச் செயலரின் பேரார்வத்தாலும் அம்பிகையின் திருவருளாலும் ஆலயத்தில் மூன்று தளங்களில் இராஜகோபுரம் நிர்மாணிக்கப்பட்டது. இவ்வமைப்பு வேலைகள் இடம்பெறும் சூழலில் 01.02.2013 இல் பாலஸ்தாபனம் இடம்பெற்றது. மிகக் குறுகிய காலத்துள் தில்லைக் காளிக்கான தோரண வாயில், கோபுர வாயில் முகப்பு வில் மண்டபம் என்பன அமைக்கப்பட்டன. இதன் பயனாய் அன்னையின் திருவருள் மேலிட 18.03.2013 காலை 10.17 மணிக்கு திருக்குடமுழுக்குப் பெருவிழா இடம் பெற்றது. ஆலய வரலாற்றில் மூன்று மஹா கும்பாபிஷேகங்களை நிறை வேற்றும் பெருவாய்ப்பும் சிவஸ்ரீ சி.சிதம்பர நாதக்குருக்களுக்குக் கைகூடியது.

### கனவில் வரும் கிழவி

தன்னை நாடுபவர்களுக்கெல்லாம் நல்வரம் நல்குபவளாக ஸ்ரீ வீரமா காளி அன்னை திகழ்கின்றாள்.

"யாதுமாகி நின்றாய் காளி

எங்கும் நீ நிறைந்தாய்

தீது நன்மை எல்லாம்

காளி தெய்வ லீலை அன்றோ"


என்ற பாரதியார் வாக்கு காளி தேவியின் கருணையை நாடும் அடியவர்களை ஆற்றுப்படுத்தும் அருமருந்தன்ன வாக்காக விளங்குகின்றது.

எங்கள் கனவில் வெள்ளைச் சேலை உடுத்த கிழவி வந்தாள். இப்படியெல்லாம் கூறினாள், வழிப்படுத்தினாள் எனக் கூறும் பக்தர்கள் பலரைக் கண்டிருக்கின்றேன். கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் கூட இவ்வருட்திறத்தால் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளனர்.

2000 ஆம் ஆண்டில் மக்கள் இடம்பெயர்ந்து சென்ற நிலையில் ஏவப்பட்ட ஷெல் ஒன்று பிள்ளையார் வாசலின் முன் வீழ்ந்தது. சீமெந்துத் தரையில் வீழ்ந்தும் அந்த ஏவுகணை வெடிக்கவில்லை. இதுவும் அன்னையின் அருட்சக்தியின் வெளிப்பாடாகும். இக்கணை கூரையைப் பிளந்த எச்சங்கள் இன்றும் உள்ளன.

சரசைப் பதியில் கோயில் கொண்டு வரமருளும் அம்பிகை, தன்னை மெய்யன்போடு பணியும் யாவரையும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிப்படுத்துவாள். □


[1985 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கும்பாபிஷேக மலரில் திரு ம.க. முத்துக்குமாரு உபாத்தியாயர் எழுதிய தல வரலாற்றைத் தழுவி எழுதப்பட்டது]






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரிதள இராஜகோபுர வளர்ச்சி 2011 - 2013





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆலய கோபுரம் வளர்ந்த வரலாறு

**வை. விஜயகுமாரன்**
அதிபர்,
யா/வரணி சைவப்பிரகாச வித்தியாலயம்.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்பார்கள். தூலலிங்கம் என்று சிறப்பிக்கப்படுகின்ற கோபுரமானது ஆலயத்திற்கு வருகைதரும் அடியவர்களிற்கு முதலில் காட்சி கொடுப்பதோடு மட்டுமல்லாது முதலில் வழிபாட்டுக்குரிய ஒன்றாகவும் முதன்மை பெறுகிறது.

எமது ஆலயத்தில் கோபுரத்தை அமைக்க வேண்டுமென்ற எண்ணம் பொன்னுஸ்வாமி அவர்களின் சிந்தையில் 1960 இல் தோன்றியது. அதற்கான அத்திபாரப் பணி வேலைகளை அவர் 1960 இன் நடுப்பகுதியில் (1965) நிறைவு செய்திருந்தார். இவ் வேலைகளை தலைமைப் பணியாளராக இருந்து பணியாற்றியவர். அமரர் மு. அருணாசலம் என்பதும் குறிப்பிடத்தக்கது

1990 களின் ஆரம்பத்தில் கோபுரத்தை நிர்மாணிக்க திரு. பொன் கனகசபை (ஆசிரியர் ) குடும்பம் முன் வந்து இதற்கு முன்னாயத்தமாக வியாழவரி வைரக்கல் வரையான DR. சிவசுப்பிரமணியம் அவர்களின் அனுசரனையில் வேலைக்கு வேண்டிய கற்களில் கணிசமானவற்றை ஆலய முன்றலில் களஞ்சியப்படுத்தினார்கள். இந்தக் கற்களை ஆலயத்திற்கு கொண்டு சேர்க்கும் பணியில் இலவசமாக திரு பொ. தர்மலிங்கம் தனது உழவு இயந்திரம் மூலம் உறுதுணைபுரிந்தார். இருப்பினும் நாட்டில் தோன்றிய அசாதாரண சூழ்நிலை காரணமாக கோபுரத்திருப்பணியை முன்னெடுக்க முடியவில்லை.

அபிராமிப்பட்டருக்கு அருளுவதற்காக அம்பிகை தனது காதணியை வானிலே வீச பூரண அமாவாசையானது அன்று பௌர்ணமியாகத் காட்சியளித்தது. அதே போன்று கோபுரத் திருப்பணியில் இருந்த இருள் நிலை நீங்கி ஒளி பெருக வழி சமைத்தவர் திரு. கந்தசாமி திருப்பதியம்மா தம்பதியினரின் புதல்வன் திரு.க.சந்திரன் ஆவார். 2003ஆம் ஆண்டின் இறுதியில் அவரின் ஆலய வருகையோடு ஓர் திருப்பம் ஏற்பட்டது. அவர் தானாகவே ஆலயக் கோபுரத்தை நிர்மாணிக்க வேண்டுமென உளம் கொண்டு இவ் உன்னத பணிபற்றிய விபரங்களை கேட்டறிந்து கோபுரத்தை நிர்மாணிக்க எண்ணினார்.

அவர் 2010–ஆம் ஆண்டு வியாழவரிவரையான வைரக்கல் வேலைக்கான முதலாம் கட்ட திருப்பணிக்கான பணத்தையும் லண்டனில் இருந்து அனுப்பி வைத்தார். 15–06–2011 காலை சுபவேளையில் வேலைகள் ஆரம்பமாயின. முதலாம் கட்ட வேலைகள் 2011 இன் இறுதியில் முடிவுற இரண்டாம் கட்ட வேலைகள் 2012 இல் ஆரம்பமாயின. 2013.03.18 கும்பாபிஷேகத்திற்கு முன்பு அனைத்துப் பணிகளும் சிறப்பாக ஏறக்குறைய 4.5 மில்லியன் L.K.R செலவில் நிறைவுற்றன.

இக் கோபுரத்திருப்பணி வலுப்பெற பல வழிகள் திரு. பொ. தர்மலிங்கம், திரு. அ. பிறேமதாஸ், திரு.த. சுலோஜன் , திரு. கு. மதனகுமார், ஆகியோர் உறுதுணை புரிந்திருக்கிறார்கள் என்னோடு இணைந்து பணியாற்றிய இவர்களின் பணியும் பாராட்டத்தக்கது.

இந்த நிறைவான கோபுரத் திருப்பணியின் கோபுரக்குடமுழுக்கு விழாவில் திரு. கந்தசாமி திருப்பதியம்மா தம்பதிகளின் புதல்வன் திரு. மனோகரன் அவர்கள் நேரில் பங்கேற்று குடமுழுக்கு கிரியைகள் இயற்றிய அந்தணப் பெருமக்களின் கௌரவிப்பு மற்றும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அந்தநாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே...

**ச. லலீசன்**

**சரசாலை தெற்கு இந்து இளைஞர் திருவிழா**

சரசாலைக் காளி கோவில் என்றால் நவராத்திரி விழாவும் அதன் நிறைவில் இடம்பெறும் மானம்பு உற்சவமும் தான் எல்லோரது மனக்கண் முன்னும் தோன்றும். நான் சிறுவனாக இருந்த காலத்தில் காளி கோவிலில் நான் அறிந்த ஒரே பெருந்திருவிழா மானம்பு உற்சவம் தான். அலங்கார உற்சவம் ஆரம்பிக்கப்பட முன்னர் வருடத்தில் ஒரு முறை தான் காளியன்னை வீதிவலம் வருவாள். வெளிவீதி வலம் மட்டுவில் நடராசாவின் ரக்ரரில் இடம்பெறுவதுதான் வழக்கம்.

அந்நாள்களில் இடம்பெற்ற நவராத்திரி உபயங்களில் ஒன்பது நாள்கள் யந்திர பூசையுடன் வழிபாடு இடம்பெற்றுப் பத்தாம் நாள் மாலை மானம்பு இடம்பெறும். இவ் உற்சவ உபயம் சரசாலை தெற்கு இந்து இளைஞர்களுக்குரியது. ச.ஞானலிங்கம் மாஸ்ரர், சங்கபாணி, CTB செல்லத்துரை, ஆனந்தன், கிளி, யோகன், மகேஸ்வரன், திருப்பதி மகேஸ்வரன், சிவம் முதலிய அக்கால இளைஞர்கள் ஆலயச் செயற்பாடுகளில் முன்னின்று உழைத்தனர்.

வாழைவெட்டுத் திருவிழாவில் குருக்கள் மகிடாசுரமர்த்தினியாகத் தன்னைப் பாவனை செய்து வாளைச் சுழற்றியபடி நர்த்தனம் மேற்கொண்டு வாழை வெட்டும் காட்சி இங்குள்ள எந்த ஆலயத்திலும் காணமுடியாதது. பஞ்சாபிகேசன், நாகேந்திரன் குழுவினர் தில்லானா மோகானாம்பாள் படத்தில் இடம்பெற்ற மேலைத்தேய மோடியை இசைப்பர். அதற்கேற்றாற்போல் குருக்களின் வாள்வீச்சும் அங்க அசைவுகளும் இடம்பெறும். வாழைவெட்டுத் திருவிழாவிற்குரிய வாள் தீட்டும் பொறுப்பு சங்கபாணி அண்ணருக்குரியது. அது அவருக்கு அரைநாள் வேலை. வெளிக்கிணற்றுக் கட்டுத்தான் தீட்டுக்கல். 1984 ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் இடம்பெறுவதற்கு முன்னர் மக்கள் திரளும் ஒரே திருவிழாவும் அதுதான் என்ற படியால் வாள்தீட்டவும் நீண்ட நேரத்தை எடுத்துக்கொள்வார்.

கும்பாபிஷேகத்தின் பின்னர் இத் திருவிழா மேலும் மெருகுற்றது. சின்னமணி அல்லது ஸ்ரீதேவி ஐயர் வில்லுப்பாட்டு அருணா இசைக்குழு என திருவிழா களைகட்டியது.

தென்மராட்சியில் அதிக இளைஞர்களைக் காணவேண்டுமா? சரசாலைக்குச்செல்லுங்கள் என்ற நிலைமை இருந்தது ஒருகாலம். 1983 இல் நிகழ்ந்த இனக்கலவரத்தின் பின்னான புலப்பெயர்வால் ஒரு தொகுதியினர் மேற்குலகிற்குப் பறந்தனர். இதைவிடத் தாக்கத்தை ஏற்படுத்திய சம்பவம் ஒன்று பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். அது இந்தியப் படையினர் காலத்தில் ஏற்பட்ட நெருக்கீடாகும். இதன் பிரதிபலிப்பு இங்கு இனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழமுடியாது என்ற முடிவைப் பலரும் எடுக்க வைத்தது. ஊர் இளைஞர்களின் தொகை திடீரெனக் குறைந்தது. இளைஞர் திருவிழாவும் நின்றுபோனது.

## கூட்டுப்பிரார்த்தனை

1984 இல் இடம்பெற்ற கும்பாபிஷேகம்தான் ஆலயச் செயற்பாடுகளில் ஒரு திருப்புமுனை என நினைக்கின்றேன். சி.வைரவிப்பிள்ளை உபாத்தியாயர் தலைமையில் வெள்ளிக்கிழமைகளில் இடம்பெறும் கூட்டுப் பிரார்த்தனைகளை இன்று நினைத்தாலும் மெய்யுருகும். அனேகமாகப் பிரார்த்தனை முடியுந்தறுவாயில் முத்துக்குமாரு உபாத்தியாயரும் வந்துவிடுவார். 'ஆதித்தன் அம்புலி.." என்ற அபிராமி அந்தாதிப் பாடல் அவருக்குச் சொந்தமானது. இது கூட்டுப் பிரார்த்தனைச் சபையாக உருப்பெற்றது. வெள்ளிக்கிழமைகளில் அவல், கடலை எனப் பிரசாத ஏற்பாடு என்னைச் சார்ந்தது. சிதம்பரநாதக்குருக்களின் மேலான ஆர்வமும் ஒத்துழைப்பும் வழிகாட்டலும் எல்லாம் நல்லபடியே அமைய வகை செய்தன.

வெள்ளிக்கிழமைப் பூசைக்கு அதிகளவில் பக்தர்கள் வருகைதரத் தொடங்கினர். வை. சிவகுமாரன் குருக்களுக்கு உதவியாகப் பலகருமங்களையும் ஆற்றிப் பூசைக் கிரமங்கள் இடம்பெற உதவுவார்.

பிரார்த்தனை முடிவில் நற்சிந்தனை இடம்பெறும். பெரும்பாலும் சிறுவர்கள்தான் இதில் பங்கேற்பர். அறிமுகவுரை செய்து நான் ஆரம்பித்து வைப்பேன். நிறைவில் பொழிப்புரை கூறி வைரவிப்பிள்ளை உபாத்தியாயரும் முத்துக்குமாரு உபாத்தியாயரும் நிறைவு செய்வர். இது எனது மேடைத்தமிழுக்கான களமாகவும் அமைந்தது. நற்சிந்தனை கூறவேண்டியவர் வராதவிடத்து இதற்கான பதிலீடும் பெரும்பாலும் நானாகவே இருப்பேன்.

## தொண்டர்பணி

1999 இற்கு முன்னர் உள் வீதிப்பிரகாரத்தில் சீமெந்து நிலம் அமைக்கப்படவில்லை. சிவராத்திரி, அலங்கார உற்சவம், நவராத்திரி உற்சவங்களுக்கு முன்னர் கோவிலைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் புல்லுச் செருக்கும் செயற்பாடு இடம்பெறும். இதில் தொண்டர்கள் மும்முரமாக ஈடுபடுவர். சிவகுமாரன், விஜயன், நந்தன், தெய்வீகன், பப்பி, றமேஷ், முகுந்தன், புரந்தரன், புவனன், கதிரேஸ், முரளி, நிசாந்தன், தயா, ஜெயரத்தினம் எனக் கோவிலுக்குத் தொண்டுசெய்யும் இளைஞர்கள் முழுவீச்சுடன் பங்கேற்பர்.

## அலங்கார உற்சவம்

அலங்கார உற்சவ ஆரம்ப காலங்களில் ஒரு சிறிய சகடையில் அம்பிகையை வைத்து அலங்கரித்து உலாவருவது வழக்கம். ஸ்ரீதரன், கதிரேசு முதலியோர் இதன் அலங்காரத்தில் அதிக அக்கறை செலுத்துவர். செவ்விளநீர், தென்னம்பாளை முதலிய இயற்கைப் பொருள்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட அலங்காரங்கள் அருமையாக இருந்தன.

## சிவராத்திரி

காளிகோவில் சிவராத்திரியின் போது இரவு முழுவதும் நித்திரை விழிப்புக்காக நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. இதனால் சிவராத்திரிக்கும் பலர் ஆலயத்தை நாடினர். 1987ஆம் ஆண்டில் இருந்து 1995ஆம் ஆண்டுவரை சிவராத்திரி விழாவின்போது பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிடையே பொதறிவுப்போட்டி இடம் பெறும். மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், மட்டுவில் மகா வித்தியாலயம், சரசாலை கலைமகள் 'கல்வி நிலையம் என்பன இதில் பங்கேற்றன.

1990 ஆம் ஆண்டில் சிவராத்திரி நிகழ்வைச் சிறப்பாக நடத்த வேண்டும் என அவாவிய இளைஞர்கள் நிதி திரட்டுவதற்கு ஒரு புதிய உபாயத்தைத் தேர்ந்தெடுத்தனர். தங்கள் தங்கள் வயல்களின் அறுவடையைச் சேர்ந்து மேற்கொள்வதென்றும் அருவி வெட்டலுக்கான கூலியைக் கணக்குப் பார்த்து அதை சிவராத்திரித் திருவிழா நடத்தச் செலவிடுவதெனவும் முடிவாகியது. தெய்வீகநாதன் தலைமையில் அரிவாள்களுடன் பலர் களமிறங்கினர். ஏறத்தாழ பதினைந்தாயிரம் ரூபா அருவிவெட்டு வருமானம். அந்த வருடச் சிவராத்திரித் திருவிழாவும் களைகட்டியது. அகோர வெயிலின் பிடியில் நின்று காய்ச்சல், தடிமன் என இலவச இணைப்புக்களையும் பலர் பெற்றுக்கொண்டனர்.

### பக்தர்கள் சஹஸ்ரநாம பாராயணம்

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீ லலிதா சகஸ்ரநாம ஸ்தோத்திரத்தைச் சாதாரண பக்தர்களும் படிக்கும் வழக்கத்தை சி. சிதம்பரநாதக்குருக்கள் எமது ஆலயத்தில் ஏற்படுத்தினார். 1990இல் தன்னுடைய செலவில் சமஸ்கிருத ஸ்தோத்திரத்தின் தமிழ் வடிவத்தை அச்சடித்துப் புத்தகமாக இலவசமாக எல்லோருக்கும் வழங்கினார். நவராத்திரி நாள்களில் காலை 6மணிக்கும் வெள்ளிக்கிழமைகளில் மாலை 5 மணிக்கும் ஸ்ரீலலிதா சகஸ்ர நாம ஸ்தோத்திரம் பக்திபூர்வமாகப் பாராயணம் செய்யப்பட வழிப்படுத்தினார். குருக்கள் ஐயாவும் மகனும் சேர்ந்து அடியவர்களுடன்கூடி அரைமணி நேரம் தாமும் பாராயணம் செய்தனர். ஆண்கள், பெண்கள் எனப் பத்துக்குக் குறையாதவர்கள் நல்ல உச்சரிப்புத்திறனுடன் ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமத்தைப் பாராயணம் செய்யக்கூடிய ஆற்றல் பெற்றனர்.

### சகடைத்திருப்பணி

1993ஆம் ஆண்டில் காளிகோவிலுக்கென வெளிவீதிச் சகடை ஒன்று நிர்மாணிக்க வேண்டும் எனத் தொண்டர்கள் விரும்பினர். இதற்கென அதிஷ்டலாபச் சீட்டு விற்பனை மேற்கொண்டு அதன் மூலம் பெறப்படும் வருவாயில் சகடை செய்வதெனத் திட்டம் வகுக்கப்பட்டது. தொண்டர்களின் அர்ப்பணிப்பு 43 ஆயிரம் ரூபாவை ஈட்டவைத்தது. அழகிய சகடை உருவாக்கமும் அதன் வெள்ளோட்டமும் சிறப்புற இடம்பெற்றன.

கோவில் தொண்டர்கள் அயலூர் ஆலயங்களில் தொண்டாற்றிய நிகழ்வுகளும் உள்ளன. 1992 இல் மட்டுவில் கல்வத்துச் சிவன் கோவில் புனரமைப்புப் பணிகளில் கா. சிவஞானசுந்தரம் அவர்களின் வேண்டுகோளை ஏற்று எங்கள் இளைஞர்களும் சேவைகளை நல்கினர்.

### திருவெம்பாவை வீதிபஜனை

1990 களில் இடம்பெற்ற திருவெம்பாவை வீதி பஜனையை மறக்க முடியாது. சரசாலைத் தெருக்களெங்கும் சிவமணம் கமழும் திருவாசகத் தேனாறு பாய்ந்தது என்றுதான் சொல்லவேண்டும். சரசாலை நுணுவில் பிள்ளையாரை மையப்படுத்தி சரசாலை இந்து இளைஞர் மன்றமும் வீதி பஜனையை நடத்தியது. அதிகாலை வீதிபஜனைக்கு இராசாம்பாள், வைரவிப் பிள்ளை ஆசிரியர் போன்ற பெரியவர்களில் ஒருவராவது பிரசன்னமாகியிருப்பர். மழை வெள்ளம் நிரம்பிய ஒழுங்கைகளில் சங்கொலி விண் கூவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கு ஊதுவதற்கென அதிகாலை வேளையில் விக்கியை விசேட விருந்தினராக அழைத்து வருவோம். விக்கியின் சங்கு, அதைவிடக் கோவிலில் இருந்த இரண்டு சங்குகள். சேமக்கலம் என நாதம் முழங்கும். அக்காலத்தில் தண்டவாளங்களை இலகுவாகப் பெறமுடிந்தது. தடியொன்றில் தண்டவாளம் கட்டி இரண்டுபேர் சுமக்க அதற்குச் சுட்டியலால் அடித்து ஒலி எழுப்பினோம். அது மின்சாரம் இல்லாத காலம். தயாவின் தொழினுட்ப பங்களிப்புடன் சைக்கிள் கரியரில் கார்பற்றறி ஒன்றைக் கட்டி அதன் மூலம் ரியூப்லைற் ஒன்றையும் இயக்கினோம். அதிகாலை 5.40இற்கெல்லாம் கோவில் திரும்பிவிடுவோம். காலை குருக்கள் ஐயாவின் கோப்பி எங்களுக்காகக் காத்திருக்கும். வீதி பஜனையுடன் காலை 6 மணிக்கு இடம் பெறும் திருவெம்பாவைப் பூசைக்கான அதிகளவான பக்தர்களும் வருகைதந்து விடுவர். இன்றும் கூட இவ்வீதிபஜனையைச் சிலாகித்துப் பேசும் பலரைக் காண்கிறேன்.

## குருக்களின் பிரசாதம்

காளிகோவில் பிரசாதத்திற்கும் ஒரு தனிச்சுவை உண்டு. தேன் கலந்த சாதம், வடை, மோதகம், புளிச்சாதம், முறுக்கு, சூசியம் முதலியவற்றில் சிதம்பரநாதக் குருக்களின் கைப்பக்குவம் வெளிப்பட்டது. கோவிலில் பணிசெய்பவர்களை ஊக்குவிப்பதற்காக அவர்கள் வீடு செல்லும்போது ஒரு பிரசாதப் பார்சலும் வழங்கப்படும். வெள்ளிக் கிழமைப் பூசையின்பின் பிரசாதம் வழங்கும் நியமத்தில் குருக்கள் ஐயாவும் பங்கு கொள்வார். அன்று நெய்யில் தயாரித்த கேசரி வழங்குவார். இப்படி குருக்களின் பிரசாதச் சுவையால் கோவிலுக்கு ஈர்க்கப்பட்ட பலர் இருக்கின்றனர்.

## பழையன கழிதலும்...

2000 ஆம் ஆண்டில் ஏற்பட்ட தென்மராட்சி இடப்பெயர்வு எம்மிற் பலரைப் பாதித்தது. தொடர்ந்து மீள் குடியமர்வு. 2003 இல் மகோற்சவ ஆரம்பம். நான் முற்குறிப்பிட்டோருள் பலர் இன்று வெவ்வேறு இடங்களில் வாழத்தலைப்பட்டனர். இது கால வோட்டத்தில் தவிர்க்கவியலாதது.

இன்று புதிதாய் ஓர் இளைஞர் அணி ஆலயத் தொண்டுகளில் தங்களை ஈடுபடுத்திநிற்கின்றது. மதன், சுலோஜன், கேதீஸ், சஜீ, குமரன், சுகிர்தன், பகீ, பகீந்தன், தாஸ் என இன்றுள்ள இளையோர் கருமங்களைத் தொடர்கின்றனர். ஆலயச் செயற்பாடுகள் இன்னும் புதுவீச்சுடன் புது மெருகுபெற்றுத் தொடர்கின்றன. அன்னையின் அருட்பார்வையும் பரந்து விரிகின்றது. □

மகாபாரதத்தில் துர்க்கையை வழிபாடு செய்த செய்தி இரு இடங்களிற் கூறப்படுகின்றது. பன்னீராண்டு வனவாசம் முடித்து ஓராண்டு அஞ்ஞாத வாசத்தை மேற்கொண்டு விராட நாட்டினுள்ளே புகும் வேளையில், தருமபுத்திரர் துர்க்கையை வேண்டுதல் செய்வது ஒரு செய்தி. பகவத்கீதை உபதேசிக்கப்படுமுன் யுத்த களத்தில் தங்களுக்கு வெற்றியையளிக்குமாறு அர்ச்சுனன் துர்க்கையை வேண்டுதல் செய்வது மற்றொரு காட்சியாகும். துர்க்கை, காளி எனவும், மகிஷாசுர மர்த்தினி எனவும் போற்றப்படுகின்றாள். போரில் வெற்றியை அருளும் தெய்வமாகப் பெண் தெய்வம் - சக்தி, போற்றப்பட்ட வரலாறுகள் சரித்திரத்தில் பலவுண்டு. சங்ககாலத் தமிழ் மக்கள் வெற்றித் தெய்வத்தைக் "கொற்றவை" எனப் போற்றினர். அத்தெய்வத்தைப் பாபிலோனியர் "அனாட்" என வழிபட்டனர். எகிப்தியர் துதித்த வெற்றிக்குரிய பெண் தெய்வம் "ஹாதர் செக்மேட்" என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருத்துவமரபில் பொன்விழாக் கண்ட

# சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக் குருக்கள்

**ச. லலீசன்**

விப்ர என்ற சொல் அந்தணரைக் குறிக்கும். சிரேஷ்ட என்ற சொல் உயர்ந்த என்ற பொருளைத் தரும். ஆக, விப்ர சிரேஷ்டர் என்ற சொல் உயர்வு மிக்க அந்தணாளர் என்ற பொருளைத் தரும். அச்சொல்லுக்கு பொருத்தமாக வயதிலும், அனுபவத்திலும், ஆற்றலிலும், அறிவிலும் சிறந்த இன்றும் வாழும் விரல் விட்டு எண்ணத்தக்க யாழ்ப்பாணத்து குருமார்கள் சிலருள் ஒருவர் சி.சிதம்பர நாதக்குருக்கள்.

**உத்யம ஸாஹஸம் தைர்யம் புத்தி சக்தி பராக்ரமம்**

**ஷடேதே யத்ர வர்த்தந்தே தத்ர தைவம் பிரசீததி**

என்கிறது நீதி சாஸ்திரம். அதாவது, முயற்சி, கெட்டித்தனம், தைர்யம், அறிவு, சக்தி, வீரம் என்ற ஆறும் யாரிடம் இருக்கிறதோ அவரிடம் தெய்வத் தன்மை பிரகாசிக்கும் என்பது அதன் பொருள். இப்பொருளுக்கு இலக்கணம் வகுத்துச் செயற்படுபவர் எங்கள் குருக்கள் அவர்கள்.

## பிறப்பு

'மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்துத் தீமை களையும் அன்னை காளி மேல் மந்திரஞ் சொல்லி பூசிக்கும் சிவாச்சார்ய சிம்மமாக திகழ்பவர் சிவஸ்ரீ.சி.சிதம்பரநாதக்குருக்கள். இந்தியாவின் குளிர்ச்சி மிகுந்த சேரதேசமான கேரள மாநிலத்தின் தலைநகரான திருவிதாங்கூர் இவரது பிறப்பிடம். அங்கே சிதம்பரஐயருக்கும் ஜானகி அம்மாளுக்கும் 18.12.1935 இல் மகனாகப் பிறந்த இவர் மிகச்சிறு வயதிலேயே அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் திருக்கணித பஞ்சாங்கக் கணிதராகத் திகழ்ந்த சி.சுப்பிரமணியக்குருக்களால் இங்கு அழைத்து வரப்பெற்றார். ஆக, அவரது வளர்ச்சி, வாழ்க்கை எல்லாம் யாழ்ப்பாணத்திற்கே உரியதாயிற்று.



## கல்வி

இளமைக் கல்வியை கல்வயல் சண்முகானந்த வித்தியாலயத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து இடைநிலைக் கல்வியை மட்டுவில் மகாவித்தியாலயத்திலும் உயர் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரி யிலும் கற்றார். கற்கும் காலங்களில் கணிதத்துறையில் அதிக ஈடுபாடு கொண் டார். அந்தண மரபுக்கிணங்க 12.06.1948 இல் இவரது உபநயனம் (பூணூல் சடங்கு) இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் புகழ் பெற்ற வியாகரண சிரோன்மணி சீதாராம சாஸ்திரிகளிடம் வேதங்களையும், ஆகமங்களையும் கற்றார்.

## இல்லறம்

வளரும் பயிரை முளையிலேயே தெரியுமன்றோ? குருக்கள் அவர்களின் திறமையையும் ஆற்றலையும் கண்டு ணர்ந்த காளிகோவிலின் பிரதம குருவா கிய பொன்னுஸ்வாமிக்குருக்கள் தனது மகளான இராஜேஸ்வரி அம்மாவை 18.05.1956இல் திருமணம் செய்து கொடுத் தார். 1962 பங்குனியில் பொன்னுஸ்வாமிக் குருக்கள் திடீரென அமரத்துவமுற்ற தைத் தொடர்ந்து கோவில் கருமங்களை நிறைவேற்ற வேண்டியதால் சிதம்பர நாதக்குருக்களைக் குருப்பட்டாபிஷேகம் மேற்கொள்ளுமாறு பலரும் வேண்டினர். இதன்பிரகாரம் 18.04.1962 இல் ஆச்சார்ய அபிஷேகம் (குருப்பட்டாபிஷேகம்) இடம் பெற்றது. சரசாலை காளிகோவிலின் பூசைப் பொறுப்புக்களையும் ஏற்றுக் கொண்டார். 1962 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் சரசாலை இலந்தைத் திடல் ஸ்ரீ வீரமாகாளி அம்பாளின் மெய் தீண்டிப் பக்தி பூர்வமாகப் பூசைப்பணி களை ஆரம்பித்தார்.

குருக்கள் தம்பதியர் இல்லற வாழ்வை ஓம்பி ஆறு ஆண் குழந்தை களையும் இரு பெண் குழந்தைகளையும் பெற்றெடுத்தனர். இவர்களுள் நான்கா வது மகன் கிருபாகரக்குருக்கள் தந்தை வழியில் குருப்பட்டாபிஷேகம் மேற் கொண்டு எமது ஆலயத்தின் நித்திய நைமித்திய கிரியைகளை ஆற்றி வரு கின்றார். இவருக்கு உதவியாக ஆறாவது மகன் குமரேஸ்வரசர்மா அவர்களும் குருத்துவம்சார் பணிகளை மேற்கொண்டு வருகின்றார்.

## குருத்துவம்

குருக்கள் அவர்கள் கல்வி கற்கும் காலத்திலேயே பஞ்சாங்க கணிதமும் பயின்று வந்தார். 19.08.1970 இல் திருக்கணித பஞ்சாங்கக் கணிதராக விளங்கிய சி.சுப்பிரமணிய ஐயர் சிவபத மடையவே அந்தப் பொறுப்பு சிதம்பர நாதக்குருக்களிடம் சேர்ந்தது. இன்றும் கணினியை இயக்கிப் பஞ்சாங்க கணிப்புக் களை மேற்கொள்ளும் இளைஞனாகவே குருக்கள் திகழ்கின்றார்.

விவாகம், புதுமனைப் பிரவேசம் முதலிய மங்கலகாரியங்களையும் தமது பல்வேறு பூர்வ, அபர கிரியைகளையும் குருக்கள் மூலம் நிறைவேற்றுவதில் தென்மராட்சி மக்கள் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளனர். இன்றுவரை பல்வேறு மஹா கும்பாபிஷேகங்களை நிறை வேற்றிய பெருமையும் குருக்கள் அவர் களைச் சாரும்.

சரசாலை இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமாகாளி ((1985, 1999, 2013) மீசாலை வெள்ளைமாவடிப்பிள்ளையார் (1984, 1998, 2010) சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் (1969, 1987) கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் (1988), புலோலி ஆலடிப் பிள்ளையார் (1991) குமரபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் கோவில் (1993) கல்வயல் புலுட்டையன் பிள்ளையார் (1997) வவுனியா சிந்தாமணி விநாயகர் (1989) வட்டக்கச்சி முருகன் (1996) ஆகிய ஆலயங்கள் பிரதிஷ்டா பிரதம குருவாகச் செயற்பட்டு மஹாகும்பாபிஷேகங்களை நிறைவேற்றிய திருக்கோவில்களில் குறிப்பிடத்தக்கனவாகும்.

மட்டுவில் வேரற்கேணி கந்த சுவாமி கோவில், கைதடி கயற்றசிட்டி கந்தசுவாமி கோவில், உசன் கந்தசுவாமி கோவில் ஆகிய ஆலயங்களின் மகோற் சவ குருவாகச் செயற்பட்டுள்ளார். இன்றும் மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார், சரசாலை ஸ்ரீவீரமாகாளி ஆகிய ஆலயங்களின் பிரதம மஹோற் சவ குருவாக மிக நீண்ட காலமாகச் செயற்படுகின்றார். ஸ்ரீவீரமாகாளி அம்பாள் ஆலயத்தில் குருக்கள் அவர்கள் குருத்துவப் பணிகளை ஆரம்பித்துத் தற்போது ஐம்பதாண்டுகள் கடந்து விட்டன.

## திருப்பணிகள் நிறைவேற...

சரசாலை ஸ்ரீவீரமாகாளி அம் பாள் ஆலயத்தைத் தனது சொந்தக் கோவிலாகக் கருதிப் பணிசெய்கிறார். இவரது காலத்தில் ஆலயத் திருப்பணிகள் உயர்நிலை பெற்றுள்ளன. அம்பிகையை நாடும் அடியவர் திருக்கூட்டமும் பெருகி யுள்ளது. 1985 ஆம் ஆண்டு மஹாகும்பாபி ஷேகத்தின்போது பிள்ளையார் கோவில், வசந்த மண்டபம், வைரவர் கோவில், யாகசாலை, மடைப்பள்ளி, களஞ்சியம், தண்ணீர்க் குழாய் வசதி, ஆலயச் சுற்றுக் கொட்டகையின் ஒரு பகுதி என்பவற்றை நிறைவேற்றவும், 1999 ஆம் ஆண்டு மஹா கும்பாபிஷேகத்தின்போது சுற்றுக் கொட்டகை பூரணத்துவம், நிலவேலை, குருக்கள் வசிப்பிடம் என்பவற்றை நிறை வேற்றவும் 2013 ஆம் ஆண்டு மஹாகும் பாபிஷேகத்தின்போது கோபுரம், வில்லு வடிவ மண்டபம், தில்லைக்காளித் தோரண வாயில் எனப் பல திருப்பணிகள் நிறைவேற்றவும் உபயகாரரைத் தேர்ந்தும் ஆலோசனைகள் நல்கியும் உதவினார். திருப்பணி வேலைகளில் தானும் பங்கேற்றார்.

## நூல்கள் ஆக்கம்

தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் என மூன்று மொழிகளில் ஆளுமை கொண்டவராதலால் பல நூல்களை ஆக்கி வெளியிட்டுள்ளார். இதற்கு வசதியாக திருக்கணித பதிப்பகத்தையும் நிறுவினார். ஸ்நபன மஞ்ஜரி என்ற சமஸ்கிருத நூலையும் சோதிடம் கற்போம், திருமணப் பொருத்தம் என்ற தமிழ் நூல்களையும் வெளியிட்டுள்ளார். திருக்கணித பஞ்சாங்கத்தைப் புலம்பெயர் தேசங்களுக்கு ஏற்ற நேரக் கணிப்பில் வெளியிடுகின்றார். சோதிட மலர் என்ற மாத சஞ்சிகையையும் வெளியிட்டார். ஸ்நபன மஞ்ஜரி என்ற நூல் வெளிவந்த காலம் வலிகாமத்தின் மிகப்பெரிய இடம்பெயர்வு நேர்ந்திருந்தது. அக்காலத் தின் தேவை கருதி குருக்கள் அவர்கள் வெளியிட்ட இந்நூல் பத்ததிகள், நூல் களை எல்லாம் விட்டு விட்டு தென்மராட் சியை நோக்கி ஓடி வந்த குருமார்கள் பல ருக்கும் ஒரு பொக்கிஷமாக விளங்கியது.

## வேதாகம சோதிட அறிவு மக்கள் மத்தியில் பரவவேண்டும் என்ற வேட்கை

தான் அறிந்த சோதிட நுட்பங் களை மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பதிலும் ஆர்வம் கொண்டிருக்கிறார். இதற்கென வீட்டில் அவ்வப்போது இலவச சோதிட வகுப்புக்களை நடத்தியுள்ளார். அவரது கிரியைகளின் போது சமஸ்கிருத ஸ்லோகங்களை மிகத்தெளிவான நடையிலும், சீராகவும், சொற்களை பிரித்தும், அழகாயும் கூறுவார். இந்த மந்திரம் எதற்காகக் கூறப்படுகின்றது. கிரியையின் பலன் என்ன என்பதை அடியவர்களுக்குச் சொல்லியவண்ணம் இருப்பார். தமிழகத்தில் சாதாரண மக்களும் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம பாராயணம் செய்கின்றனர். காளி கோவிலிலும் இந்நிலைமை ஏற்பட வேண்டும் என முயன்றார். 1990 ஆம் ஆண்டில் மேற்கொண்ட இம்முயற்சியில் கணிசமான அளவு வெற்றியும் கிட்டியது.

### கௌரவப் பட்டங்கள்

குருக்கள் அவர்களின் ஆளுமைத்திறத்தைக் கண்டு நயந்தவர்கள் கௌரவப் பட்டங்கள் வழங்கி அவரைக் கௌரவித்துள்ளனர். மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவிலின் சார்பில் வேதாகம சோதிட பூஷணம் என்ற பட்டம் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்களால் வழங்கப்பட்டது. இதே போல் சிவாச்சார்ய திலகம் என்ற பட்டம் சரசாலை வீரமாகாளி அம்பாள் ஆலயத்தின் சார்பில் பேராசிரியர் நா.சுப்பிரமணிய ஐயரால் வழங்கப்பட்டது. வட்டக்கச்சி முருகன் கோவிலால் சிவாகம பூஷணம் என்ற பட்டமும் லண்டன் சைவத்திருக் கோவில் ஒன்றியத்தால் வேதாகம வித்தகர் என்ற பட்டமும் வழங்கப்பட்டன. இலங்கை அரசு சோதிடத் துறை சார்ந்து கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவித்துள்ளது. அதனை கௌரவித்து தென்மராட்சி மக்களால் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் கௌரவிப்பு விழா நடத்தப்பட்டது.

**"அந்தணர் என்போர் அறவோர்மற்று எவ்வுயிர்க்கும்**

**செந்தண்மை பூண்டு ஒழுக லான்"**

என்ற வள்ளுவத்தைப் பொருத்திப் பார்க்கத் தக்க வகையில் வாழும் குருக்கள் தம்பதியர் அன்னை ஸ்ரீவீரமாகாளியின் திருவருளால் நீடு வாழப் பிரார்த்திக்கின்றோம். எங்கள் ஆலயத்தின் உயர்ச்சிக்கு உன்னத பணியாற்றிய பெருந்தகையை வரலாறு என்றும் ஏற்றிப் போற்றும்.

பல்துறை ஆளுமையும், பண்பும், அன்பும், அறிவும், ஜோதிட ஞானமும், வேத சிவாகமத்தெளிவும், பக்தியும், கொண்ட குருக்கள் அவர்களின் ஆசியும் வழிப்படுத்தலும் இன்னும் தொடர்ந்தும் நம் குருமார்களுக்கும், அடியவர்களுக்கும், சரசாலை வாழ் மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதே எமது பெருவிருப்பாகும். □

"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து" என்பது திருவாசகம். பூரண அன்பு, பூரண பொறுமை, பூரண தன்னலமறுப்பு, பூரண மன்னிக்கும் சுபாவம் என்பவற்றை நாம் தாய்மையிலேயே காணமுடியும். பரம் பொருளைப் பல்வேறு வடிவில் அடியார்கள் தியானித்து வழிபடுகின்றார்கள். பதியாக (கணவனாக), தாயாக, குழந்தையாக, தோழனாக, ஆண்டானாகப் பாவித்து பக்தி செலுத்துகின்றார்கள். இப்பக்தி நெறிகளுள் மிக நெருக்கமாக உளங்கலந்து உறவு கொண்டாட வாய்த்த நெறி தாயாகக் கருதி வழிபாடு செய்யும் மார்க்கமேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வரலாற்றுப் பதிவுகள்

*1927 -* கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், சபாமண்டபம், சிற்பங்களுடன்கூடிய கண்கவர் ஸ்தூபி , தீர்த்தக்கிணறு

*1935 -* மணிக்கோபுரம் - **திரு. S .பொன்னுச்சாமி**

*1974 -* ஆலயத்திற்கும் சரசாலைக்குமான மின்சார விநியோகம் எமது ஆலயத்தில் இருந்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

(காணி நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சின்

நிரந்தரச் செயலாளர் திரு. N. ஸ்ரீகாந்தா அவர்கள் ஆரம்பித்துவைத்தார்)

*1985 -* வசந்த மண்டபம் , வைரவர் கோயில், யாகசாலை, மடைப்பள்ளி, களஞ்சியம், முன் கொட்டகை, பிரதான தூபி ஆகிய திருப்பணிகளுக்கு

பெரும் நிதி உதவியோர் - **திரு. க.மு. சுந்தரேஸ்வரன்**

**திரு. த. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்**

ஏனைய பணிகளுக்கு அடியார்கள் உதவி வழங்கினர்

*1985-* மூலஸ்தானதூபி , ஸ்நபன மண்டப முகப்பு வேலை

- **திரு.பொ. கனகசபை குடும்பம்**

*1985 -* மின்னிணைப்பு வேலைகள் - **திரு. செ. மகேஸ்வரன்**

*1985 -* பிள்ளையார் கோவில் - **திரு. க. தர்மலிங்கம்**

*1992 -* தில்லைக்காளி வடக்கு நோக்கிய கோயில் - **திரு.பொன். கனசபை குடும்பம்**

தில்லைக்காளி பழையமண்டபம் - **திரு. வீ. கந்தசாமி**

*1993 -* குதிரை வாகனம் - **திரு. சி. கந்தையா கல்வியங்காடு**

*1993 -* வெளிவீதி சகடை பொது உபயம் - **ஆலய தொண்டர் சபை**

மின்னிணைப்பு வேலைகள் - **திரு. செ. மகேஸ்வரன்**

வெளி வீதி விஸ்தரிப்பு 01 பரப்பு காணி நன்கொடை - **திரு. இ. சந்திரமௌளீசன்**

*1999 -* குரு இல்லம்

*2002 -* உள்வீதிச்சகடை **திரு. ஐ. பத்மநாதன் குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2003 - கொடித்தம்பக் கலசம் திரு. செ. ஸ்ரீஸ்கந்தராசா

முதலாவது மஹோற்சவம்

2004 - ஆலய ஒலிபெருக்கிச் சாதனங்கள் - திரு. மா. தயாகரன்

மின் பிறப்பாக்கி (3.k.w.) திருமதி. கந்தசாமி திருப்பதியம்மா குடும்பம்

2005 - பொங்கல் மண்டபம் புனரமைப்பு

2008 - வெளிச்சகடைக்கொட்டகை (புனரமைப்பு)

2008 - மேற்கு ஆலய மதில் பூச்சு வேலை

2010 - நீர்த்தாங்கியும் நீரிணைப்பும்

சிம்மாசனம் - திரு. மதி

2011 - மின்னிணைப்புக்கள் நவீன மயமாக்கல் திட்டம் I

50 பரப்புக் காணி நன்கொடை திருமதி லலிதா ரவிதரன்

திருமதி பராசக்தி யோகராஜா

2012 - ஆலயத் தெற்குச் சுவர் பூச்சு வேலை, மதில் நிர்மாணம் ( வெளி வீதி கிழக்கு)

2013 - திரிதள இராஜகோபுரம் - திரு . கந்தசாமி திருப்பதியம்மா குடும்பம்

கோபுர முன் மண்டபம் - திரு. க. அருள்மொழித்தேவன் குடும்பம்

தில்லைக்காளி முன்மண்டப முகப்பு வேலை - திரு. ந. ஞானசம்பந்தன்

2013 - வெளிவீதி மின் இணைப்பு - திருமதி சி. மகேஸ்வரி (மோகன்)

குறிப்பு:- மேற்படி தகவல்களில் தவறுகள் இருப்பின் தயங்காது செயலாளரிடம் தெரிவிக்கவும். அவை அடுத்த பதிப்புக்களில் சீர்செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

## ஆலயத்தில் இடம்பெற்ற கும்பாபிஷேகங்கள்

| | | |
|---|---|---|
| 1927 | - | காளிதேவி பிரதிஸ்டையுடன் கூடிய கும்பாபிஷேகம் |
| 1985-07-04 | - | புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் |
| 1999-07-01 | - | புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் |
| 2002-08-27 | - | அந்தரீதப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் |
| 2013-03-18 | - | புனராவர்த்தனப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் நாட்டிலுள்ள தில்லைக் காளியம்மன் ஆலயம்


– சாந்த சொரூபம் மற்றும் உக்கிர சொரூபமாக உள்ள இரண்டு தேவியர் –

**சாந்திப்பிரியா**
தமிழ்நாடு

சிதம்பரத்தில் இரண்டு முக்கிய மான ஆலயங்கள் உள்ளன. அனைவரும் அறிந்தது சிதம்பரம் தில்லை நடராஜர் ஆலயமே. ஆனால் அந்த தில்லை நடராஜர் ஆலயத்துக்குச் செல்பவர்கள் அந்த ஆலயத்தில் இருந்து அரை கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தில்லை காளியம்மனையும் தரிசிக்காமல் வந்தால் தில்லை நடராஜரை தரிசித்த பலன் கிடைக்காது என்பதை அறிந்திருக்க வாய்ப்பில்லை. சிதம்பர ஆலயத்தில் இருந்து இடது புறமாகச் சென்று முதலில் வரும் இடது திருப்பத்தில் திரும்பி நேராகச் சென்றால் அந்த சாலையின் இறுதியில் தில்லைகாளியம்மன் ஆலயம் உள்ளது. அது மட்டும் அல்ல அந்த தில்லைக்காளி யம்மன் வரக்காரணமாக இருந்த இரண்டு முனிவர்களான 'ஆனந்தீஸ்வரர்' மற்றும் 'இளமையாக்கினார்' போன்றவர்களின் சமாதிகளும் அந்த ஊரில் எங்கோ உள்ளது என்றும், அங்கும் போய் அவர் களை தரிசிப்பது இன்னும் விசேஷம் என்று கூறுகிறார்கள். ஆனால் அந்த முனிவர்களின் சமாதி உள்ள இடம் எனக்கு கிடைக்கவில்லை. தில்லைக் காளியம்மன் ஆலயத்தின் வரலாறு மற்றும் மகிமைகள் என்ன? இனி படியுங்கள்.

சில காலத்துக்குப் பின்னால் நடக்க இருந்த ஒரு சம்பவத்தில் பார்வதியே வேறு அவதாரம் எடுத்து ஒரு அரக்கனை அழிக்க வேண்டும். அந்த அரக்கனை பார்வதியால் மட்டுமே அழிக்க முடியும் என்பது தேவ விதியாக இருந்தது. ஆகவே பார்வதி சிவபெரு மானை விட்டு பிரிந்து செல்லவில்லை என்றால் பார்வதி உக்ரக குணத்தைக் கொண்டு அந்த அவதாரத்தை எடுக்க முடியாது. மேலும் பார்வதி முன்னர் ஒரு கட்டத்தில் பெற்று இருந்த சாபத்தினால் சிவபெருமானை பிரிந்து சில காலம் வாழ வேண்டும். இவை அனைத்தையும் அந்த ஈசன் அறிந்து இருந்தார். ஆகவே அதற்காக அவர் ஒரு நாடகத்தை நடத்தத் துவங்கினார்.

அதற்கேற்ப ஒரு முறை தேவ லோகத்தில் சிவனுக்கும் பார்வதிக்கும் ஒரு வாக்குவாதம் ஏற்படுகின்றது. அது நீ பெரியவனா இல்லை நான் பெரியவளா எனத் துவங்கிய சண்டை சக்தி இல்லை யேல் சிவனும் இல்லை என பார்வதி வாதாடும் நிலைக்குப் போக கோபமுற்ற சிவபெருமான் பார்வதியை கோர உருவம் கொண்ட காளியாக மாறுமாறு சாபம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்து விடுகிறார். சிவனை விட்டுப் பிரிய மனமில்லாத பார்வதி அழுது புலம்பி தன்னை மன்னித்து விடுமாறு அவரை கேட்டுக் கொண்டபின் சாப விமோசனம் பெற்று மீண்டும் அவரை எப்படி அடைவது எனக்கேட்க அதற்கு சிவபெரு மான் கூறினார் "இன்னும் சிறிது காலத் தில் அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் போர் நடக்க உள்ளது. அந்த நேரத்தில் நீ இதே காளி உருவில் தேவர்களுக்காக போரிட்டு அசுரர்களை அழிப்பாய். அப்போது நீ தில்லை மரங்கள் சூழ்ந்த தில்லைக்கு வந்து என்னை நினைத்து தவம் இருக்க வேண்டும். அப்போது ஒரு கட்டத்தில் உன்னுடன் சேர்ந்து நடன மாடி உன்னை என்னுடன் மீண்டும் அழைத்துக் கொள்வேன்".

காலம் ஓடியது. தாரகாசுரன் என்ற அசுரன் தோன்றி தேவர்களை துன் புறுத்தி வரலானான். தேவர்களும் ரிஷி முனிவர்களும் மும்மூர்த்திகளிடம் சென்று அவன் தொல்லையில் இருந்து தம்மை காப்பாற்றுமாறு வேண்டிக் கொண்டனர். அவர்கள் அனைவரும் சேர்ந்து சிவபெருமானிடம் ஆலோசனை கேட்க அவர் காளி உருவில் இருந்த பார்வதியை அதற்கு அனுப்பினார். காளி உருவில் இருந்த பார்வதி யுத்தகளத்துக் குச் சென்றாள். தாரகாசூரனையும் அவன் சேனையையும் அழித்த பின் வெற்றி அடைந்தாள். ஆனால் அவனை வெற்றி கொண்டபின்னும் அவள் கோபம் அடங்கவில்லை. வெறியாட்டம் போல ஊழித்தாண்டவம் ஆடத்துவங்கினாள்.

தாரகாசுரன் அழிந்தாலும் முனி வர்களின் தொல்லை தொடர்ந்தது. அவர்கள் சிவபெருமானிடம் மீண்டும் சென்று வேண்டினார்கள். அனைவரும் சிவபெருமானையே மீண்டும் மீண்டும் தஞ்சம் அடைவது காளிக்குப் பிடிக்க வில்லை. அதனால் அவளுக்கு சிவ பெருமான் மீது கோபம் ஏற்பட்டது. அவரைவிட தானே பெரியவள் என முன்னர் கொண்டு இருந்த எண்ணம் இன்னமும் குறையவில்லை. வெறியும் அடங்கவில்லை. அவளுடைய உக்ரத்தி னால் அனைத்து முனிவர்களும் ரிஷிக ளும் சொல்லொணாத் துயருக்கு ஆளா கினார்கள்.

அந்த நேரத்தில் அங்கு இருந்த வியாக்கிரபாதர் மற்றும் பதஞ்சலி முனிவர்களின் வேண்டுகோளை ஏற்று சிவபெருமான் அவர்களுக்கு தில்லையில் திருநடனக் காட்சி தந்தார். அதை மெச்சி அனைவரும் அமர்ந்து இருந்த வேளை யில் காளி சிவனை நடனப் போட்டிக்கு அழைத்தாள். போட்டியில் யார் தோற்றா லும் அந்த ஊரின் எல்லைக்கு சென்று விட வேண்டும் என்பது நிபந்தனை. நடனம் தொடங்கியது. அனைத்து தேவர் களும் கடவுள்களும் இசை ஒலிகளை எழுப்ப காளி மற்றும் சிவபெருமானின் நடனப் போட்டி தொடர்ந்தது. வெற்றி தோல்வியை நிர்ணயிக்க முடியாமல் அனைவரும் திகைத்து நின்றபோது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் ஊர்த்துவத் தாண்டவம் என்பதை ஆடிக்காட்டினார். அதில் அவர் தனது காலால் கீழே விழுந்த குண்டலத்தை எடுத்து காலை மேலே தூக்கி தனது காதில் அணிந்து கொள்ள அதே ஊர்த்துவத் தாண்டவத்தை பெண்ணான காளியினால் செய்ய முடியாமல் நாணம் தடுத்தது. பெண்ணினால் எப்படி காலை மேலே தூக்கிக் காட்டுவது? அதனால் போட்டியில் தோற்றுப்போனாள்.

போட்டியில் தோற்றுப்போனதும் அவமானம் அடைந்தவள் ஊர் எல்லைக்குச் சென்று உக்ரமாக வட எல்லைக் காளியாக அமர்ந்தாள். அதைக் கண்ட அனைவரும் அதிர்ந்து போனார்கள். சக்தி இல்லையேல் சிவனும் இல்லை. இருவரும் இணைந்து இல்லாதவரை பிரபஞ்சம் எப்படி இயங்கும் என கவலைப்பட அனைத்து தேவர்களும், மகாவிஷ்ணுவும் பிரம்மாவும் ஒன்று சேர்ந்து காளியிடம் சென்று அவளை சாந்தமடையுமாறு வேண்டிக்கொண்டனர். பிரம்மா அங்கேயே அமர்ந்துகொண்டு காளியை புகழ்ந்து வேதங்களை ஓதி அவளை பூஜிக்க அவர் பூஜையை ஏற்றுக் கொண்ட காளி பிரம்மசாமுண்டேஸ்வரி என்ற பெயரால் நான்கு முகம் கொண்ட சாந்த நாயகி ஆகி அதே இடத்தில் இன்னொரு சன்னதியில் சென்று அமர்ந்தாள்.

ஆக அந்த ஆலயத்தில் ஒரு சன்னதியில் உக்ர காளிதேவியாக பல ஆயுதங்களையும் ஏந்திய எட்டுக் கைகளைக்கொண்ட தில்லைக் காளியாகவும் இன்னொரு சன்னதியில் சாந்தமான நான்கு முக பிரம்மசாமுண்டேஸ்வரி அம்மனாகவும் காட்சி தந்தவாறு பக்தர்களை ரட்சித்து வருகிறாள். காளி சொரூபத்தில் உள்ளவள் பில்லி சூனியப் பேய்கள், சினம், பகை, கொடிய வியாதிகள், ஆணவம், அகம்பாவம் போன்றவற்றை அழித்து வருகிறாள். சாந்தமான பிரம்மசாமுண்டேஸ்வரி கல்வி, ஐஸ்வர்யம், வீரம் போன்ற அனைத்தையும் அளித்து வருகிறாள்.

இந்த ஆலயத்தை பன்னிரெண்டாம் நூற்றாண்டில் அதாவது *1229* AD மற்றும் *1278* AD ஆண்டுகளில் கோபெருங்ஜிங்கன் என்ற மன்னன் கட்டினான் என்று தெரிகின்றது. அந்த காலத்தில் நடைமுறையில் இருந்த பழக்கத்தின்படி போரில் வெற்றி அடைவதற்காக தமது தலையையே தருவதாக வேண்டிக்கொண்ட படையினர் சிலர் போர்களில் வெற்றி பெற்றபின் அங்கு வந்து தமது தலைகளையே வெட்டிக் கொண்டு மரணம் அடைந்ததாக வாய்மொழிக்கதைகளும் உள்ளதாம்.

ஆலயம் மிகப் பெரியது அல்ல ஆனால் மிகப் பழமையானது. உள்ளே நுழைந்ததும் வலது பக்கத்தில் உள்ள தனிச்சன்னதியில் ஆனந்த நர்த்தனமாடும் விநாயகரும், இடதுபுற தனிச் சன்னதியில் முருகனும் கிழக்கு திசையை நோக்கிப் பார்த்தவாறு இருந்துகொண்டு பக்தர்களை காத்து அருளுகிறார்கள். முதல் மண்டபமான தியான மண்டபத்தின் இரண்டு பக்கங்களிலும் அலுவலக அறைகள் உள்ளன. தியான மண்டபத்தில் பக்தர்கள் நெய் விளக்குகளை ஏற்றி தேவிகளை ஆராதிக்க விளக்கு பீடமும் வைக்கப்பட்டு உள்ளது. அடுத்த மண்டபத்தில் உள்ள சன்னதிகளில் நாம் காணுவது கிழக்கு நோக்கி தனி சன்னதியில் அமர்ந்து உள்ள தில்லைக்காளி அம்மனும் மேற்கு நோக்கி அமர்ந்து உள்ள பிரம்மசாமுண்டியும் ஆவார்கள். அவர்கள் அங்கு அமர்ந்தவாறு பக்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை ரட்சித்துக் கொண்டு உள்ளனர். அந்த மண்டப நுழை வாயிலில் இருபுற மும் பிரம்மாண்டமான காவல் தேவதை கள் நின்று கொண்டு உள்ளார்கள். சுவர்களில் சில கல்வெட்டுக் குறிப்புகள் காணப்படுகின்றன.

தில்லைக் காளியம்மனுக்கு வெள்ளைப் புடவையை மட்டுமே சாத்துகிறார்கள். தினமும் அவளுக்கு நல்லெண்ணெய் அபிஷேகம் மட்டுமே நடைபெறுகின்றது. காளி சாந்தம் அடையக்கூடாது என்பதற்காக உஷ்ணம் தரும் எண்ணையான நல்லெண்ணை மட்டுமே உபயோகிக்கின்றார்களாம். உடம்பு முழுவதும் மஞ்சளினால் ஆன குங்குமம் கொட்டப்பட்டு (அதைக் காப்பிடுதல் என்று கூறுகிறார்கள்) வெள்ளைப் புடவையால் உடல் மறைக்கப்பட்டு உள்ளது. கண்கள் மட்டும் ஜொலிக்கும் வகையில் வெள்ளை நிறத்தில் காட்சி தருகின்றது. தில்லைக் காளியை அந்த கோலத்தில் மட்டுமே தரிசிக்க முடிந்தது. (படத்தைப் பார்க் கவும்). அவள் சன்னதிக்கு பக்கத்திலேயே அவளை ஆராதித்து தீபம் ஏற்றி வேண்டிக் கொள்ள விளக்கு பீடமும் வைக்கப்பட்டு உள்ளது. அந்த சன்னதியில் தில்லை காளியை தரிசிப்பவர்கள் கண்டிப்பாக அவள் உக்ரமான கண்களை உற்று நோக்கி அவளை வேண்டிக் கொண்டால் தான் பலன் உண்டு. ஆனால் அதற்கு மாறாக பிரம்ம சாமுண்டிக்கோ அனைத்து விதமான அலங்காரங்களும் செய்யப்பட்டு தேன், பால், போன்ற அபிஷேகங்களும் செய்யப்படுகின்ற னவாம்.



வெள்ளைப் புடவையால் உடல் மறைக்கப்பட்டு, உடம்பு முழுவதும் குங்கு மத்தினால் காப்பிடப்பட்டு (மூடப்பட்டு), கண்கள் வெள்ளை பொட்டினால் பளபளத்த நிலையில் காட்சி கொடுக்கும் நிலையில் தில்லைக் காளி அம்மன் காணப்படுகின்றாள்.

அவள் சன்னதிக்கு பக்கத்தில் சுமார் ஆறு அல்லது ஐந்து அடி உயரமும் நான்கு அல்லது ஐந்து அடி சுற்றளவும் கொண்ட மிகப் பெரிய நாகதேவர் சிலை உள்ளது. காளியை வணங்கிய பின் அவரையும் வணங்க வேண்டுமாம். அதன் பக்கத்திலேயே போர் வீரர்கள் தமது தலைகளை வெட்டிக் கொண்டு பலி தந்த காட்சியைக் காணலாம்.

மேலும் அந்த சன்னதிக்குள் அனைத்து பகுதிகளிலும் பைரவர், துர்க்கை, சண்டிகேஸ்வரர் போன்றவர்க ளும் காட்சி தருகிறார்கள்.□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளியின் மகத்துவம்

- சுவாமி கமலாத்மானந்தர

கல்கத்தா அருகில் தட்சிணேஸ்வரத்தில் காளி கோவில் இருக்கிறது. இங்கு காளிக்கு 'பவதாரிணி' என்று பெயர்.

'பவதாரிணி' என்றால், 'ஜீவாத்மாக்களைப் பிறவிப் பெருங்கடலிலிருந்து விடுவித்து, முக்தி என்னும் கரை சேர்ப்பவள்.' என்று பொருள். இந்த பவதாரிணி காளிதேவியை வழிபட்டவர் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர்.

காளிதேவி கருமை நிறம் கொண்டவள். நாம் தூரத்திலிருந்து பார்த்தால், கடலின் நிறம் நீலமாகத் தென்படுகிறது. அருகில் சென்று கடல் நீரை எடுத்துப் பார்த்தால், அந்தக் கடல் நீருக்கு என்று தனியே ஒரு நிறமும் இல்லை. அதுபோல் அஞ்ஞான நிலையில் இருப்பவர்களுக்கு, காளி கருமை நிறம் கொண்டவளாகத் தென்படுகிறாள். ஞானிகளுக்கோ அவள் எல்லையற்ற தெய்வீக ஒளி வடிவினள்.

காளி பார்ப்பதற்கு பயங்கர வடிவம் கொண்டவள். அஞ்ஞானிகளுக்கு பயங்கர வடிவம் உள்ளவளாகத் தென்படும் காளிதேவி, ஞானிகளுக்கு ஆனந்த சொரூபிணியாகக் காட்சி தருகிறாள்.

காளிக்கு 'திகம்பரி' என்று ஒரு பெயர். இதற்குத் 'திசைகளையே ஆடையாகக் கொண்டிருப்பவள்' என்று பொருள்.

திசைகள் அனைத்தையுமே ஆடையாகக் கொண்ட அவளுக்கு, எந்த ஆடை பொருத்தமாக இருக்கும்? எந்த ஆடையை, எவ்வளவு பெரிய ஆடையை அவள் அணிந்து கொள்ள முடியும்? பிரபஞ்சமே அவளாக இருக்கும்போது, அவளை எந்த உடை கொண்டு போர்த்த முடியும்? எனவேதான் அவள் உடை எதுவும் இல்லாமல் இருக்கிறாள்.

நம் இந்துமதத்தில் நான்கு கைகள் உடையவர்களாக தேவர்கள்-தேவியரின் வடிவம் சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. இது அவர்கள் மனிதர்களைக் காட்டிலும் அதிக ஆற்றல் உடையவர்கள் என்பதை உணர்த்துகிறது.

காளி தன் இடுப்பில் கைகளை ஒட்டியாணமாக அணிந்திருக்கிறாள். கைகளைக் கொண்டு நாம் செயல் புரிகிறோம். உலகில் உள்ள அனைவரின் கைகளின் மூலமாகவும் காளியே செயல்படுகிறாள். எனவே உலகில் செயல் அனைத்தும் காளிதான் நடத்திக் கொண்டிருக்கிறாள் என்பதை, அவள் இடுப்பில் அணிந் திருக்கும் கைகளாலான ஒட்டியாணம் குறிப்பிடுகிறது.

காளிக்கு 'முண்டமாலினி' என்று ஒரு பெயர். இதற்கு 'மண்டையோடுகளை மாலையாக அணிந்திருப்பவள்' என்று பொருள். காளியின் கழுத்தில், குழந்தைப் பருவத்திலிருந்து வெவ்வேறு வயதுடையவர்களின் மண்டையோடுகள் மாலையாக உள்ளன.

இது குழந்தை பிறந்ததிலிருந்து எந்த வயதிலும் மரணம் நேரிடும். வாழ்க்கை நிலையற்றது. எனவே அரிதாகக் கிடைத்த மனிதப்பிறவியைப் பயன்படுத்தி மனிதன், ஆண்டவனுக்கும் ஆண்டவனின் அடியார்களுக்கும் மனித குலத்திற்கும் பயன்படும் வகையில் அற வாழ்க்கை வாழவேண்டும் என்பதை உணர்த்துகிறது.

காளியின் ஒரு கை வரதஸ்தம்-வரம் தரும் நிலையில் இருக்கிறது. பக்தர்களுக்கு அனுக்கிரகம் செய்வதில் அன்னை காளிக்கு இணை அவளேதான்.

அன்னையின் இன்னொரு கை அபயஸ்தம். அது பக்தர்களின் பயத்தையும் துன்பங்களையும் நீக்கிப் பாதுகாப்பு அளிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளி தன் ஒரு கையில் வாள் ஏந்தி இருக்கிறாள். அது தீமை எங்கே இருந்தாலும், முடிவில் அதை காளி வெட்டிச்சாய்த்து விடுவாள் அவளுடைய தண்டனையிலிருந்து தீமைகள்-தீயவர்கள் தப்பிவிட முடியாது என்பதை உணர்த்துகிறது.

காளி இன்னொரு கையில் வெட்டிய ஒரு தலையைப் பிடித்திருக்கிறாள். இது தீயவர்கள் காளிதேவியால் தண்டிக்கப் படுவது உறுதி என்பதை உணர்த்துகிறது.

உலகிற்கு ஒளி தரும் சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய மூன்றையும் காளி தன் மூன்று கண்களாகக் கொண்டிருக்கிறாள்.

காளியின் கணவன் சிவபெருமான். அவர் சடைமுடி உடையவர், காளியும் விரிந்த கரிய கூந்தல் உடையவள்.

காளியின் விரிந்த கரிய கூந்தல், அவளது எல்லை காண இயலாத வியாபகத் தன்மையையும் ஆற்றல்களையும் உணர்த்துகிறது.

"சக்திக்கும் சிவனுக்கும் உள்ள வேறுபாடு, பெயர் அளவில்தான் இருக்கிறதே தவிர உண்மையில் இல்லை. நெருப்பும் அதன் உஷ்ணமும் போல, பாலும் அதன் வெண்மையும் போல, சுயம் பிரகாசமுள்ள மணியும் அதன் ஒளியும் போல, சக்தியும் சிவமும் ஒன்றேயாகும். ஒன்று இல்லாமல் மற்றொன்றை நினைக்க முடியாது. அவை இரண்டையும் வேறுபடுத்தவும் முடியாது" என்று தட்சிணேஸ்வரத்திலிருந்து மாமுனிவராய் விளங்கிய பகவான் ஸ்ரீஇராமகிருஷ்ணர் கூறியுள்ளார்.

சில இடங்களில் காளிதேவிக்குப் பலியிடல் இடம்பெறுகின்றது. பலியிடல் என்பதைப் பலர் பிழையாக விளங்கிவைத்திருக்கின்றனர். 'பலி' என்பது நம்மிடம் உள்ள உட்பகைவர்களாகிய காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்சர்யங்களை-ஜபத்திலும் ஹோமத்திலும் தியாகம் செய்வதேயாகும்.

காமம், கோபம் போன்றவற்றை நீக்கிக்கொள்ளாமல் அடையாளச் சொற்களாகக் குறிப்பிடப்பட்ட மிருகங்களையே பலியிடுவது, ஜகன்மாதாவாகிய காளி தேவிக்கு ஒவ்வாத செயலாகும்.

சிவபெருமானின் மார்பின் மீது, காளிதேவி தன் கால்களை ஊன்றி நிற்பது போன்ற படங்கள் இருக்கின்றன. இது சிவன் 'சிவனே' என்று சவம் போல் இருப்பான். சக்தி அவன் மீது நடனம் புரிவது உலக இயல்பைக் காட்டுகிறது.

ஒரு விளக்கில், விளக்கின் அடிப்பாகமும் எண்ணெயும் சும்மா இருக்கும் சிவன் எரியும் சுடர் சக்தி. இமயம் சும்மா இருக்கும் சிவன் அதன் மீது பாய்ந்தோடும் கங்கை சக்தி. உலகெங்கும் இப்படித்தான் சிவனும் சக்தியும் பிரகாசிக்கின்றன. சக்தியின் இயக்கத்தால்தான் நாம் சிவனை அறிந்து கொள்ள முடியும். இதுதான் கால சொரூபமான 'காளீ சக்தி' அல்லது காளியின் மகத்துவம்.

படுத்திருக்கும் சிவன் செயலற்ற நிர்க்குண பிரம்மத்தைக் குறிப்பிடுகிறது. சிவன் மீது நிற்கும் காளி செயல் உள்ள சகுணப் பிரம்மத்தைக் குறிப்பிடுகிறது. மேலே அலைகள் உள்ள கடல் சக்தி. அந்தக் கடலைத் தாங்கி நிற்கும் கடல் அடியிலுள்ள நிலப்பகுதி சிவன்.

சிவனும் சக்தியும் ஒன்றுதான் என்றாலும், அசையாமல் படுத்திருக்கும் பாம்பின் நிலை சிவனுடையது. அதே பாம்பு ஓடும் நிலையில் இருப்பது சக்தியுடையது. □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிரத்ன காளிதாஸன்

**- நி.த. நடராஜ தீக்ஷிதர்,**
**சிதம்பரம்**

காளிதாசன் நிகரற்ற ஒரு வட மொழிக் கவி. சிறந்த நாடகப் புலமை வாய்ந்தவர்.

ஷேக்ஸ்பியர், வேர்ட்ஸ்வொர்த் போன்ற தலைசிறந்த படைப்பாளிகளுக்கும் மேலானவர். கி.பி. 1600களிலேயே இவரின் படைப்புகள் ஜேர்மனி மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வளவு புகழ்வாய்ந்த காளிதாசன் ஆரம்பத்தில் ஒரு அறிவுத்திறன் இல்லாத மூடனாக இருந்து, பின் காளியின் அருளால் கவித்திறன் பெற்றவர்.

காளிதாசன் வாழ்க்கையே மிகவும் சுவாரசியம் வாய்ந்தது. அவரின் வாழ்க்கை வரலாற்றின் சில சுவாரசியமான சம்பவங்களைப் பார்ப்போம்.

இன்றைய நாட்களில் பாட்னா என்று அழைக்கப்படும் பாடலிபுத்ரா நகரத்தில் ஆடு மேய்க்கும் ஒரு தம்பதிக்கு மகனாகப் பிறந்தார் காளிதாசன். பிறந்ததில் இருந்தே அறிவுத்திறன் மிகவும் குறைவானவராகவே இருந்தார். சிறுவனாக இருந்தபோது, ஒரு மரத்தின் கிளையின் கடைசியில் அமர்ந்து, கிளை ஆரம்பிக்கும் மரத்தின் பகுதியை வெட்டிக் கொண்டிருந்தார். அதாவது, நுனி மரத்தில் அமர்ந்து கொண்டு அடி மரத்தை வெட்டிக்கொண்டிருந்தார். இச்செயலைக் கண்ட அனைவரும் ஏளனமாகச் சிரித்தனர். ஏனெனில், மரம் வெட்டி முடிந்தால் கீழே விழுவானே என்ற ஏளனச் சிரிப்பு. அதன்படியே, காளிதாசன் மரத்தை வெட்டி முடித்ததும் 'பொதேர்' என்று கீழே கிளையுடனே விழுந்தார். அனைவரும் சிரித்து விலகினர்.

வாலிப வயதை அடைந்தார். சந்தர்ப்ப வசத்தால், ஒரு இளவரசியை மணக்க நேரிட்டது. இளவரசியோ அறிவுத்திறன் மிக்கவர். திருமணமான பிறகு இவரின் அறிவற்ற திறனைக்கண்டு மனம் வெதும்பிய இளவரசி, அறிவுச் செறிவுடன் வந்தால் மட்டுமே வாழ்க்கை நடத்த முடியும் என்று பிரிந்து விட்டார்.

பிரிவுத் துயர் தாங்காத காளிதாசர் இளவரசியை நோக்கி, தான் அறிவு பெறச் செய்யவேண்டியது என்ன என்று கேட்ட போது, உஜ்ஜயினி மஹாகாளி தெய்வம் மட்டுமே தங்களுக்கு அறிவை வழங்க முடியும் என்று கூறி சென்றுவிட்டார்.

காளிதாசரும் காளியை அடைந்து அனுதினமும் அறிவுத்திறன் வேண்டி பிரார்த்தனை செய்வார். காளியும் அவரின் தூய்மையான பக்திக்கு இரங்கி, காளிதாசன் முன் தோன்றி, கையில் இரு கிண்ணங்களை வைத்துக்கொண்டு, காளிதாசனிடம் ஒரு கிண்ணத்திலுள்ள பாயசத்தை அருந்தினால் அறிவு வரும், மற்றொரு கிண்ணத்திலுள்ள பாயசத்தை அருந்தினால் ஆற்றல் வரும், இதில் ஏதாவது ஒன்றை எடுத்துக்கொள் என்கிறாள். காளிதாசனோ, அறிவும் ஆற்றலும் இரண்டும் வேண்டும் என எண்ணிக் கொண்டு, காளியை நோக்கி, இரண்டில் எது நன்றாக இருக்கின்றதோ அதைக் குடிக்கின்றேன் என்று வெகுளியாகச் சொன்னார்.

மனமிரங்கிய காளி, காளிதாசனிடம் இரண்டு கிண்ணங்களையும் கொடுக்கிறாள். காளிதாசன் அந்த இரண்டு கிண்ணங்களில் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாயசங்களையும் நொடிப்பொழுதில் குடித்துவிடுகின்றார். இப்பொழுது எனக்கு அறிவும் ஆற்றலும் வந்துவிடுமா என காளியை நோக்கிக் கேட்கிறார். சிரித்த படியே காளியும், அவ்வண்ணமே நடக்கட்டும் என்று வரம் தந்து மறைகின்றாள். அருமையான கவிகளை இயற்றும் திறன் பெற்று, மொழியை ஆளும் திறன் பெற்றார் காளிதாசர்.

காளிதாசர் ஒரு வரகவி. காளிதாசருக்கு மொழியின் மீதிருந்த ஆளுமை எல்லையில்லாதது. உவமைக்கொரு காளிதாசன் (உபமா காளிதா ஸஸ்ய) என்பர்.

பல அற்புதக் காவியங்களை இயற்றினார். (ரகுவம்சம், குமாரசம்பவம், சாகுந்தலம், மாளவிகாக்னிமித்ரம், மேகசந்தேசம் போன்றவை..)

காளிதாசனின் அறிவில் மகிழ்வு கொண்ட உஜ்ஜயினையை ஆண்டு கொண்டிருந்த, அறிவிற்சிறந்த போஜ ராஜன் தனது அவைப் புலவர்களில் மேலானவராக அமைத்துக் கொண்டார்.

நவரத்தினங்கள் என புகழ் பெற்ற ஒன்பது புலவர்கள் போஜராஜனின் அரசவையை அலங்கரித்திருக்கின்றனர். (1.தன்வந்தரி, 2.க்ஷபனகர், 3.அமர சிமஹன், 4.ஷங்கு, 5.வேதாளபட்டர், 6.கடகார்ப்பரர், 7.காளிதாசர், 8.வராஹமிரர், 9.வரருசி)

டாடம் டடம் டம் டடடம் ட டம் டா:

ஒருமுறை போஜ மஹாராஜா குளிப்பதற்காக செல்லும்போது அரண்மனையிலிருந்த ஒரு பெண் கையிலிருந்த குடத்தை ஓசையெழுப்ப தவறவிட்டாள். இந்த சத்தத்தைக்கேட்ட ராஜா பிறகு அவையில் வீற்றிருக்கும்போது இந்த சத்தத்தை கடைசி அடியாக கொண்டு கவிதை எழுத வேண்டுமென்று போட்டியொன்றை அறிவித்தார்.

அனைவரின் அமைதிக்கு நடுவில் காளிதாசர் எழுந்து கவிதை பாடினாராம்

ராஜபிஷேகே ஜலமாஹரந்த்யா:

'ஸ்தாச்யுதோ ஹேமகடோயுவத்வா:

ஸோபான மார்கேண கரோதி சப்தம்

டாடம் டம் டடடம் ட டம் டா:

இன்னொரு சமயம் சம்ஸ்கிருத எழுத்துக்களான "க" வரிசையை ஒரே கவிதையில் கொணர முடியுமா என போஜராஜன் கேட்க எழுதியது தான் இது.

கா த்வம் பாலே காஞ்சனமாலா ஸ்ரீ யாரது குழந்தை? - காஞ்சனமாலா.

கஸ்யா புத்ரி கனகலதாயா: ஸ்ரீ யாரோட பெண்? - கனகலதாவின் பெண்.

'ஸ்தே கிம் தே தாலிபத்ரம் ஸ்ரீ கையில் என்ன இருக்கின்றது? - பனையோலை புத்தகம்.

காவா ரேகா க(1) க(2) க(3) க(4) ஸ்ரீ அதில் என்ன எழுதியிருக்கிறது? - க(1) க(2) க(3) க(4).

எப்படி அழகாக முடித்திருக்கின்றார் பாருங்கள். இதிலிருந்தே அவரின் கவிதாவிலாசம் தெரிகின்றது அல்லவா?

## நானே நீ!

அம்பிகையின் அருளை நேரடியாகப் பெற்றதால், காளிதாசன் அம்பிகையின் ரூபமாகவே கொண்டாடப்படுகின்றார். ஒரு முறை பவபூதி, தண்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளிதாசர் ஆகிய பெரும் புலவர்களிடையே பெரும் போட்டி எழுந்தது. மூவருமே அம்பிகையின் அருள் பெற்றவர்கள். அம்பிகையையே முடிவு சொல்லட்டும் என்று அம்பிகையை மூவரும் அழைத்தனர். அம்பிகையும் தோன்றினாள். போட்டி மிகக் கடினமானது என்றாள். கவிக்கு ஓர் தண்டி, பண்டிதர்க்கு ஓர் பவபூதி என அறிவித்தாள் அம்பிகை. பின் தான் யார் என காளிதாசன் வினவ, காளி "த்வமேவாஹம், த்வமேவாஹம், த்வமேவாஹம் ந ஸம்சய:" என்றாள். நானேதான் நீ - சந்தேகமேயில்லை என்றாள் அம்பிகை. காளியின் அம்சமே என்று கொண்டாடப்படுபவர் காளிதாசன்.

**ஸஸேமிரா, ஸேமிரா, மிரா, ரா.**

ஒரு சமயம் அரசவையில் அனைவரும் அமர்ந்து கொண்டு அளவளாவிக் கொண்டிருந்தபோது, வீரர்கள் சிலர் இளவரசனை அழைத்துவந்தனர்.

இளவரசனைப் பார்த்த அனைவருக்கும் அதிர்ச்சி. ஏனென்றால், இளவரசன் பிரமை பிடித்தவன் போல ஒரே திசையைப் பார்த்துக்கொண்டு ஸஸேமிரா, ஸஸேமிரா என்று பிதற்றிக் கொண்டேயிருந்தான். அதிர்ச்சி கொண்ட அரசன் என்னவாயிற்று எனக் கேட்க, வீரர்களோ, காட்டில் தனியே சுற்றிக் கொண்டிருந்தவரை அழைத்து வருகின்றோம். அங்கிருந்தே இப்படித்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார் எனக் கூறினர்.

அரசனுக்கோ பெரும் வருத்தம் உண்டாயிற்று. சிறு வயது முதலே வீரம் நிறைந்த தன் குமாரன் இப்படி பித்துப் பிடித்தவன் போலாகிவிட்டானே? அடுத்த ராஜாவாக வரவேண்டியவன் இப்படி பிதற்றுகின்றானே, வேட்டைக்குப் போய்வருகின்றேன் என்று சொல்லிச் சென்ற ராஜகுமாரன் இப்படி ஆகிவிட்டானே என்று மிகவும் மனம் வெதும்பினான்.

பலவிதமான மருத்துவங்களைச் செய்து பார்த்தும் தீர்வு இல்லை. காலம் கடந்தது. இதற்கு ஒரு சரியான தீர்வு தருபவர் காளிதாசனே என்று நினைந்து காளிதாசனை அழைத்து வந்து விபரம் கூறினான்.

காளிதாசன் இளவரசனைப் பார்த்தார். அவனோ, முன்னரைப் போலவே ஸஸேமிரா, ஸஸேமிரா என்றே பிதற்றிக் கொண்டிருக்கின்றான். வேறு எதுவும் அவன் பேசவில்லை. எதைப்பற்றி கேட்டாலும் ஸஸேமிரா என்றே சொல்லிக்கொண்டிருந்தான். ஸஸேமிரா என்றால் ஒன்றும் இல்லை என்று அர்த்தம்.

காளிதாசன் காளியை மனதில் நினைந்தார். பிறகு, இளவரசனைப் பார்த்து உனக்கு ஒரு கதை சொல்கின்றேன் கேள் என்றார். வடமொழி "ஸ" என்னும் எழுத்தில் ஆரம்பித்து இந்தக் கதையைச் சொல்கின்றார்.

ஒரு பெரும் அரசை ஆண்டு கொண்டிருந்த அரசனுக்கு அழகேயுருவான இளவரசன் பிறந்தான். அவனைச் சீருடனும் சிறப்புடனும் அறிவும், போர்த் திறனும் இணைந்த ராஜகுமாரனாக அரசன் வளர்த்து வந்தான். அந்த இளவரசன் ஒரு நாள் காட்டுக்கு வீரர்களுடன் வேட்டையாடச் சென்றான். ஒரு சமயம் ஆர்வ மிகுதியால், விரைவாக சென்றமையால், வீரர்களை விட்டுப் பிரிந்தான். தனியே சுற்றிக் கொண்டிருந்த இளவரசனை ஒரு பசித்த புலி பார்த்து விட்டது. அந்தப் புலி இளவரசனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்ல அவனைத் துரத்தியது. இதனைக் கண்ட இளவரசன் ஓட்ட மெடுத்தான்.

இதுவரை சொன்னதும் இளவரசனிடம் ஒரு மாற்றம். ஸஸேமிரா என்று சொல்லிக் கொண்டிருந்தவன் "ஸ" எனும் எழுத்தை விட்டுவிட்டு "ஸேமிரா, ஸே மிரா" என்று புலம்ப ஆரம்பித்தான்.

காளிதாசர், "ஸே" எனும் எழுத்தில் தொடங்கி, கதையைத் தொடர்கின்றார்.

இளவரசன் எங்கு ஓடினாலும், புலி அவனைத் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தது. இடையில் ஒரு மிகப்பெரும் மரத்தின்மீது ஏறிக் கொண்டான். மரம் ஏறத் தெரியாத புலி அவனை விட மனமில்லாமல் கீழேயே காத்திருந்தது. மரம் ஏறிக் கொண்டிருந்த இளவரசன் மரத்தின் மேலே கரடி ஒன்றைக் கண்டு பயந்தான். அந்தக் கரடியை நோக்கி என்னை ஒன்றும் செய்து விடாதே, உன்னை நாடி வந்துவிட்டேன் என்று கூறினான். கரடியும், என்னை நாடி அபயம் தேடி வந்து விட்டாய் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன் என்று உறுதி கூறியது. மனம் தெளிந்த இளவரசன் கரடியின் பாதுகாப்பில் இருந்தான். கீழே பார்த்தால், புலி இன்னமும் காத்துக் கொண்டேயிருக்கின்றது. நேரம் கடந்து கொண்டேயிருந்தது. இளவரசனுக்கோ களைப்பாக இருந்தது. கரடியைப் பார்த்து, நான் சற்று உறங்குகின்றேன், நான் கீழே விழுந்துவிடாமல் நீ பார்த்துக் கொள் என்று சொல்லித் தூங்கிவிட்டான்.

இப்பொழுது இளவரசனிடம் இன்னும் ஒரு மாற்றம். ஸஸேமிரா என்று சொல்லிக்கொண்டிருந்தவன், ஸ, ஸே என்பனவற்றை விட்டு வெறும் "மிரா மிரா" என்று கூற ஆரம்பித்துவிட்டான்.

அடுத்து, காளிதாசர் "மி" எனும் எழுத்தில் ஆரம்பித்து கதையை தொடர ஆரம்பிக்கின்றார்.

கீழேயிருந்த புலி, கரடியைப் பார்த்து, மனிதர்கள் நம் எதிரிகள், ஆகவே இளவரசனை என்னிடம் தள்ளிவிடு, நாம் இருவரும் பாதி பாதி எடுத்துக் கொள்வோம் என்றது. கரடியோ, என்னை அண்டி வந்துவிட்டவனை என்னால் கீழே தள்ள முடியாது என்று உறுதியாகச் சொல்லிவிட்டது. நேரம் கடந்தாலும் புலி கீழேயே காத்திருந்தது. இளவரசனுக்கு முழிப்பு வந்தது. கரடிக்கோ களைப்பானது. கரடி இளவரசனை நோக்கி, நான் சற்று நேரம் தூங்குகின்றேன், என்னைப் பார்த்துக் கொள் என்று சொல்லிவிட்டு தூங்கிவிட்டது. கீழே காத்திருந்த புலி இளவரசனை நோக்கி, எனக்கோ பசி மிகவும் அதிகமாகிவிட்டது. தூங்கிக் கொண்டிருக்கும் கரடியை நீ கீழே தள்ளி விட்டால், கரடியை நான் சாப்பிட்டு, அதற்கு பதிலாக உன்னை விட்டுவிடுகின்றேன் என்று கூறியது. புலியின் வஞ்சக வார்த்தையில் மயங்கிய இளவரசன், தூங்கிக் கொண்டிருந்த கரடியை கீழே தள்ளிவிட்டான்.

இப்பொழுது இளவரசனிடம் இன்னும் ஒரு மாற்றம். கண்களில் கண்ணீர் வர இளவரசன், தலையை மட்டும் ஆட்டிக்கொண்டு ஸ, ஸே, மி எனும் எழுத்துக்களை விட்டு, "ரா, ரா, ரா," என்று பிதற்ற ஆரம்பித்துவிட்டான்.

காளிதாசர் "ரா" எனும் எழுத்தில் ஆரம்பித்து, மறுபடியும் கதையை ஆரம்பித்து, நன்றி செய்தலுக்கு நன்றி செய்யும் குணத்தைப் போற்றவும் செய்து, கூற ஆரம்பித்தார்.

கரடி கீழே விழுந்து கொண்டிருந்த போது, அனிச்சை செயலாய், ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளையில் கைபட்டு, அக்கிளையை பிடித்துக்கொண்டு கீழே விழாமல் தப்பித்தது. மேலே வந்து, இளவரசனிடம் உனக்கு உதவி செய்த எனக்கு நீ செய்யும் உதவி இதுதானா எனக் கோபமாகக் கேட்டு, நீ விலங்குகளை விட கேவல மானவன், சிந்திக்கும் செயல் இழந்து பைத்தியமாக ஆவாய் என சாபமிட்டு விட்டது. சாப விமோசனமாக இன்று நடந்ததை யார் உனக்குச் சொல் கின்றாரோ, நன்றியின் பெருமையை நீ எப்போது உணர்கின்றாயோ அன்று நீ தெளிவடைவாய் என்றும் கூறியது. அது முதல் இளவரசன் ஸஸேமிரா, ஸஸேமிரா என்று சொல்லிக் கொண்டிருக்க ஆரம்பித்துவிட்டான். கீழே காத்திருந்த புலி பசிமிகுதியால் வேறு இடத்திற்குப் போய்விட்டது. கரடியோ இளவரசனை கீழே பத்திரமாக இறக்கி விட்டு, வீரர்கள் இருந்த பகுதிக்கு கொண்டுவந்து விட்டுச்சென்றுவிட்டது. வீரர்கள் இவனைப் பார்த்து என்ன நடந்தது எனக் கேட்க, பிரமைப் பிடித்தவனாக "ஒன்றும் இல்லை" என்று பொருள்பட ஸஸேமிரா என்று கூற ஆரம்பித்தான். ஸஸேமிரா ஸஸேமிரா என்று சொல்லிக் கொண்டிருந்த இளவரசனை வீரர்கள் அரசனிடம் சேர்ப்பித்தனர். நன்றி மறப்பது நன்றன்று - என்று ஐயன் திருவள்ளுவர் கூறிய குறள் தான் இங்கு நினைக்கத் தூண்டுகிறது.

இக்கதையைக் கேட்ட இளவர சனிடம் மேலும் நல்ல முன்னேற்றமான மாற்றம். இளவரசன் தன் பழைய நிலைக்கு வந்துவிடுகின்றான். ஸஸேமிரா என்று சொல்லாமல், கண்களில் கண்ணீ ருடன், நன்றி செய்தலின் அருமைகளை உணர்ந்து கொண்டு, தான் செய்த தவறுக்கு மனம் வருந்தி, காளி தாசனைக் கைகூப்பி வணங்கினான்.

மன்னனிடம் காளிதாசன், இக் கதையில் வரும் ராஜகுமாரன் வேறு யாரும் அல்ல, உன் குமாரனாகிய இந்த இளவரசன் தான் என்று கூறுகின்றார். ராஜகுமாரனின் பொலிவான நிலையில் பார்த்த மன்னன் மனம் மிக மகிழ்ந்து அளவற்ற பரிசுகளை காளிதாசனுக்கு வழங்கினான்.☐

(நன்றி : இணையம்)

- துன்பம் நேரும்போது துணிச்சல் என்னும் கடிவாளத்தால் கட்டி மனக்குதிரையைப் பிடித்து நிறுத்த வேண்டும். இதுவே சரியான யோகப்பயிற்சி.
- தனிமையை விரும்பியோ, மந்திரம் ஜெபித்தோ, யோகபயிற்சியில் ஈடுபட்டோ உலகத்தை விட்டு விலக முயற்சிக்க வேண்டாம். உலக விஷயங்களில் ஈடுபட்டுக் கொண்டே மனதை ஒருநிலைப்படுத்துவதே பயனுடைய செயல்.
- வீட்டில் தெய்வத்தைக் காணும் திறமை இல்லாதவன், மலைச்சிகரத்திற்குச் சென்று குகையில் அமர்ந்து தவம் செய்தாலும் கடவுள் தரிசனத்தைப் பெற முடியாது.
- பக்தி அதிகரிக்க அதிகரிக்க மனோபலம் அதிகரிக்கும். அப்படிப்பட்டவன் இந்த பிறப்பிலேயே தெய்வ நிலைக்கு உயர்ந்து விடுவான்.
- கேட்டவுடன் உலகில் எதுவும் கிடைப்பதில்லை. பக்திக்கும் இது பொருந்தும். பக்குவமடைந்த பிறகே கேட்ட வரம் கிடைக்கும்.
- மற்றவர்களின் உள்ளத்தில் உங்களைப் பற்றிய பொய்யான மதிப்பு உண்டாக்க முயற்சிக் காதீர்கள்.

- பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18.03.2013 இல் இடம்பெற்ற மஹா கும்பாபிஷேகக் காட்சிகள்




இராஜகோபுர அபிஷேகத்திற்காக கும்பங்கள் வீதி வலம் வருகின்றன.



இராஜகோபுர கலச அபிஷேகம் நடைபெறுகின்றது.



பிரதான கும்பங்கள் வீதி வலம் வருகின்றன.



கிரியைகளில் பங்கேற்ற குருமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம்

- ஜடாயு
(தமிழ்நாடு)

அம்பாளின் கால் சிலம்பொலி கேட்கவில்லை? உலகமே உபமானங் களும் உபமேயங்களுமாக மாறி விடு கிறது. நிஜத்தின் ஸ்வரூபங்களில் இப்படியும் ஒன்றோ? .. கிறிஸ்துவ வேதப் படி ஆதாமுக்கும் ஏவாளுக்கும் பிறந்த வர்கள் முதல் பாவத்தின் குழந்தைகள். ஆண்டவனின் கோபத்துக்கும் சாபத்துக் கும் ஆளானவர்கள். அவர்களின் தந்தை சொல்கிறார் – I am a Vengeful God. ஆனால் நாம் எல்லோரும் சகல ஜீவராசிகளும் அகிலாண்டேஸ்வரி, ராஜ ராஜேஸ்வரி, ஜகன்மாதா, கருணா கரி,சௌந்தர்ய ரூபிணியின் குழந்தைகள். சௌந்தர்யம் நம்மிலும் நம்மைச் சூழ்ந்து இயங்காமல் எப்படி இருக்க முடியும்? சிறு நுரை ஆயினும் நாம் அவளுடைய லஹறிகள்.

- லா.ச.ராமாமிர்தம், 'சௌந்தர்ய..' நூலில் (வானதி பதிப்பகம் வெளியீடு).

ஆப்ரஹ்ம-கீட-ஜனனீ - பிரம்மன் முதல்புழுவரை அனைத்து உயிர்களை யும் பெற்ற அன்னை என்று லலிதா சகஸ்ரநாமத்தில் வருகிறது. அநேக-கோடி-ப்ரஹ்மாண்ட- ஜனனீ -அனேக கோடி அண்டங்களைப் பெற்ற அன்னை என்று இன்னொரு நாமம். லலிதா சகஸ்ரநாமமே ஸ்ரீமாதா என்று ஆரம்பித்து லலிதாம்பிகா என்று முடிகிறது. மாதா, அம்பிகா என்ற சொற்கள் இரண்டுமே அன்னையைக் குறிப்பவை. உணர்வுள்ள உயிர்களில் மட்டுமல்ல, உணர்வற்ற ஜடப்பொருள் களிலும் உறைவது அவளது சக்தியே - சித்சக்தி: சேதனா-ரூபா, ஜடசக்தி: ஜடாத்மிகா. இவ்வுலகம் எங்கும் இறையே நிரம்பியுள்ளது என்ற உபநிஷத தத்து வத்தின் உட்பொருளே உலக அன்னை யாகிய பராசக்தியின் திருவுருவமாக இலங்குகிறது. அவள் ஸர்வாந்தர்யாமினீ -அனைத்திலும் உட்பொருளாக இருப்பவள்.




குறியும், குணங்களும் அற்ற சுத்த வஸ்துவாகிய பரம்பொருளை, கண் காணும் பிரபஞ்ச வடிவாகவும் குணங் களுடையதாகவும் அடையாளப்படுத்தி வழிபடும் உபாசனா மார்க்கங்கள் இந்து தர்மத்தின் தனித்துவமிக்க வழிபாட்டு முறைகள்.

**ஏதவன் ஊர்? ஏதவன் பேர்? ஆர் உற்றார் ஆர் -அயலார்?**
**ஏது அவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்?**

என்று கேட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமிலார்க்கு
-ஆயிரம்
திருநாமம் பாடித் தெள்ளேணம்
- கொட்டோமோ!

என்று விடையும் சொல்கிறது திருவாசகம். தெய்வ வடிவங்களின் பல்வேறு சிறப்பியல்புகளை அவற்றின் திருநாமங்களாகப் போற்றிப் பாடும் சகஸ்ரநாமங்கள் என்ற வகை பக்தி நூல்கள் பழங்காலத்திலேயே பிரபலமாக இருந்தது தெரியவருகிறது. நமது இதிகாச புராணங்களில் பல்வேறு சகஸ்ரநாமங்கள் அடங்கியுள்ளன. மகாபாரதத்தில் வரும் விஷ்ணு சகஸ்ரநாமமும், பிரம்மாண்ட புராணத்தில் வரும் லலிதா சகஸ்ரநாமமும் இவற்றில் மிகவும் பிரசித்தமானவை. பாரத தேசம் முழுவதும் பல லட்சக்கணக்கான பக்தர்களால் ஓதி வழிபடப்படும் பெருமை கொண்டவை.

பதினெட்டு புராணங்களில் ஒன்றாகிய பிரம்மாண்ட புராணத்தில், லலிதோபாக்யானம் என்ற பகுதியில் லலிதா தேவியின் திரு அவதாரமும், சரிதமும் கூறப்படுகின்றன. அதன் ஒரு பகுதியாக, அன்னை பராசக்தியின் ஆயிரம் திருநாமங்களைக்கூறும் லலிதா சகஸ்ரநாமம் என்னும் மகோன்னதமான இந்த ஸ்தோத்திரம் உள்ளது. ஹயக்ரீவர் என்ற மகரிஷி (விஷ்ணு அவதாரமாகக் கூறப் படுவதும் உண்டு) அகஸ்திய மகரிஷிக்கு உபதேசம்செய்வதாக 183 சுலோகங்கள் அடங்கிய இந்த நூல் அமைக்கப் பட்டுள்ளது. அகஸ்தியரும், அவரது மனைவி லோபாமுத்திரையும் சக்தி வழிபாட்டு நெறிகளை உருவாக்கிய குருமார்களில் முதன்மையாக வைத்துப் போற்றப்படுபவர்கள் (லோபாமுத்ரார்ச்சிதா -லோபாமுத்திரையால் அர்ச்சிக்கப்பட்டவள் என்றே ஒரு நாமம் லலிதா சகஸ்ரநாமத்தில் உண்டு). தேவியின் கட்டளைக்கிணங்க வாசினி முதலான வாக்தேவதைகளே பிரத்யட்சமாகி இந்த தெய்வீக ஸ்தோத்திரத்தைச் செய்ததாகவும் புராணக் குறிப்பு உண்டு.

இந்த நூலுக்கு எழுதப் பட்டிருக்கும் உரைகளில் தலை சிறந்ததாக விளங்குவது பாஸ்கரராயர் எழுதிய “சௌபாக்ய பாஸ்கரம்” என்ற உரை. பாஸ்கரராயர் (பொ.பி 1690 -1785) மிகப் பெரியதேவி உபாசகரும், தத்துவ ஞானியும், அறிஞரும் ஆவார். இவர் மகாராஷ்டிரத்தில் பிறந்து, சிறு வயதிலேயே தமிழகத்தில் தஞ்சை மாவட்டத்திற்கு தன் குருநாதரைத் தேடி வந்தடைந்தார். காவிரிக்கரையில் நீண்ட நாள் வாழ்ந்தார். அவர் வாழ்ந்த ஊர் பாஸ்கரராஜபுரம் என்று இன்றளவும் வழங்கப்படுகிறது. (பொ.பி -பொது யுகத்துக்குப் பின் - Common Era, Circa).

சகஸ்ரநாம நூல்களிலேயே தனித்துவமும், தனிச்சிறப்பும் மிக்கதாக லலிதா சகஸ்ரநாமம் உள்ளது. அபாரமான கவித்துவமும், சொல்லழகும், ஓசை நயமும் கொண்டது. சாக்த நெறியின் தத்துவங்கள் பெரும் வீச்சோடும், காம்பீர்யத்தோடும் இதில் முன்வைக்கப்படுகின்றன. வேதாந்த தத்துவ உண்மைகளை மந்திரம், யந்திரம், தந்திரம் ஆகிய நுட்பமான குறியீடுகளாக வெளிப்படுத்துவது சாக்த உபாசனை. பிரம்ம வித்தை என்று வேதாந்தம் கூறும் உண்மைகளையே சக்தி உபாசகர்கள் ஸ்ரீவித்யை என்று அழைக்கிறார்கள். இந்தக் குறியீடுகளை சூனியத்தில் மிதக்கவிடாமல் அவற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுக்கு அழகும்,முழுமையும் அளிக்கும் விதமாகவும் லலிதா சகஸ்ரநாமம் அமைந்துள்ளது.

லலிதா சகஸ்ரநாமத்திற்கு ஒரு குறிப்பிட்ட வடிவமும், அமைப்பும், நடையும் உள்ளது. இதில் திருநாமங்கள் கோர்க்கப்பட்டிருக்கும் வரிசையே ஒரு குறிப்பிட்ட சித்தாந்தக் கருத்தை விளக்கு வதாக உள்ளது. ஆயிரத்தெட்டு நாமங் களும் கீழ்க்கண்ட வரிசையில் கீழ்க் கண்ட பேசுபொருள்களைக் குறித்து அமைந்திருப்பதாக உரைநூல்களை இயற்றிய பெரியோர்கள் கூறியிருக் கிறார்கள் -

- ஸ்ரீமாதாவின் அவதாரம்
- கேசாதி பாத வர்ணனை (ஸ்தூல ரூபம்)
- பண்டாசுர வதம்
- மந்த்ர வர்ணனை (சூட்சும ரூபம்)
- குண்டலினீ ரூபம்
- பக்த அனுக்ரஹம்
- நிர்க்குண உபாசனை
- சகுண உபாசனை
- பஞ்சப்ரஹ்ம ரூபம்
- க்ஷேத்ர-க்ஷேத்ரக்ஞ ரூபம்
- பீடங்களும், அங்க தேவதைகளும்
- யோகினீ தியானம்
- விபூதி விஸ்தாரமும், மார்க்க பேதங்களின் சமரசமும்
- சிவசக்தி ஐக்கியம்

தேவர்களின் வேண்டுதலுக்கு இரங்கி அக்னிகுண்டத்தில் அவதரித்த வள் லலிதாதேவி. நான்கு கைகளில் பாசம், அங்குசம், கரும்புவில், மலர்க் கணைகள் ஆகியவற்றை ஏந்தியவள். இந்தப் புராண விளக்கம் தியானத்திற் குரிய தத்துவக் குறியீடாக லலிதா சகஸ்ர நாமத்தின் தொடக்கத்திலேயே வந்து விடுகிறது. சிதக்னிகுண்ட ஸம்பூதா - அறிவாகிய அக்னி குண்டத்தில் தோன்றியவள், ராகஸ்வரூப பாசா ஹட்யா - ஆசை வடிவான பாசக் கயிற்றை ஏந்தியவள், க்ரோதாகார அங்கு சோஜ்வலா - தீமையைப் பொசுக்கும் கோப வடிவான அங்கு சத்தை கையில் ஏந்தி ஒளிர்பவள், மனோரூப இக் கோதண்டா - மனமாகிய கரும்புவில்லை உடையவள், பஞ்சதன் மாத்ர ஸாயகா - ஐந்து புலன்களாலும் உணரப்படும் ஒலி, தொடுகை, உருவம், ரசம், மணம் என்ற ஐந்து தன்மாத்திரை களையும், ஐந்து மலர்க்கணைகளைக் கொண்டவள். பாசக்கயிற்றால் உயிர் களை ஆசையில் பிணிப்பவளும், பின் தனது அங்குசத்தால் அதனை வெட்டி எறிபவளும் அவளே. மனமாகிய வில்லில் ஐம்புலன்களாகிய மலர்க் கணைகளைப் பொருத்தி தேவி பிரபஞ்ச விளையாட்டு விளையாடுகிறாள்!

தராந்தோலித-தீர்காக்ஷீ - சிறிதே சலிப்புடன் கூடிய நீண்ட கண்களையுடையவள் நிஜாருண ப்ரபா பூர மஜ்ஜத் ப்ரஹ் மாண்ட மண்டலா - தன் சிவப்பொளி வெள்ளத்தில் அண்டங்கள் அனைத்தையும் மூழ்கச் செய்பவள். நகதீதிதி ஸஞ்சன்ன நமஜ்ஜன தமோகுணா - தன் கால் நகங்களின் ஒளியால் வணங்குவோர் அகத்திலுள்ள இருட்குணங்களை அகற்றுபவள்.

ச்ஹருதி-ஸீமந்த-ஸிந்தூரீக் ருத - பாதாப்ஜ - தூலிகா - அவள் பாதக் கமலத்தின் தூசியே வேத மங்கையின் வகிட்டில் விளங்கும் குங்குமம்.

ஸகலாகம-ஸந்தோஹ-சுக்தி-ஸம்புட-மௌக்திகா - அனைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகமங்களாகிய சிப்பிகளுக்கும் உள்ளிருக்கும் நன்முத்து அவள். உன்மேஷ - நிமிஷோத்பன்ன-விபன்ன-புவனாவலி - தன் கண்களை இமைத்து மூடுவதால் புவனங்களை ஆக்கி அழிப்பவள்
கலி-கல்மஷ-நாசினீ - கலியின் களங்கங்களை நாசம் செய்பவள். நீராகா, ராக மதனீ - ஆசையற்றவள். ஆசையைப் போக்குபவள்.

நிர்மோஹா, மோஹநாசினீ - மோகமற்றவள். மோகத்தை நாசம் செய்பவள்.

நிஷ்பாபா, பாபநாசினீ - பாவமற்றவள் பாவத்தை நாசம் செய்பவள்.

நிர்பேதா, பேதநாசினீ - வேற்றுமையில்லாதவள் வேற்றுமையைப் போக்குபவள்.

ஹர-நேத்ராக்னி-ஸந்தக்த-காம-ஸஞ்ஜீவனௌஷதி - அரனது நெற்றிக் கண்ணின் தீயால் எரிந்துபோன காமனுக்கு உயிரூட்டிய மருந்து.

ச்ருங்கார-ரஸ-ஸம்பூர்ணா - சிருங்கார ரசத்தால் நிறைந்தவள்.

காமரூபிணீ - காமமே உருவானவள் நினைத்த உருக்கொள்பவள்.

காமகேலி தரங்கிதா - காமனுடைய லீலைகளாகிய அலைகள் தோன்றும் கடல்.

சித்கலா - உயிர்களிடத்தில் உணர்வாக இருப்பவள். ஆனந்தகலிகா - உயிர்களில் ஆனந்தத்தின் அம்சமாக, மொட்டாக இருப்பவள். ப்ரேமரூபா - அன்பே வடிவானவள்
ப்ரியங்கரீ - அன்பு செய்பவள்.

மஹா காளீ, மஹாக்ராஸா - பெருங்கவளமாக விழுங்குபவள், மஹாசனா - அனைத்தையும் உண்பவள், சண்டிகா - கோபக்காரி, சண்ட-முண்டாஸர-நிஷூதினி - சண்டன் முண்டன் ஆகிய அசுரர்களை வதைத்தவள், பசுலோகபயங்கரி - விலங்கியல்பில் வாழ்வோருக்கு பயங்கரமானவள்.

தத்யன்னாஸக்த ஹ்ருதயா - தயிர்சாதத்தில் ஆசை கொண்டவள், குடான்ன ப்ரீத மானஸா -சர்க்கரைப் பொங்கலை விரும்புபவள், வாருணீ மத விஹ்வலா - வாருணீ என்ற மதுவால் மெய்மறந்தவள், மத கூர்ணித ரக்தாக்ஷீ - மதுவின் களிப்பால் சுழலும் சிவந்த கண்களையுடையவள், தாம்பூல-பூரித-முகீ - தாம்பூலத்தால் நிறைந்த உதடுகளுடையவள்.

கலாநிதி - கலைகளின் இருப்பிடமானவள் காவ்யகலா - காவியங்களின் கலையாயிருப்பவள் ரஸக்ஞா - ரஸத்தை அறிந்தவள் கலாலாபா - கலைகளில் மகிழ்பவள் கலாமாலா - கலைகளை மாலையாகத் தரித்தவள்.

வீரகோஷ்டிப்ரியா - வீரர்களின் குழுக்களை விரும்புபவள் வீரா - வீராங்கனை வீரமாதா - வீரர்களின் தாய் ஜயத்ஸேனா - வெல்லும் சேனைகளை உடையவள்.

தத்துவ அளவில் ஸ்ரீலலிதா சகஸ்ரநாமம் தூய அத்வைத நிலையில் இருந்தே பாடப்பட்டது என்பது இந்த நாமங்களின் பெருங்கடலின் ஒரு துளியை அள்ளிப் பருகினாலே தெரிய வரும் விஷயம். நிர்த்வைதா - த்வைதம் எனப்படும் இருமை நோக்கை நீக்குபவள், த்வைத-வர்ஜிதா - இயல்பாகவே இருமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை இல்லாதவள், ஸாமரஸ்ய பராயணா - சமரசத்தில் நிலைபெற்றவள் என்பனவும் அன்னையின் திருநாமங் களே. இந்த அடிப்படையான சமரச பாவத்துடனேயே ஸ்ரீலலிதா சகஸ்ர நாமத்தை நாம் பாராயணம் செய்யவும், தியானம் செய்யவும் வேண்டும். அப்படி தியானம் செய்பவர்களுக்கு நிர்க்குணமும் சகுணமும், ஞானமும் பக்தியும் கர்மமும், வாமாசாரமும் தட்சிணாசாரமும், யோக மும் போகமும், கோரமும் சாந்தமும், இல்லறமும் துறவறமும் எல்லாம் அன்னையின் உள்ளத்துக்கு உகந்ததா கவும், எல்லாமாகி இலங்கும் அவளை அடைவதற்கான மார்க்கங்களாகவே திகழும்.

வேத நெறியிலிருந்து உதித்துப் பல திசைகளில் பாய்ந்தோடும் நதிகள் போன்ற சமயங்களின் சங்கம ஸ்தான மாக சமுத்திரமாக சக்தி வழிபாடும், ஸ்ரீவித்தையும் திகழ்கின்றன. சமய வாதத்தினால் பிரிந்து போகும் மார்க்கங் களை தத்துவரீதியாக, ஆன்மீக ரீதியாக ஒன்றுபடுத்தும் இடமாக சக்தி தத்துவம் இருக்கிறது.

**நதி உண்ட கடலெனச் சமயத்தை உண்ட பரஞான ஆனந்த ஒளியே**

என்று தாயுமானவர் தன் "மலை வளர்காதலி"யில் பாடுவது இதைத் தான் போலும்!

ஸ்ருஷ்ரிகர்த்ரீ ப்ரஹ்மரூபா - படைப்பைச் செய்பவள், பிரம்மன் வடிவானவள் கோப்த்ரீ கோவிந்தரூபிணீ - காப்பவள், கோவிந்தன் வடிவானவள் ஸம்ஹாரிணீ ருத்ரரூபா - அழிப்பவள், ருத்ரரூபமானவள் திரோதானகரீ ஈஸ்வரீ - மறைப்பவள், ஈஸ்வரீ ஸதாசிவா, அனுக்ரஹதா - அருள்பவள், ஸதாசிவ வடிவானவள் என்று ஐந்தொழில் புரியும் தேவதா ரூபமாகவும் தேவியை லலிதா சகஸ்ரநாமம் போற்றுகிறது.

கராங்குலி-நகோத்பன்ன-நாராயண-தசாக்ருதி: - நாராயணனின் பத்து அவதாரங்களையும் தன் பத்து கைவிரல்களின் அசைவால் தோற்று விப்பவள் என்பது ஒரு நாமம். பஞ்ச-ப்ரேதாஸனாஸீனா - ஐந்து பிரேதங் களால் ஆன ஆசனத்தில் அமர்பவள் என்பது ஒரு நாமம். சக்தியின் உயிர்ப்பு இல்லையேல் தேவதைகளும் பிரேதங் கள் போல் ஆகிவிடுவார்கள் என்பது உட்கருத்து. ப்ரம்மா, விஷ்ணு, உருத் திரன், ஈசானன் ஆகிய தேவதைகள் சிம்மாசனத்தின் கால்களாக அமர்ந் திருக்க அதன்மீது திரிபுரசுந்தரி ஆரோ கணித்திருப்பது போன்று தீட்டப்படும் சித்திரம் இந்த உட்கருத்தையே குறிக் கிறது. சச்சிதானந்தமாகிய மரத்தின் கிளைகளில் எண்ணற்ற ராமர்களும், கிருஷ்ணர்களும், புத்தர்களும் கனி களாகத் தொங்குகிறார்கள் என்பது ஸ்ரீராமகிருஷ்ணர் வாக்கு. ஆற்றங்கரை மணல்துகள்களை எண்ணிவிடலாம் அவதாரங்களை எண்ணமுடியாது என்று புராண உபதேசம். மேற்கண்ட நாமங் களை இந்த உபதேசங்களின் பின்னணி யில் வைத்து தத்துவார்த்த ரீதியாக சிந்திக்கவேண்டுமே அன்றி அவற்றிற்கு நேர்ப்பொருள் கொள்ளலாகாது.

ஆப்ரஹ்ம-கீட-ஜனனீ என்ற நாமத்திற்கு அடுத்ததாக, வர்ணாச்ரம விதாயினீ (வர்ணாசிரமங்களை வகுத்த வள்) என்ற திருநாமம் வருகிறது. இதை வைத்து வர்ணாசிரம கட்டுப்பாடுகளை சக்தி உபாசனா மார்க்கம் ஆதரிக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வியாக்யானம் சொல்வது சரியான தாக இருக்காது என்பது என் தாழ்மை யான கருத்து.

ஸர்வ வர்ணாதிகாராச்ச நாரீ ணாம் யோக்ய ஏவ ச - லலிதா சகஸ்ர நாமமும், தேவி உபாசனையும், சாஸ் திரோக்தமாகவே பெண்களுக்கும், எல்லா வர்ணத்தினருக்கும் உரியதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆபாலகோப விதிதா - சிறுகுழந்தைகளும், இடையர்களும் உட்பட எல்லோராலும் அறியப் படுபவள் என்ற திருநாமத்தின் உட்பொருளும் இதனுடன் இணைத்துக் காணத் தக்கது.

வர்ணாசிரம விதாயினீ என்பதன் உண்மையான பொருள் எல்லா வர்ணத் தினரும் ஜகதீஸ்வரியாகிய மகாசக்தியின் பிரதிபிம்பங்களே என்பதேயாகும். சுவாமி விவேகானந்தர் கூறுகிறார் -

O India.. Forget not that thy social order is but the reflex of the Infinite Universal Motherhood; forget not that the lower classes, the ignorant, the poor, the illiterate, the cobbler, the sweeper, are thy flesh and blood, thy brothers.

தத்துவங்களின் பெருவெளியாக லலிதா சகஸ்ரநாமம் இருக்கிறது.

மூலப்ரக்ருதி என்னும் ஆதி இயற் கை வடிவானவள் - மூலப்ரக்ருதி:- இந்த ஆதி இயற்கை வெளிப்பட்டும், வெளிப் படாமலும் உள்ளது - வ்யக்தாவ்யக்த ஸ்வரூபிணி. வெளிப்படும் பேரியற்கை எங்கும் வியாபித்தும் (வ்யாபினீ) பல்வேறு வடிவாகவும் (விவிதாகாரா) உள்ளது. இந்த ஆதி இயற்கையை யாராலும் முழுமையாக அறிந்துவிட முடியாது. அதற்கு பிரக்ஞை என்னும் முழுமை அறிவு தேவைப்படுகிறது, அந்த அறிவு வடிவானவள் - ப்ரக்ஞான-கன-ரூபிணீ. இது சாங்கிய தரிசனம்.

அந்த முழுமைஅறிவு அனுபூதி யில் கைகூடும்போது, அறிபவன், அறிவு, அறிபடுபொருள் அனைத்தும் ஒன்றாக ஆகி விடுகிறது - த்யான த்யாத்ரு த்யேய ரூபா. தர்மம், அதர்மம் போன்ற இருமை நிலைகள் நீங்கி விடுகின்றன - தர்மாதர்ம விவர்ஜிதா. இது வேதாந்த தரிசனம்.

பசு பாச விமோசனி-பசுக்களாகிய ஜீவர்களின் பாசம் என்னும் தளையை விடுவிப்பவள். சிவஞான ப்ரதாயினி - சிவஞானத்தை அளிப்பவள். இது சைவ சித்தாந்தம்.

தத்துவங்களே அன்னையின் இருக்கைகளாகவும் (தத்வாஸனா), காற் சிலம்பின் மணிகளாகவும், கையில் ஏந்தி விளையாடும் பூக்களாகவும், மகா காளிக் கோலத்தில் அவள் அணியும் மண்டை யோட்டு மாலைகளாகவும் ஆகிவிடு கின்றன!

அதுவே லலிதா சகஸ்ரநாமம் அளிக்கும் பரவச அனுபவம். இந்த துதியைப் பொருள் உணர்ந்து படிக்கும் போதும், தியானிக்கும் போதும் தர்க்க மனத்தின் எல்லைகளுக்கு அப்பால் அது சுழன்றடித்துச் செல்கிறது. பக்தியுடன் இதைப் பாராயணம் செய்யும் ஒவ்வொரு முறையும் ஏதோவொரு நாமம் நம் மனதில் ரீங்கரித்து மொழியின் சாத்தியங் களை மீறி ஒரு ஆன்மிகப் பெருவெளிக் குள் நம்மை அழைத்துச் செல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செய்கிறேன்? எப்படி ஒருவன் சிந்தித்து. தர்க்கித்து அப்படி ஒரு பெயரை உருவாக்க முடியும்? வானத்திலிருந்து நட்சத்திரம் உதிர்ந்து நீர்த்தடாகத்தில் நீலத் தாமரையாக மறுநாள் பூத்தெழுவதுபோல அது வர வேண்டும். மேகச் சுவர்களைப் பிளந்து மின்னல் சாணிக்குழிக்குள் விழுந்து தங்கத் தூணாக மாறுவது போல வரவேண்டும் அந்தப் பாறைமீது. தனிமையில். வானம் மோனத்தில் மூழ்கியிருக்கும் நிலவு நாளில் அவள் முகத்தை நினைத்தபடியே இருக்க வேண்டும். அவளையன்றி வேறு எதையும் மனம் தீண்டாத ஒருமை கூடவேண்டும். மனப்பொந்திலிருந்து மின்மினிகள் கிளம்புவது போல ஒருவேளை என்னிலிருந்து அப்போது பெயர்கள் பீறிட்டெழக் கூடும். ஆயிரம் பெயர்கள். சகஸ்ரநாமம். லலிதா சகஸ்ரநாமம் எழுதியவன் அப்படித் தான் அடைந்திருப்பான். ஒவ்வொரு பெயரும் பிறிதில் பிரதிபலிக்கும் ஆயிரம் பெயர்கள். அவை கணந்தோறும் கலந்து பிறக்கும் கோடானு கோடிப் பெயர்கள். அப்பெயர்கள் எல்லாம் இணைந்து ஒன்றாகும் ஒரு பெயர். அப்பெயரில் இல்லாத எதுவுமே எங்குமில்லை. அப்படிப் பட்ட பெயர். அது தான் அவள் பெயர்

- ஜெயமோகனின் 'காடு' நாவலில்.. (தமிழினி வெளியீடு, பக்.288)

லலிதா என்ற சொல்லே மிக அழகானது. நித்திய சௌந்தர்யமும், நித்திய ஆனந்தமும் ஒன்றான அழகு நிலை என்று அதற்குப் பொருள். பரிபூரணத்தின் முழுமையான தரிசனத்தைத் தேடும் சாதகனை, பரதேவதையின் தியான, உபாசனா மார்க்கங்கள் வழியாக இட்டுச் செல்கிறது லலிதா சகஸ்ரநாமம். இந்து ஞான மரபின் உச்சமான உயர் தத்துவங்களை கவித்துவமாக எடுத்துரைக்கும் மணிமுடியான தோத்திர நூல் இது என்றால் மிகையில்லை.

*லலிதா சகஸ்ரநாமத்தைப் பொருளுணர்ந்து கற்பதற்கு எனக்குப் பேருதவி புரிந்த நூல்கள் இரண்டு. ஒன்று, அமரர் "அண்ணா" அவர்கள் உரையெழுதி ஸ்ரீராமகிருஷ்ண மடம் வெளியிட்டிருக்கும் லலிதா சகஸ்ரநாம பாஷ்யம் என்ற புத்தகம். அண்ணா அவர்கள் இந்து தர்ம புனித நூல்களைக் கற்றுணர்ந்த பேரறிஞர். ஸ்ரீவித்யா உபாசகரும் ஆவார். ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்களைத் தன் லட்சியமாகக் கொண்டு தன் வாழ்நாளின் பெரும்பகுதியை ஆசிரியராகவும், மாணவர்களின் வழிகாட்டியாகவுமே கழித்தவர்.*

*மற்றொன்று, சுவாமி தபஸ்யானந்தர் ஆங்கில மொழியில் எழுதியிருக்கும் புத்தகம். பல்வேறு வழிபாட்டு முறைகள் எங்ஙனம் சக்தி வழிபாட்டில் ஒன்றிணைகின்றன என்ற வரலாற்று ரீதியான விரிவான சித்திரத்தையும் அளிப்பது இந்த நூலின் சிறப்பு.*

*இவ்விரு நூல்களின் ஆசிரியர்களையும் நன்றியறிதலுடன் நினைவு கூர்கிறேன். ஸ்ரீலலிதா சகஸ்ரநாமத்தைக் கற்க விழைபவர்களுக்கு இவ்விரு நூல்களையும் பரிந்துரைக்கிறேன்.* □

(நன்றி – தமிழ்இந்து)

சங்ககாலத் தமிழ் மக்களுடைய வாழ்க்கையை நாம் ஆராய்ந்தால் தாய்த்தெய்வ வழிபாடு அவர்களிடையே நிலவியமை நன்கு புலனாகும். கொற்றவை வழிபாடே பழந்தமிழர்களுடைய மிகப் புராதன வழிபாடாகும். கொற்றவை பழையோள் என்ற பெயரால், குறிக்கப்படுவது இதனை நன்கு வலியுறுத்தும். நடுகல் நாட்டி வழிபாடும் வீரவணக்கமும் கொற்றவை வழிபாட்டோடு தொடர்புடைய வணக்கமேயாகும். வெற்றித் தெய்வமாகிய கொற்றவைக்குப் பலிகொடுத்து வழிபாடாற்றினர். வெற்றி பெற்ற வீரர் பலர் தமக்கு வெற்றியளித்த தெய்வத்துக்குக் காணிக்கையாகத் தமது தலையையே அறுத்துப் பலிகொடுத்த செய்திகளையும் நாம் சங்க நூல்களிற் பரக்கக் காணலாம். "காடுகிழாள்" என்ற பெயராலும் கொற்றவை குறிக்கப்பட்டாள். "கொற்றவை நிலை" எனத் தொல்காப்பியம் கூறுவதும் சங்ககாலத்தில் கொற்றவை வணக்கம் பெற்றிருந்த முதன்மையை வலியுறுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலலிதா சஹஸ்ரநாம வரலாறு

**இணையன்**

திரிலோக சஞ்சாரியும் தமிழ் மொழியை உண்டுபண்ணித் தமிழ் வளர்த்தவரும் சிறந்த சித்தரும் ஆகிய அகத்திய முனிவர் ஒருமுறை இமய மலைக்குச் சென்றார். அங்கு ஒரு இடத்தில் சில ரிஷிகள் தலைக்கீழாக தவம் செய்து கொண்டிருப்பதை கண்டார். அகத்தியர் அவர்களை பார்த்து "ரிஷிகளே தாங்கள் ஏன் இவளவு கடுமையான தவத்தைச் செய்து கொண்டு இருக்கிறீர்கள் ? காரணம் என்ன? " என்று வினவினார். அதற்கு அந்த ரிஷிகள் பூலோகத்தில் எங்கள் பரம்பரையில் அகத்தியன் என்று ஒருவன் இருக்கிறான். அவனுடைய மூதாதையர் நாங்கள். அவனது ஊழ்வினை (ப்ராப்தம்) அவன் திருமணம் செய்துக்கொண்டு ஒரு ஆண் குழந்தைக்கு தந்தை ஆகவேண்டும். இல்லறத்தால் உண்டாகும் கஷ்டங்களையும் இன்பங்களையும் அனுபவிக்க வேண்டும் என்பதாகும். ஆனால் அவனோ பிரமச்சரிய விரதம் பூண்டு திருமணம் வேண்டாம் என்று உறுதியாக இருக்கிறான். அவன் அனுபவிக்க வேண்டிய கஷ்ட நஷ்டங்களை நாங்கள் அனுபவித்துக் கொண்டு இருக்கிறோம் என்றனர். உடனே அகத்தியர் அந்த ரிஷிகளின் பாதங்களில் விழுந்து வணங்கி, அந்த அகத்தியன் என்பவன் நான் தான். எனக்காக தாங்கள் துன்புற வேண்டாம். நான் திருமணம் செய்து கொள்கிறேன், ஒரு குழந்தைக்குத் தந்தையும் ஆகிறேன், இது சத்தியம் என்று வாக்குறுதி அளித்தார். உடனே அந்த ரிஷிகள் தவத்தை விட்டு விட்டு அகத்தியருக்கு ஆசி வழங்கினர். பின்னர் மகிழ்ச்சியுடன் பிதுர் லோகம் சென்றனர். அன்றிலிருந்து அகத்தியர் தனது பிரமச்சரிய விரதத்திற்கு குந்தகம் விளைவிக்காத, தன்னை அனுசரித்து நடக்ககூடிய பெண் எங்கு இருக்கிறாள் என மூவுலகையும் சுற்றி தேடி வந்தார். அப்படித் தேடி வரும்போது பிரம்மலோகத்திற்கும் சென்றார். அங்கு பிரம்மதேவர் விஷ்ணு மாயையை ஓர் அழகிய கன்னிகையாக ஆக்கி வைத்திருந்ததைப் பார்த்தார். பிரம்மாவை வணங்கிவிட்டுப் பூலோகத்திற்கு வந்து விட்டார்.

இது இப்படி இருக்க... விதர்ப்ப தேசத்தில் கவேரன் என்னும் அரசன் குழந்தை வேண்டிப் பல ஆண்டுகள் தவம் செய்தார். பலன் இல்லை. கடைசியாக மனைவியுடன் சேர்ந்து சிவபெருமானைக் குறித்து கடுமையாகத் தவம் செய்தார். சிவபெருமான் அவர் முன் தோன்றி "இப்பிறவியில் உனக்கு புத்திர பாக்கியம் இல்லை. ஆதலால் வீணாக உன் உடலை வருத்திக் கொண்டிருக்காதே. தவத்தை விட்டுவிடு" என்றார். கவேரரும் தவத்தை விட்டுவிட்டு மனச்சோர்வுடன் வாழ்ந்து வந்தார். வயதும் ஆகிவிட்டது. இந்நிலையில் அகத்தியர் பெண் தேடிக்கொண்டு விதர்ப்ப மன்னன் கவேர ரிஷியிடம் வந்தார். கவேரரும் அவரது மனைவியும் அகத்தியர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். அப்போது அவர்களது சோகத்தைத் தனது சித்தியினால் அறிந்த அகத்தியர் "புத்திர பாக்கியம் உண்டாவதாக!" என்று ஆசீர்வதித்தார். இருவரும் திடுக்கிட்டு "ஸ்வாமி, எங்களுக்கு இப்பிறவியில் புத்திர பாக்கியம் கிடையாது என்று சிவபெருமானே கூறிவிட்டார், அப்படி இருக்க தாங்கள் புத்திர பாக்கியம் பெருக என ஆசீர்வதித்து உள்ளீர்கள். இது நடக்க கூடியதா, ? நாங்களும் மிகுந்த வயோதிபர்கள் ஆகிவிட்டோம் , தங்கள் வார்த்தை பொய்க்கலாமா? என்று கண்ணீர் மல்க வினவினர்..அகத்தியர் புன்முறுவலித்து கூறுகிறார். "தாங்கள் கூறியது அனைத்தும் உண்மை. ஆனால் எனது தபோ வலிமையால் நான் இப்போது ஒரு பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையை கொடுக்கின்றேன். இவளைத் தக்க வயதில் எனக்கே திருமணம் செய்து தரவேண்டும்" என்று கூறி தனது இரு கரங்களையும் முன் நீட்டி கண்மூடி, பிரம்மலோகத்தில் விஷ்ணு மாயையாக உள்ள கன்னிகையைத் தனது தவ வலிமையால் அப்போது பிறந்த குழந்தையைப் போல் ஆக்கி கவேர அரச-அரசியின் கையில் கொடுத்தார். இவ் விஷயத்தை தெரிந்துக்கொண்டு தேவர்கள் அக்குழந்தையைப் பார்க்க வந்தனர். அக்குழந்தை பெண்ணிற்குரிய 64 லக்ஷணங்களும் நிறைந்து மிக அழகாகத் திகழ்வதைப் பார்த்து லோபாமுத்ரா (அறுபத்து நான்கு லட்சணங்களும் குறையாதவளே) எனப் பெயரிட்டு அழைத்தனர். கவேர அரசரின் மகளானதால் மக்கள் அவளைக் காவேரி என்று அழைத்தனர். காவேரி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தாள். இது நாள் வரையும் குழந்தை இல்லாததால் சோகமாக இருந்த கவேரரும் அவரது மனைவியும் மிக்க சந்தோஷத்துடன் அவளது மழலையையும், தவழ்ந்து நடப்பதையும் கேட்டும் பார்த்தும் ரசித்தனர். விஷ்ணு மாயையே பிராந்தி இருப்பதால் மிக விரைவிலேயே மழலை மாறி மிகத்தெளிவாக பேச ஆரம்பித்தாள் காவேரி. காவேரிக்கு ஏழு வயதாயிற்று. விதர்ப்ப நாடும் வளம் கொழிந்து விளங்கிற்று. ஒரு நாள் ஸ்ரீ சர்யானந்தநாதர் என்னும் ஸ்ரீவித்யா குருவானவர் வந்து அரசனிடம் " நான் சாதுர்மாஸ்ய விரதம் இருக்க விரும்புகிறேன், ஆதலால் உன்னுடைய நந்தவனத்தில் ஒரு குடிசையமைத்து என் கருத்தறிந்து பணிகள் செய்ய ஒரு பணியாளையும் ஏற்படுத்தி தருவாயாக!" என்று கூறினார். அரசர் சிந்தித்தார். சர்யானந்த நாதரோ மிகவும் கோபக்காரர். நந்தவனத்தில் பர்ணகசாலை அமைத்துக் கொடுத்துவிடலாம். இம்முனிவர் கருத்துணர்ந்து பணிசெய்ய ஆட்களுக்கு என்ன செய்யலாம்? நாமே செய்யலாம் என்றால் அதிக வயசாகிவிட்டது. அரசிக்கும் வயதாகிவிட்டது. இக்கட்டில் மாட்டிக் கொண்டோமே என்ன செய்வது என மனவருத்தத்துடன் மிகவும் சோகமாக இருந்தார். இவ்வாறு தாய் தந்தையர் சோகமே உருவாக இருப்பதைப் பார்த்த லோபாமுத்திரை அவர்களைப் பார்த்து ஏன் வருத்தமாக இருக்கிறீர்கள்? இது நாள்வரை தங்களை நான் இவ்வாறு பார்த்தது இல்லையே ? என்ன காரணம்? என வினவினாள். அரசர் "காவேரி! கண்மணி! நமது நந்தவனத்தில் தவம் இயற்ற ஒரு முனிவர் வந்துள்ளார். அவரது மனம் அறிந்து பணியாற்ற ஒரு பணியாளும் கிடைக்கவில்லை. வயோதிபர்களாகிய எங்களாலும் இயலாது. என்ன செய்வது? அவருக்கோ சீக்கிரம் கோபம் வந்து சாபமிட்டுவிடுவார். அது தான் பயமாக உள்ளது" என்றார். உடனே லோபாமுத்திரை "நான் உள்ளேன், ஏன் கவலைப்படுகிறீர்கள்? நான் அவர் மனமறிந்து பணிவிடைகள் செய்து அவரை மகிழ்விப்பேன்" என்றாள். "எங்களுக்குத் தெரியும், நீ மற்ற குழந்தைகள் போல அல்ல. தெய்வக் குழந்தை, இருந்தாலும் இவ்வளவு காலம் குழந்தை இல்லாதிருந்து இப்போதுதான் உன்னால் அக்குறை நீங்கி மகிழ்ச்சியாக இருக்கிறோம். நீ அவருக்கு பணிசெய்யும்போது சிறு பிள்ளைத்தனமாக ஏதாவது தவறுசெய்து விட்டால் அவர் சபித்து விடுவாரோ என்று பயமாக இருக்கிறது" என்றனர். ஒரு குறையும் வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லியவாறே இரண்டு சேடியருடன் முனிவரின் தவச் சாலைக்குச்சென்று அவர் பாதம் பணிந்து நல்ல பணிசெய்ய என்னை வாழ்த்தி அருள்செய்வீர் என்று பணிகள்செய்ய ஆரம்பித்தாள். காவேரிதேவியின் பணிவிடையால் மனம் மிக மகிழ்ந்த சர்யானந்தநாதர் லோபாமுத்திரைக்கு ஸ்ரீவித்தையை உபதேசித்து இவ்வித்தையை செபித்து வந்தால் உனக்கு எல்லா சிரேயசும் உண்டாகும், எல்லா சித்திகளும் பெற்று நினைத்த உருவம் பெறலாம். இவ்வித்தை ஞானத்தை அளிக்கக்கூடியது என்று ஸ்ரீவித்தையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையைச் சொல்லி ஆசீர்வதித்து சாதுர்மாஸ்ய விரதத்தை முடித்து அரசன் அரசியை ஆசீர்வதித்து சென்றார். அன்றிலிருந்து லோபாமுத்திரை ஸ்ரீவித்தையை இடைவிடாது ஜெபித்து சகல சித்திகளையும் ஞானத்தையும் பெற்றுச் சிறந்து விளங்கினாள். காவேரிதேவிக்கு 16 வயது ஆயிற்று. அகத்தியர் விதர்ப்ப தேசத்து கவேர அரசரிடம் வந்து உனது பெண்ணைக் கன்னிகாதானம் செய்துகொடு என்று கேட்டார். அரசனும் அரசியும் மகளைப் பிரிந்து இருக்கவேண்டுமே, பதினாறு வருடம் வளர்த்துக் காடும் மழையும் சுற்றித் திரியும் இம்முனிவருக்குத் திருமணம் செய்து கொடுத்தால் இது நாள் வரையும் ஒரு துன்பமும் சிறிதும் அறியாத இவள் கஷ்டப்பட வேண்டுமே என்று மனம் வருந்தினர். காவேரி அவர்கள் மனதைத் தேத்தி என்னைத் திருமணம் செய்துகொள்ளத் தானே குழந்தை இல்லாத உங்களுக்கு அக்குறையை போக்கி என்னைக் குழந்தையாகக் கொடுத்தார்? அப்போது சம்மதித்து விட்டு இன்று மனவருத்தம் அடைந்து கண்ணீர் விடுவது சரியல்ல. எனக்கு ஒரு குறையும் வராது. தாங்கள் அவருக்கு வாக்களித்தபடி என்னைக் கன்னிகாதானம் செய்து கொடுங்கள் என்று கூறி அவர்கள் மனதைத் தேற்றினாள். அகத்தியர் லோபாமுத்திரை திருமணம் சிறப்பாக நடந்தேறியது. ஆடை ஆபரணங்களைக் களைந்து மர உரி தரித்து அகத்தியருடன் லோபாமுத்திரை புறப்பட்டாள். கண்களில் நீர்மல்க கவேரரும் அவரது மனைவியும் சேடியரும் நாட்டு மக்களும் வழியனுப்பி வைத்தனர். அவ்விருவரும் பாரதநாடு முழுவதும் உள்ள தலங்களுக்குச் சென்று மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகியவற்றை தரிசித்து நீராடிக் கடைசியாக காஞ்சிபுரம் வந்தடைந்தனர். காஞ்சிபுரத்தில் பகவான் யக்ரீவர் சாட்சாத் காமேஸ்வர-காமேஸ்வரியிடம் ஸ்ரீவித்தை உபதேசம் பெற்று காமட்சியம்மனுக்கு ஸ்ரீவித்யா உபாசனை முறைப்படி நவாவரண பூஜை ஸ்ரீவித்யா ஜபம், ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம த்ரிசதீ நாம அர்ச்சனைகள், ஆராதனைகள் செய்து கடைசியில் லோபாமுத்திரையையே சுவாசினி பூஜா செய்து வந்தார். இது அநேக வருடங்களாக நடந்து கொண்டிருக்கிறது. யக்ரீவர் செய்யும் பூஜையைத் தரிசிக்க முப்பத்து முக்கோடி தேவர்களும்வருவார்கள். காஞ்சிபுரத்திற்கு வந்த அகத்தியர் காமாட்சியம்மனைத் தரிசிக்க சென்றார். வழியில் வந்த தேவர்கள் அவரைப் பார்த்து நீங்கள் எவ்வளவு பாக்கியவான். உங்கள் மனைவி லோபாமுத்திரையை சாட்சாத் விஷ்ணு பகவானாகிய யக்ரீவர் தினந்தோறும் தான் செய்யும் பூஜையின் கடைசியில் அம்பிகையாகப் பாவித்து பூஜை செய்கிறார். அவரும் அப்பூசையை ஏற்று அவரை ஆசீர்வதிக்கின்றார். என்ன அதிசயம்? பூஜையின் முடிவில் மனைப் பலகையைப் போட்டதும் லோபாமுத்திரை வருகிறார். பூஜை முடிந்ததும் மறைந்துவிடுகிறார் என்றனர். அகத்தியர் இல்லை இல்லை. அது என் மனைவி இல்லை. நீங்கள் வேறு யாரையோ பார்த்து என் மனைவி லோபாமுத்திரை என்று தவறாக எண்ணி உள்ளீர்கள். எனது மனைவி திருமணம் செய்து கொண்ட நாளிலிருந்து ஒரு நிமிடம் கூட என்னைப் பிரிந்து இருந்தது கிடையாது. அவள், ஒரு மனைவி கணவனின் சொல்லைத் தட்டாமல் கணவன் குறிப்பறிந்து எவ்வாறு நடந்துக் கொள்ள வேண்டுமோ அவ்வாறே நடந்து கொள்கிறாள். நீங்கள் கூறுவது தவறு என்று மறுத்தார். தேவர்கள் இல்லை இல்லை நாங்கள் கூறுவது சரிதான். தாங்களே நேரில் வந்து பாருங்கள் என்று கூறினார். என்ன ஆச்சரியம்!!!! தேவர்கள் கூறியது போலவே பூஜையின் முடிவில் சாட்சாத் லோபாமுத்திரையே நேரில் வந்து யக்ரீவரால் கொடுக்கப்பட்ட குலாம்ருதத்தை சிறிது பருகிவிட்டு மீதத்தை கொடுக்க, அதை யக்ரீவர் பய பக்தியுடன் வாங்கி அருந்தி, எல்லோருக்கும் பிரசாதமாக கொடுத்தார். அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகத்தியர் உற்று உற்று பார்த்து "ஆமாம் லோபாமுத்திரையேதான்". இது அநேக வருடங்களாக நடைபெறுவதாக தேவர் கள் கூறினார்கள். ஆனால் அவளோ நம்மை விட்டு ஒரு நிமிடம்கூடப் பிரியாமல் கூடவே தான் இருந்தாள். சித்தி பெறுவதற்காக ஜபமோ, தவமோ செய்து நான் ஒரு நாளும் பார்க்கவில்லையே? இது எப்படி முடியும்? என ஆச்சரியப் பட்டார்.

பரணகசாலைக்கு வந்து லோபா முத்திரையிடம் நீ யக்ரீவர் செய்யும் சுவாசிநீ பூஜைக்கு போகிறாயா? சித்தி எப்படி உண்டாயிற்று? நீ தவமோ, த்யானமோ, ஜெபமோ செய்ததை நான் பார்க்கவே இல்லையே ? என்று கேட்டார். அதற்கு லோபாமுத்திரை "எனக்கு 7 வயது இருக்கும் போது எங்கள் நாட்டிற்கு சர்யானந்தநாதர் என்னும் முனிவர் சாதுர் மாஸ்ய விரதத்திற்கு வந்தார். அவருக்கு மனம் குளிரப் பணிவிடைகள் செய்தேன். அதனால் மகிழ்ந்த அவர் ஸ்ரீவித்யா மந்திரத்தை உபதேசித்தார். அன்றிலி ருந்து இடைவிடாது அம்மந்திரத்தை ஜெபித்து வருகிறேன். அம்மந்திர மகிமையால் எனக்கு நினைத்த உருவம் எடுக்கக்கூடிய ஆற்றல் கிடைத்தது என்றார். நானும் நிறைய கேள்விப்பட் டுள்ளேன். படித்துள்ளேன். எல்லா மந்திரங்களையும் விட மிக உன்னதமான மந்திரம் ஸ்ரீவித்தையே என்றும் ஆனால் நீ அம்மந்திரத்தின் மகிமையால் எம் முயற்சியும் இன்றி சித்திகளையும், மேன் மைகளையும் பெற்றுள்ளாய் என்பதை நேரடியாகக் காண்கிறேன். எனக்கு அந்த மந்திரத்தை உபதேசிக்கிறாயா? என கேட்டார். மனைவியிடத்தில் கணவன் உபதேசம் பெறுவது சரியல்ல. மனைவி தானே சொன்னாள் என்று சிரத்தை இருக்காது. அது மட்டுமல்ல தங்களுக்கு உபதேசிப்பதற்காகவே இங்கு யக்ரீவர் காத்துக்கொண்டிருக்கிறார். அம்பிகை கட்டளை. தங்களுக்கு உபதேசித்த பிறகுதான் அவருடைய இவ்வுருவம் மறைந்து வைகுண்டத்திற்குச் செல்ல வேண்டும் என்பது. ஆகவே அவரிடம் சென்று உபதேசம் பெறுங்கள் என்று சொல்லிவிட்டார். சில நாட்கள் கழிந்தன. லோபாமுத்திரை அகத்தியரைப் பார்த்து "என்ன? உபதேசம் பெற்றுக்கொண்டீர் களா? என்ன என்ன உபதேசம் செய்துள் ளார்? இன்னும் எவ்வளவு பாக்கி உள்ளது?" என்று கேட்டார். என்ன? உபதேசமா? கூட்ட நெரிசலில் அவர் சமீபம் செல்லவே முடியவில்லை. நான் வேறு குள்ளன். எல்லோரும் வணங்கி யதும் கை அசைத்து உட்கார சொல்லி விடுகிறார் அவ்வளவுதான் கிட்டவே போக முடியவில்லை என்றார் அகத்தியர். நாளை நீங்கள் சென்று எல்லோரும் அமர்ந்த பின்னரும் நின்று கொண்டே இருங்கள். யக்ரீவர் ஏன் நிற்கிறீர்கள் என கேட்பார். அப்போது லோபாமுத்திரை அனுப்பினாள் என்று கூறுங்கள் என்று உபதேசம் பெற வழிசொல்லி அனுப்பி னாள் காவேரி. லோபாமுத்திரை சொல்லி யவாறே அகத்தியரும் தேவர்கள் எல லோரும் அமர்ந்த பின்னரும் நின்றுக் கொண்டே இருந்தார். யக்ரீவர் பார்த்து ஏன் நிற்கின்றீர்? உட்காரும் எனக் கூறியபோது, லோபாமுத்திரை அனுப்பி னாள் என்றார். அப்படியா? வாரும் வாரும், உங்களுக்காகத்தானே இத்தனை நாட் கள் காத்துக்கொண்டுள்ளேன். முதலி லேயே சொல்லி இருந்தால் இதற்குள் எல்லாவற்றையும் உபதேசித்து விட்டு வைகுண்டம் சென்றிருப்பேனே? பரவா யில்லை இன்றிலிருந்து ஆரம்பிக்கிறேன் என்று கூறி உபதேசிக்க ஆரம்பித்தார். என்ன என்ன உபதேசித்தார் என்பதை அகத்தியர் ஸ்ரீ லலிதா சஹஸ்ர நாம மகாத்மியம் என்ற வரலாற்றில் பட்டிய லிட்டுக் கூறுகின்றார். □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளியின் அருள் பெற்ற காளமேகம்

**இணையன்**

பிறப்புற்றேன் காளியிடம் பேரன்புற்றேன்,
பேச்செல்லாம் கவிமழையாய்ப் பெருகும் ஞானம்
வரப்பெற்றேன், செல்வத்தின் வளமும் பெற்றேன்,
மன்னருடன் சரிசமமாய் மகிழும் வண்ணம்
சிறப்புற்றேன்.

என்று மஹாகவி காளிதாசனுக்காகக் கவிஞர் கண்ணதாசன் எழுதிய பாடல் வரிகளுக்கொப்ப, காளிதேவியின் அருளால் கவிபாடும் திறம்பெற்றுத் தமிழிலே கவிமழை பொழிந்த மாபெரும் கவி காளமேகம் ஆவார். இவரது இயற்பெயர் வரதன் என்பதாகும். பிறப்பால் வரதன் ஒரு வைணவனானாலும் மோஹனாங்கி எனும் சைவ சமயத்தைச் சேர்ந்த நடன மாது ஒருத்தியை அவன் மனதாரக் காதலித்தான். அவளும் அவன்மேல் தீராத மோஹம் கொண்டிருந்தாள்.

ஒரு முறை நாட்டிய நிகழ்ச்சி யொன்றில் மோஹானங்கி

உங்கையிற் பிள்ளை உனக்கே
அடைக்கலமென்(று)
அங்(கு)அப் பழஞ்சொற் புதுக்குமெம்
அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்
போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப
ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங்
காணற்க
இங்(கு)இப் பரிசே எமக்கெங்கோன்
நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர்
எம்பாவாய்.

என்ற திருவெம்பாவைப் பாடலுக்கு அபிநயம் பிடித்து ஆடுகையில் அவளது தோழிமார்கள், இப்படிப்பட்ட சைவ சமயப் பாடலுக்கு ஆடும் அவள் ஒரு வைணவனைக் காதலிப்பது குறித்து கேலியாகப் பேசவே அவள் மனம் வேதனைப் பட்டாள். அன்று தன்னைக் காணத் தன் விட்டிற்கு வந்த வரதனுக்குக் கதவைத் திறக்காமலேயே இருந்துவிட்டாள். அவள் தான் வைணவனாக இருப்பது குறித்து இவ்வாறு பிணங்குகிறாள் என்பதைத் தெரிந்து கொண்ட வரதன் அக்கணமே சைவ சமயத்தில் சேர்ந்தான்.

அதன்பின் ஒரு நாள் இரவில் வரதன் ஒரு காளி கோவிலில் தங்கி உறங்கிக்கொண்டிருந்தான். அதே கோவிலில் நீண்ட காலமாகக் காளியின் அனுக்கிரஹம் வேண்டி வேறொரு அந்தணன் தவம் செய்துகொண்டிருந் தான். அவனும் அன்றிரவு கோவிலி லேயே உறங்கிக்கொண்டிருந்ததான். காளிதேவி அவன் தவத்துக்குப் பலன ளிக்க ஒரு சிறுமியாக உருவெடுத்து, தன் வாயில் தாம்பூலம் தரித்துக்கொண்டு அவ்வந்தணனை எழுப்பி அவனது வாயில் தாம்பூலத்தைத் துப்ப எத்தனித் தாள்.

யாரடி எச்சிற்றாம்பூலத்தை என் வாயில் உமிழ்வது

என்று அவ்வந்ததணன் கோபம் கொண்டுரைக்கவே அவள் அருகில் படுத்திருந்த வரதனை எழுப்பி அவன் வாயில் தாம்பூலத்தை உமிழ முயற்சிக் கையில், அவன் அவள் மோஹனாங்கி என்று எண்ணி, எங்கே தான் வாய் திறவா விடில் மறுபடியும் கோபித்துக்கொள் வாளோ என்றெண்ணி வாயைத் திறந் தான். அன்னையின் எச்சில் தாம் பூலத்தை உண்ட வரதன் கவிபாடும் புலமை பெற்றான். வாயைத் திறந்து சொல்லும் சொற்களனைத்தும் கவி மழையாய்ப் பொழிந்ததால் வரதனை அனைவரும் காளமேகம் என்று மரி யாதையுடன் அழைக்கலாயினர்.☐

(நன்றி - இணையம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2003இல் இடம்பெற்ற முதலாவது மகோற்சவத்தின் தேர்த்திருவிழாக் காட்சிகள்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளி வழிபாடு

காளி, மகாசத்தியின் பல்வேறு தோற்றங்களில் ஒன்று. தேவி வழிபாடு தெய்வ வழிபாட்டிலேயே மிகப் பழைமை யானது. சிந்துவெளி நாகரிக நகரமான மொகஞ்சதாரோவில் தாய்த் தெய்வ வழிபாடு இருந்தமைக்கான எச்சங்கள் கிடைத்துள்ளன. வேத காலத்திலும் தேவி வழிபாடு இருந்தது. மகாபாரதமும் புராணங்களும் சக்தி வழிபாட்டைக் கூறுகின்றன. தேவிகளுள் காளித் தெய்வத்தின் வழிபாடு இந்தியாவில் புகழ் பெற்று விளங்குகின்றது.

காளியின் தோற்ற வரலாற்றைப் புராணங்கள் பல்வேறு விதமாகக் கூறு கின்றன. சும்பன், நிசும்பன் என்ற அசுர உடன் பிறப்புகள் நான்முகனை நோக்கிப் பல்லாயிரமாண்டு தவமியற்றி, பெண் களைத் தவிர வேறு யாராலும் தங்களுக்கு இறப்பு நேரக்கூடாது என்ற வரம் பெற்றனர். நான்முகன் தந்த வரத்தால் நெஞ்சுரமேறி அரசாட்சி அமைத்தனர். இவர்கள் தேவர்களுடன் போராடி அவர்களையும் வென்றனர். இரத்தபீசன், தாம்பரன் போன்ற அசுரர்களுடன் இணைந்து கொண்டனர். இவர்களுள் இரத்தபீசன் அதிசயமான சக்தி உடை யவன். இவனுடைய உடலில் இருந்து சொட்டும் ஒவ்வொரு துளி இரத்தமும் பல அசுர வீரர்களைத் தோற்றுவிக்கும் வல்லமை கொண்டிருந்ததால் அழிக்க முடியாத பெருவீரனாய் இவன் கருதப் பட்டான். இவன் துணையும் கிடைக்கவே சும்ப நிசும்பர்களின் தொல்லை அதிக மானது. கதிரவனும் நிலவும் கூட இவர்கள் ஆணை வழி நடக்க நேரிட்டது. பலவாறாய்த் துன்பமுற்ற தேவர்கள் தங்கள் குருவான பிரகஸ்பதியிடம் முறையிட, அவர் தேவியை நினைந்துத் தவமியற்றுவதே வழியென்று அவர் களிடம் கூறினார். தேவர்கள் அனைவரும் இமயமலைச் சாரலையடைந்து மகா தேவியை நினைந்துருகி மந்திர உச்சரிப்பு களுடன் கடுந்தவம் இயற்ற, தேவி தோன்றிக் குறை கேட்டாள். தேவர்கள் சும்ப நிசும்பர்களின் தொல்லைகளை விளக்கி, தங்களைக் காப்பாற்ற வேண்டினர்.



தேவர்களின் நிலை கண்டு இரங்கிய தேவி சும்ப நிசும்பர்களை அழிக்கத் தன் உடலினின்றும் ஒரு சக்தியைத் தோற்றுவித்தாள். பராசக்தி யின் உடலில் இருந்து தோன்றியதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌசிகையென்றும், கருமை நிறத்தோடு பார்க்க அஞ்சும் கோலத்தில் விளங்கிய தால் பத்திரகாளி என்றும், அசுரர்களுக்கு அளவற்ற அச்சத்தைத் தருபவளாய் இருந்ததால் காளராத்திரி என்றும் பெயர் பெற்றாள்.

சும்பனின் ஆட்சிக்குட்பட்ட காடொன்றில் தங்கியிருந்த காளியின் குரலினிமை, அழகு இவற்றைத் தன் காவலர்கள் வாயிலாகக் கேள்வியுற்ற சும்பன் காளியை மணக்க விரும்பித் தூதனுப்பினான். தன்னைப் போரில் வென்றால் மணப்பதாகக் காளி மறு மொழியிறுக்க, சும்பன் அதை ஏற்றுப் படையனுப்பச் சும்பனின் படைத்தலை வர்கள் ஒவ்வொருவராய்ப் போருக்கு வந்து தோற்றனர். இரத்தம் கீழே சொட்டு முன்னே காளி உறிஞ்சிக் குடித்தமையால் புது அசுரர்கள் தோன்றுவது இயலாது போனதுடன், இரத்தபீசனும் விழுந்து மாண்டான். சண்டன், முண்டன் என்ற இரு படைத்தலைவர்களின் தலை களையும் அறுத்து அவர் தம்குருதியைக் குடித்தமையால் காளி, சாமுண்டி என்னும் பெயர் பெற்றாள். பின்னர் நிசும்பனும், சும்பனும் போர்க்களம் புகுந்து காளியால் தாக்குண்டு மடிந்து போனார் கள் என்று ஸ்ரீதேவி பாகவதம் என்னும் நூல் கூறுகிறது.

இப்படித் தோன்றிய காளி தன் சினக்குறிப்பு அடங்காமல் ஆலங்காட்டில் தங்கியிருந்ததாகவும், காளியின் சினம் தீர்க்க வேண்டித் தேவர்களின் வேண்டு கோளேற்றுச் சிவபெருமான் ஆலங்காடு வந்து காளியுடன் ஆடற்போட்டியொன்று மேற்கொண்டதாகவும், அதில் ஆட்ட வேகத்தில் வலச் செவியிலிருந்து நழுவி விழுந்த காதணியை ஆட்டத்தை நிறுத்தாமலேயே வலக்காலால் தூக்கி இறைவன் தன் செவியில் அணிந்து கொண்டதாகவும், வலக்காலை வானோக்கி உயர்த்தி ஆடற்குறிப்புக் காட்டமுடியாத காளி தோல்வியுற்று, வெட்கிச் சினம் தவிர்த்ததாகவும் மற்றொரு புராணம் கூறுகிறது. இந்தத் தாண்டவம் என்றும் புராணங்கள் கூறும்.

தாருகாசுரனுடன் முருகப்பெரு மான் போர் செய்யும்போது முருகனின் படைக்கலங்கள் அசுரர்களைத் தாக்க, காயம்பட்ட இடத்திநின்று குருதி ஒழுக, கீழே சிந்திய குருதித் துளிகளிருந்து பல அசுரர்கள் முளைக்க, முருகப்பெருமான் செய்வதறியாது தன்தாய் உமையன் னையை நினைத்து வணங்கினார். உடன் அன்னை தன் அம்சமான கரிய நிறங் கொண்ட காளியைத் தோன்றச்செய்து போர்க்களம் அனுப்பினாள். சிவந்து நீண்டு தொங்கிய நாக்குடனும், அனல் பறக்கும் சிவந்த கண்களுடனும் , கூரிய பற்களுடனும், தலைவிரி கோலமாய், செவ்வாடையுடுத்தி எட்டுத் திருக்கை களிலும் படைக்கலங்கள் கொண்டு போர்க்களம் புகுந்த காளிதேவி அசுரர் களுடன் போரிட்டாள். அடிபட்டவர் உடலி லிருந்து குருதி சிந்தும் முன்பாகவே, காளிதேவி விரைந்து அவ்விதம் கொட்டும் குருதியை ஒவ்வொரு அசுரனின் உடம்பி லிருந்தும் முற்றிலுமாய்க் குடித்துவிடவே அசுரப்படை பெருக வழியின்றி மடிந்து அழிந்தது. இது காளியின் தோற்றம் குறித்து மற்றொரு புராணம் காட்டும் கதை.

காளிபற்றிய புராணக்கதைகள் பல. அவற்றுள் இன்னுமொரு கதை பின்வருமாறு: தாருகாசூரனால் துன்ப மடைந்த தேவர், பெண்களின் உருவங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு சிவபெருமானை அடைந்து தமது குறை கூறி வழிபட்டனர். பெண்ணாலன்றி வேறு எவராலும் இறவாத தாருகாசுரனை வெல்லச் சிவமூர்த்தி சக்திக்குக் கட்டளையிட்டார். அந்நேரத்தில் தேவியின் ஒரு கலை சிவமூர்த்தியின் விஷக் கறை படிந்து கனற் கண்ணிற் பிறந்து வெளிப்பட்டது. அவ்வுரு காளமாகிய விஷக்கறை படிந்து வந்ததால் காளி எனப் பெயரடைந்தது.

இவ்வகையாகத் தோன்றிய காளி தனது கோபாக்கினியால் தாருகனை நீறாக்கினாள். இவளிடம் பிறந்த கோபத்தீ குழந்தை உருக்கொண்டமுந்தது. இதனை நோக்கிய காளி குழந்தைக்குப் பாலூட்டினாள். சிவமூர்த்தி குழந்தையையும் பாலையும் தம்மிலொடுக்கினார். ஒடுக்கிய சிவமூர்த்தியிடமிருந்து எட்டுருக் கொண்டு வைரவ மூர்த்தி தோன்றினார். காளி கருநிறம் கொண்ட கோபம் பொருந்திய உக்கிர வடிவம். வைரவரும் கருநிறம் கொண்டவடிவினரே.

தில்லை மான்மியக் கதையின் தில்லையிலிருந்த காளி மிகவும் கொடுஞ் செயல்களைச் செய்வதாகவும் சிவ பெருமான் காளியுடன் நடனமாடி அவளை வென்று எல்லையைக் காக்கும் தெய்வமாக்கியதாகவும் அத்தெய்வம் ஒரு தீர்த்தத்தில் மூழ்கிக் கோரவடிவம் நீங்கிச் சாந்த வடிவம் பெற்றதாகவும் கூறப்பட்டுள்ளது.

கந்த புராணத்தில் பத்திரகாளியின் உற்பத்தி பற்றிய கதை ஒன்றுண்டு. சிவபெருமானை மதிக்காமல், சிவத்துரோகமாக தக்கன் யாகம் செய்தபோது தக்கனின் மகளான தாட்சாயினி கோபம் கொண்டார். தக்கனின் மகளாகிய இவர், தனது கணவனான சிவபெருமானை யாகத்துக்கு அழைக்க வேண்டும் என்று தந்தையிடம் சென்று வேண்டினாள். தக்கனோ அதற்குச் செவிசாய்க்காமல் சிவபெருமானைக் கேவலமாக ஏசினான். அதனால் அவனது யாகம் அழிந்து போகும்படி சாபமிட்டுவிட்டு சிவபெருமானிடம் திரும்பி வந்தாள்.

சிவபெருமான் கோபங்கொண்டு சிந்தித்தார். அவரது சிந்தையிலிருந்து அகோர வீரபத்திரர் அவதரித்தார். அப்போது அம்பிகை தன் கோபக்கனலில் இருந்து பத்திரகாளியைப் படைத்தாள். வீரபத்திரரும் பத்திரகாளியும் சென்று தக்கனின் யாகத்தை அழித்தனர். பத்திரர் காளி இணைந்து பத்திரகாளி என்றும் பெயர் தோன்றியிருக்கலாம்.

எருமைத் தோற்றங்கொண்ட மகிடாசுரன் என்னும் கொடிய அசுரன் செய்த சொல்லொணாக் கொடுமைகளைத் தாங்கமாட்டாதவர்களாகி தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவபெருமான் மிகவும் கோபம் கொண்டார். அக்கோபம் பெண்ணுருவாகியது. பிரமதேவன், இந்திரன், இயமன், வருணன், முதலானவர்களின் சக்திகள் ஒன்று திரண்டு அப்பெண்ணுருவை அடைந்தது. அத்தோடு அக்கடவுளர்களின் ஆயுதங்களுக்கு நிகரான சக்தி படைத்த ஆயுதங்களும் அப்பெண்ணுருவின் கைகளில் சென்று சேர்ந்தது.

அவ்வுருவே கருநிறம் பொருந்திய அகோர உக்கிர வடிவம் கொண்ட காளியாகும். காளி சிம்ம வாகனத்தில் ஏறிச்சென்று மகிடாசுரனை வதைத்துக் கொன்றாள் என்பது மார்க்கண்டேய புராணத்துக் காளி பற்றிய வரலாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிசாசுரமர்த்தினி எனக் கூறப்படும் காளியைச் சிலப்பதிகாரம் கொற்றவை என்றும், ஆடல் கண்டருளிய அணங்கு என்றும் கூறுகிறது. இந்நூலில் கோவலனும் கண்ணகியும் மதுரை செல்லும் வழியில் வேட்டுவர் ஊரிலிருந்த கொற்றவை கோயிலில் தங்கினர் என்றும் அத்தருணத்தில் ஆவேசம் கொண்ட சாலினி கண்ணகியைத் தெய்வமாகக் கொண்டாடப் போவதை முன் கூட்டியே தெரிவித்தாள் என்றும் கூறப்பட்டுள்ளது. வழக்குரை காதையில் இளங்கோவடிகள் கொற்றவை வேறு. காளி வேறு என்று குறிப்பிட்டுள்ளார். துர்க்கை கண்ணகியாகப் பிறந்தாள் என்று சிலப்பதிகார உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றார். பிற்காலத்தில் கண்ணகியைக் காளியின் வடிவமாகவே கருதினர்.

கோவலன் கதை என்னும் அம்மானைப் பாடலில் கண்ணகி இறுதியாகத் திருவொற்றியூருக்கு வந்து வட்டபுரியம்மன் என்ற பெயருடன் வழிபடப்பட்டாள் என்று கூறப்பட்டுள்ளது. இயன்றளவும் திருவொற்றியூர் சிவன் கோவிலில் உள்ள துர்க்கை அம்மனைக் கண்ணகித் தெய்வமாகவே கருதி விழா எடுக்கின்றனர்.

காளி வழிபாடு தமிழகத்தில் மிக ஆழமாக வேர் கொண்ட வழிபாட்டு முறையாகும். சங்க காலத்தில் பாலை நிலத்தின் தெய்வமாக மக்கள் காளியை வழிபட்டனர். காடுகிழாள், காடுகிழவோள், காடுகாள் என்று சங்க கால மக்கள் காளியைக் குறிப்பிட்டனர். வெற்றி அல்லது கொற்றத்தைத் தருபவள் கொற்றவை அல்லது கொற்றி எனக் கூறப்படுகிறாள். கொற்றவை கோட்டவி என்று சிதைந்து வடமொழியில் காளி என்ற பொருளைத் தருகிறது. கொற்றவை முருகனுடைய தாய் என்றும் கூறப்படுகிறாள். இடைக்காலத் தமிழ்ப்புலவர் மகிசாசூரமர்த்தினியின் உருவ அமைப்பைப் பற்றிப் பாடியுள்ளார். இமயக் கிழவி என்றும் கடும்போர் கடந்த குமரி என்று காளியை இவர் குறிப்பிட்டுள்ளார். தட்சயாக அழிவின்போது இறைவியின் சினத்தீயிலிருந்து பிறந்து யாகத்தை அழித்துவென்றதாகக் கந்தபுராணம் கூறும்.

காளிக்கு நவராத்திரி விழா என்னும் விழாவை மக்கள் கொண்டாடுவர் முற்காலத்தில் தமிழக மன்னர்களும், குறுநில மன்னர்களும் இத்தெய்வத்தை வழிபட்டனர். சோழ அரசர் விசாயலயன் தஞ்சையில் நிசும்ப சூதனியான காளிக்குத் தனிக்கோயிலெழுப்பிச் சோழர் குலத்தெய்வமாய்க் காளியைக் கொண்டாடியவன் காளியின் முகத்தில் சினக் குறிப்புக் காட்டப்படும். கடைவாய்ப்புறம் கோரைப் பற்கள் இருக்கும். தலை சுடர்முடி அமைப்பில் காணப்படும். பெரும்பாலும் மகிழ்விருக்கைக் கோலத்தில் காட்டப்படும். அன்னையின் திருக்கைகளில் கேடயம், தலையோடு கூடிய முத்தலை ஈட்டி, கத்தி, உடுக்கை, தொங்கும் மனித தலை, பாசம், மணி, இருப்புற முத்தலை, ஈட்டி (வஜரம்) அங்குசம் போன்ற படைக்கலங்களுள் சிலவோ பலவோ கைகளின் எண்ணிக்கைக்கேற்ப அமையும். சில திருமேனிகள் சங்கும் சக்கரமும் கொண்டமைவதும் உண்டு. காளியின் ஊர்தி சிங்கம், கொடி அலகை, படை, சூலம்.

ஊர்த் தெய்வங்களுள் ஒன்றாகவும் காளி கருதப்படுகின்றாள். காளியாத்தாள் என்று கூறப்படும் இவள் தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைக் காளி காஞ்சிபுரம் - மகாபலிபுரம் கருக்கிழமர்ந்தாள் என்ற கொற்றவை, திருவாரூர் இராசதுர்க்கை, திருவொற்றி யூர்த்துர்க்கை, கோவை கோன மாகாளி என்ற கோணியம்மன், பாரியூர் அம்மன் என்னும் குண்டத்துக் காளி, பெரிய பாளையத்து அம்மன், கீரனூர்ச் செல்வி, திருச்செங்கோட்டுக் காளி காரைக்குடிக் கொப்புடையம்மன், நாட்டரசன் கோட் டைக் கண்ணாத்தாள், திருநெல்வேலி மாவட்டக் குரங்கணியம்மன், தஞ்சை உக்கிர மாகாளியம்மன், திருச்சி உச்சயினி மாகாளியம்மன் முதலான தேவதைகள் தமிழ் நாட்டின் புகழ் வாய்ந்த காளித் தெய்வங்களாகும். மாரியம்மன், மாரிஆய், என்றும் தமிழர்கள் காளியை வழிபடு கின்றனர். காளியின் போர்க்கோல உருவம் துர்க்கையென்றும் சாந்தமான உருவம் பவானி (பார்வதி) என்றும் கூறப்படுகின்றது.

காளிக்கு உயிர் பலியிடும் வழக் கம் இந்தியாவில் நிலவுகின்றது. சிலப்பதிகாரத்திலே கொற்றவைக்குப் பலியிடும் வழக்கம் இருந்தமை கூறப்பட் டுள்ளது. கலிங்கத்துப்பரணியில் வீரர்கள் வரம்வேண்டித் தங்களின் தலையைத் தவிர பிற உறுப்புக்களை அரிந்து குருதிக் காணிக்கை இத்தெய்வத்திற்கு அளித் தமையும் கூறப்பட்டுள்ளது. ஆடு, சேவல் முதலியன பலியாக இடப்படும். நரபலி யிடும் வழக்கம் நவகண்டம் என்று அழைக்கப்படுகின்றது. தஞ்சைக்கு அருகில் உள்ள புள்ளமங்கை என்னும் ஊரிலுள்ள முற்காலச் சோழர் காலத்திய கோயிலில் காளிக்கு நவகண்டம் கொடுக் கும் சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது. இத்தெய்வத்திற்கு நரபலி இடும் வழக்கமும் முன்பு இருந்தது. சில ஊர் களில் தீ மிதி விழாவும் காளி விழாவின் பொழுது நடத்தப்படும் காளி, எல்லை களைக் காக்கும் கடவுளாகக் கருதப்பட்ட தால் எல்லையம்மன் எல்லைப் பிடாரி என்றும் கூறப்படுகிறாள். வங்காளப் பகுதி யில் காளி வழிபாடு சிறந்து விளங்குகிறது.

வட இந்தியாவில் விக்கிரமாதித்த னின் தலை நகரமாக விளங்கிய உச்சனி யில் இருந்து காளித் தெய்வம், உச்சயினி மாகாளி எனக் கூறப்பட்டது. மகாபாரதத் தில் வரும் பாஞ்சாலியும், திரௌபதியம் மன் என்ற பெயரால் காளி வடிவம் தரித்துக்கொண்டாள். சமதக்கினி முனிவரின் மனைவியும் பரசுராமனின் தாயுமான இரேணுகை, இரேணுகா தேவி அம்மன் என்னும் பெயரிலுள்ள காளி அறந்தாங்கி, பட்டுக்கோட்டைப் பகுதி களில் உள்ள வணிகர்களுக்குக் குல தெய்வமாகக் கருதப்படுகின்றாள். திருவா ரூரில் இவ்வம்மனை எல்லையம்மனாக வழிபடுகின்றார்கள். சேரன் செங்குட்டு வன் காலத்தில் இருந்து பத்தினித் தெய்வ வழிபாடும் பிற்காலத்தில் காளி வழிபாட்டு டன் கலந்துவிட்டது.

கேரளப் பகுதியில் காளியைப் பக வதியாக வணங்குகின்றார்கள். கொடிய பேய், பிசாசு போன்றவைகளை இக்காளி விரட்டும் சக்தி வாய்ந்ததாக எண்ணு கின்றனர்.

கரு நிறமுடையவளான காளி தீமைகளையும், தீயவர்களையும் அழிப்ப திலே அதிதீவிரமானவளாக இருப்பதைப் போலவே தன்னை வழிபடுகின்ற அடியார் களுக்கு அருள்பாலிப்பதிலும் மிகவும் தீவிரமானவள்.□

(நன்றி : வாழ்வியற் களஞ்சியம் தொகுதி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளி தத்துவம்

*சிவஞானபானு ; கலைமாமணி*
**சாம்பசிவ சோமாஸ்கந்த சிவாச்சார்யார்**

ஆதிபராசக்தியின் ஓர் அம்சமே காளி. தர்மத்தை நிலை நிறுத்தி அதர்மங்களை அழிக்கும் வீரசக்தியே காளியாவாள் என்றும் அழிவில்லாத நித்தியகன்னிகையும் இவளே. இந்து மதத்தின் சக்திவழிபாடு சாக்தம் என அழைக்கப்படும். சக்தி என்ற ஒரு பொருள் இவ்வுலகையும் இறைவனையும் இயங்க வைக்கிறது. சூங்ககாலத்திலும் காடுகிழாள் என்ற தெய்வவழிபாடு காளியை குறிக்கிறது.

தட்சயாகம் நடைபெற்றுச் சிவபிரான் வீரபத்திரரைத் தோற்றுவித்து யாகத்தைத் துவசம் செய்தபோது தாட்சாயணி தக்கனுக்கு மகளாகப்பிறந்த அவமானம் போக்க ஓமகுண்டத்தில் குதித்து தன்னை ஆகுதியாக்கினாள். அப்போது 51 துண்டுகளாக உடல் சிதறி பூவுலகில் வீழ்ந்தது. அதிலே, அம்பிகையின் பெண்பாகம் வீழ்ந்த இடமே காமரூபம் எனப் பெயர்பெற்றது . அதுவே தற்போது அசாம்மாநிலம் என விளங்குகிறது. அதனால் தான் காளிதேவியின் வழிபாடு வங்காளம், அசாம் போன்ற கிழக்கு மாநிலங்களில் சிறப் படைந்து விளங்குகிறது.

அன்னை காளிதேவி அரக்க சக்திகளை அழிக்கும் அன்னை மட்டுமல்ல. அறிவின் பேராற்றலை அருளும் ஞான சக்தியாகவும் விளங்குகிறாள். அறிவிலியாகத் திரிந்த பித்தனைக் காளி தன் அருட்கடாக்ஷத்தால் மகாகவி காளிதாசனாக ஆக்கினாள். தன்னை வழிபடுவோருக்கு இகபரசுகம் தருபவள் காளி. "தாயினும்சாலப் பரிந்து காக்கும் பெண் தெய்வம் எம் அன்னை காளி : என ராமகிருஷ்ண பரமஹம்சர் போற்றுகிறார். மேலும், "தீமைகளை எதிர்க்கும் மனத் துணிவையும், வீரத்தையும் தருபவள் காளிமாதா : என்கிறார் சுவாமிவிவேகானந்தர். காளி எனும் சக்தியின் ஆற்றலே நமது விடுதலைக்கு வழிகாட்ட வல்லது என்கிறார் – பாரதியார்

காளிதாசன் அன்னையைப் பாடுகிறார்.

**"ஆயீ ஆனந்தவல்லி அம்ருதகரதலி ஆதிசக்தி பராயி**
**மயா ஸ்வரூபி ஸ்படிக மணிமயீ மாமதங்கி ஷடாங்கி**
**ஞானா ஞானஸ்வரூபி நளின பரிமளீ நாத ஓங்காரரூபி**
**யோகி யோகாசஸ்தா புவன வசிகரி சௌந்தரி ஐம் நமஸ்தே:**

அன்னை காளியே சகலவற்றையும் தரும் கலியுகத்தெய்வம் என வர்ணிக்கிறார். தீயவர்க்கு பயங்கரியாய் , சங்கரியாய் இருப்பவள் அன்னை காளி. பொற்கொல்லர், கொல்லர், தச்சர், சிற்பாசாரி ஆசாரி என பஞ்ச கம்மாளர்கள் தமது கலைக்கு மூலதெய்வமாய் குல தெய்வமாய் காளியையே போற்றி வழிபாடு செய்கிறார்கள்.

வேதங்களும் , உபநிடதங்களும் காளியைப் புகழ்கின்றன. "காளிகாபுர உபஷத்" என்னும் உபஷத் அதர்வண வேதத்தில் சௌபாக்கிய காண்டத்தில் சிறப்புடன் விளங்குகிறது. மேலும் இருக்கு வேதத்தில் "காளிசூக்தம்" என்னும் பகுதி காளியின் மகிமையை எடுத்தியம்புகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் " சிலம்பு சுழலும் புலம்பும் சீறடி வலம்படு கொற்றத்து வாய்வாட் கொற்றவை" என சிலப்பதிகாரம் புகழ் வதும் அன்னை காளியைத்தான் .

காளி கருமை நிறத்தாள். தமோ குணரூபிணி, இவளிடம் ரஜோகுண, சத்வகுண சக்திகள் யாவும் லயமடைந்து விடும். எனவே காளி என்றும் நித்தியை யானவள். " காளி வித்தைக்குச் சமமான வித்தைகிடையாது . அன்னை காளிதேவி உபசனையால் ஏற்படும் ஞானத்திற்குச் சமமான ஞானம் கிடையாது. காளி அன்னையைக் குறித்து செய்யப்படும் தவத்திற்கு இணையான தவமே இல்லை." இவ்வாறு காளி தந்திரம் கூறுகின்றது. காளி எனும் சொல் க- ஆ- ல-ஈ என பிரியும் . க- என்பது பிரம்மம் , ஆ- என்பது ஆனந்தம் , ல- என்பது விஸ்வாத்மா ( உயிரெல்லாம் நிறைந்த வள்), ஈ-என்பது சூக்ஷ்மம் எனப் பொருள் படும். அதாவது எங்கும் சூக்ஷ்மமாய் நிறைந்த ஆனந்தமய பிம்மஸ்வரூபிணியே காளி எனப்பெயர் பெறுகிறாள் எனக் "காளி கல்பத்ருமம்" எனும் வடமொழி நூல் புகழுகிறது.

"காளியின் மந்திரங்கள் எல்லா யுகங்களிலும் சித்தியளிக்கும் சிறந்த வித்தைகளாகும் . அதுவும் குறிப்பாக கலியுகத்தில் விஷேட பலனை அளிக்கும். அனைத்து உயிர்களுக்கும் இதமளிக்கக் கூடிய போகம், மோக்ஷம் ஆகிய இவற் றின் சித்திக்கு காளிமந்திரங்கள் காரண மாய் இருக்கிறது . கலியுகத்தில் காளியே தெய்வம். அவளே ஜீவர்களுக்கு சித்தியும் முத்தியும் தருவாள் " எனப் பிச்சிலாத்தத் திரம் என்னும் விதிநூல் விபரித்துக் கூறுகிறது.

## சிவனும், காளியும்

சிவபெருமான் முக்கண் உடை யவர். சந்திரனைத் தரித்திருப்பவர். நடனமிடுபவர். காளியம்மையும் அவ் வாறே என "மகாநிர்வாண தந்திர"த்தில் , "மேகாங்கீ சசிதரீகா திரிநயனா ரக்தாம்ப ராம் நிருத்தியம்" எனத்தொடங்கி - "ஆத்யாம் பஜே காளிகாம்!!" எனத் தியானம் கூறுகிறது. இதன் பொருள் :- "மேகநிறமுடையவளாய், சந்திரனைத் தரித்தவளாய் சிவந்த ஆடை அணிகலனு டன் நடனமிடும் ஆதிசக்தியான காளியை வழிபடுகின்றோம்."

எனவே சிவனைப்போல்முக்கண் உடைய நடனமிடும் பிறையணிந்த பிராட்டி காளியன்னை என்பது புலனாகும். மேலும், (தீச்சடை) சிவந்த சடை, திரி சூலம், உடுக்கு, கபாலமாலை, சிவனுக் கும் காளிக்கும் உரியவனவாகும்.

மேலும் சாக்த தந்திரத்திலே:-

**"ஸ்மஸாசினம் தக்ஷிணராஸ்தானம் ஸ்மாசானம் ச சதாசிவ சர்வரூபமகாகால ஹ்ருதயாம் போஜ வாஸினி"**

பொருள்:- சக்தியில்லாதபோது சிவன் ஸ்மசானநிலையாகிறார். சர்வரூப நிலை யில் (சக்தியற்ற) இருக்கும் மகாகாளரான ஈஸ்வரின் இதயத்தில் காளி வசிக்கிறாள்.

மேலும் - மகாகாள சங்கிதையில் "சூன்யே பிரம்மாண்ட கோளேது. பஞ்சாசத் சூன்யமண்டலே, பஞ்சசூன்ய ஸ்திதா தாரா சர்வானந்தே காளி காஸ்ம்ருதா!!"

"உலகம் பிரளய காலத்தில் அழிந்து சூன்மயமாக இருக்கின்றபோது காளி மட்டும் அழியாது சச்சிதானந்தரூபியாய் இருப்பாள்" எனக் கூறுகிறது.

மேலும் - "பத்ராய ஜகதாம் தேவி, யானியானி சனாதனி" பத்திர என்பது மங்களம். அதாவது ஒவ்வொரு பிறப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிலும் தோற்றங்களிலும் அழியாத சனாதனியாய் உலகத்திற்கு மங்களத்தைத் தரும் தேவி என்பதால் "பத்ரகாளி" எனப் பெயர் பெறுகிறாள்.

மேலும் :- சூதசங்கிதையில் ", "ஏவா ஸா ஸாக்ஷனி சக்தி - சங்கரஸ்யாபிசங்கரீ" பரம்பொருளுக்கு இவளே சாட்சியானவள் - சங்கரனுக்கு நன்மை தரும் சங்கரியும் இவளே " எனக்கூறுகிறது.

மகாகவி காளிதாசர் காளியைக் கண்டு அருள்பெற்ற கவி "சிருஷ்டி ஆத்யேவ தாதஸ்திரீ". அதாவது " உலக சிருஷ்டியின் பழமையான மூலப்பொருள் பெண்" எனக் கூறுகிறார். இதே கருத்தை மார்க்கண்டேய புராணம் சிறப்பாக கூறுகிறது. அதாவது,"சிவஸ்ய ஸ்திரீ ரூபம் காளி" (சிவபெருமானுடைய பெண் வடிவமே காளிரூபம்.) எனக் கூறப்பட்டதைப் பார்க்கலாம்.

## சிவபெருமானுடன் நடனமிட்ட காளி

சிவபெருமானின் அற்புத நடனங்களைக் கண்டு இறைவனோடு தாமும் இணைந்து ஆடவேண்டும் என விரும்பிய காளி தன்னோடு போட்டியிட்டு ஆடவரும்படி அழைக்க, தில்லைச் சிதம்பரத்திலே தேர்போன்ற அமைப்புடன் 56 தூண்களைக் கொண்ட 5 சபைகளில் ஒன்றான நிருத்த சபையிலே சிவபெருமானும், காளியம்மையும் ஆடினார்கள். பாணாசுரன் தனது 8கைகளினால் பஞ்சமுக வாத்யம் வாசிக்க 108 திருநடனங்களை ஆடினார் சிவபெருமான். அதிலே ஊர்த்துவ தாண்டவத்தைக் காளி ஆடமுடியாது தலைகுனிந்து நின்றாள். ஏனெனில் ஒரு கால் நிலத்திலும், மறுகால் ஆகாயத்திலும் நிற்க ஊர்த்துவ நடனம் காளியினால் ஆடமுடியாதல்ல. ஆடக்கூடாது என்பதால் ஆடவில்லை. எனவே சிவபெருமான், நீ, தோற்றாய்! ஆலய எல்லையில் நீயிருந்து அருள்புரிவாய் என்றார். "எல்லைக்காளி" என்றும், "தில்லைக்காளி" யென்றும் போற்றப்பட்டு வருகிறாள்.

கயிலாய மலையிலே முன்பு முப்பத்து முக்கோடி தேவர்கள் முன்னிலையில் ஸ்ரீ லலிதா பரமேஸ்வரி காளி தேவியை வேண்டி தனக்கும் சக்தி அருளும்படி வேண்ட காளியும் தோன்றி காளி சகஸ்ர நாமத்தை பாராயணம் செய்தால் சக்தியுண்டாகும் எனச்சொல்ல அதன் படியே ஸ்ரீ லலிதா பரமேஸ்வரி காளி சகஸ்ர நாமத்தை பாராயணம் செய்து பூரண சக்தி பெற்றாள் என்றும், தட்சிண காளிகா சகஸ்ர நாமத்தின் முன்னால் வரும் அவதாரிகையில் கூறப்பட்டுள்ளது.

காளி மாதாவின் உருவம்

கருமை : உள்ளம் குழந்தையின் பால் மனம்

வாள் : துஷ்டர்க்கு அழிவு தரும் சக்தி.

நல்லவரின் வினையறுக்கும் சக்தி

சிவந்தநா:ஆன்றோர்களுக்கு ஞான மருளும் பீடம்

திரிசூலம் : மும் மூர்த்திக்கும் தாய் என உணர்த்தல்

உடுக்கு : பிரளய காலத்தில் புதிய சிருஷ்டிக்காய் நடமிடும் ஓசை லயம்.

அன்னை காளியே மகாசக்தி - இவளே பகவதி, பைரவி, நீலி, மகாசண்டி, சங்கரி என அழைக்கப்படுகிறாள்.☐

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து"

(நன்றி : மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான கும்பாபிஷேக மலர் - 2000)

---

நவராத்திரியின் போது, நவ கன்னிகை பூஜை செய்வது விசேஷம். இதன் முறைகளையும் பலன்களையும் தேவிபாகவதத்தில் வியாசர் விவரிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்பிகை வழிபாடும், ஸ்ரீசக்கர பூஜையும்

நீர்வை தி. மயூரகிரிசர்மா

அம்பிகை சிதக்னி குண்டத்தில் தோன்றியவள். தேவர்களின் கார்யங்களைச் சிறப்பாகச் சாதிப்பதற்காகவே அவள் இவ்வாறு தோன்றினாள். இவ்வாறு சிதக்னி குண்டத்தில் தோன்றிய அன்னையை எரியோம்பி வழிபடுவதே "சண்டிஹோமம்" போன்றன.

இவ்வாறாக, யாககுண்டத்தில் வளரும் தீயில் உருப்பெற்று எழும் ஸ்ரீசக்கரத்தின் உச்சியில் உள்ள பிந்துவில் அன்னையானவள் பரசிவனின் மடியில் எழுந்தருளியிருக்கிறாள். அவளிடமிருந்து அவனையும், அவனிடமிருந்து அவளையும் பிரிக்க இயலாது.

**"மூவர்க்கும் முற்பொருளாய் முத் தொழிற்கும் வித்தாகி**
**நாவிற்கும் மனதிற்கும் நாடரிய பேரறிவாய்**
**தேவர்க்கும் முனிவர்க்கும் சித்தர்க்கும் நாகர்க்கும்**
**யாவர்க்கும் தாயாகும் எழில் பரையை வணங்குவாம்"**

என்று அபிராமிபட்டர் போற்றுவதுபோல, எழில் பரையாக, முன்னைப் பழமைக்கும் முன்னைப் பழையவளாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையளாய் அவள் அங்கே காமேஸ்வரியாக எழுந்தருளியிருக்கிறாள். இவ்வாறு காமேஸ்வரன் திருமடியில் எழுந்தருளியிருக்கும் அன்னை மஹாத்ரிபுர சுந்தரியானவள் நான்கு கரங்கள் கொண்டருள்கிறாள். அங்குசமும் பாசமும் பின்னிரு கரத்திலும் கரும்பும், பஞ்சபாணங்களும் அவளின் முன்னிரு கரத்திலும் மிளிர்கின்றன.

அப்போது, வரமருளவும் அபயம் தரவும் கரங்கள் இல்லையே என்றால், அப்பணிகளை அவள் திருவடிகளே அநாயாசமாகச் செய்தருள்கின்றன என்பது சக்தி உபாசகர்களின் நம்பிக்கை.

பிரபஞ்ச நாயகி பரம்பொருள் விமர்சனம் என்ற கண்ணாடியில் தன்னைப் பார்க்கும்போது அப்பரம் பொருளுக்கே "அஹம்பாவம்" ஏற்பட்டு விடுகிறதாம். அப்போது அப்பரம்பொருள் காமேஸ்வரராகிறார். அம்பிகையோ, காமேஸ்வரி ஆகிறாள்.

இதன் போதே, பிரபஞ்சம் உருவாகிறது. இக்காமவல்லியை உபாசிக்கும் மரபே ஸ்ரீவித்யையாகும். ஸ்ரீவித்யையின் முக்கிய இடத்தை ஸ்ரீசக்கர உபாசனை பெறுகிறது என்பர்.

ஸ்ரீசக்கர மத்தியில் ப்ரம்மா, விஷ்ணு, ருத்ரன், மஹேஸ்வரன், ஆகியோரைக் கால்களாகவும், சதாசிவனைப் பலகையாகவும் கொண்ட பஞ்ச பிரும்மாசனத்தில் "ஸர்வானந்தமயபீடம்" என்கிற பிந்து வடிவமான மஹா பீடத்தில் காமேஸ்வரனின் இடது மடியில் அன்பு வடிவமான பாசத்தையும், கோபமாகிய அங்குசத்தையும், மனமாகிய கரும்பு வில்லையும், ஐந்து தன்மாத்திரைகளைக் குறிக்கும் பஞ்சபாணங்களையும் ஏந்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளாக ஸ்ரீமத் லலிதா மஹாத்ரிபுர சுந்தரி எழுந்தருளியிருப்பாள் என்று சாக்த தந்திரங்கள் குறிப்பிடுகின்றன.

## சிவானந்தப் பேறருளி முக்தி தருபவள்

சாக்தர்களுக்கு மட்டுமல்ல, சைவர்களுக்கும் அன்னை வழிபாடு முக்கியமான ஒன்றாக விளங்குகிறது. "சிவஞானப்பிரதாயினி" என்பது அம்பாளின் திருநாமங்களுள் ஒன்று. சிவஞானப்பேற்றைத் தந்து முக்தி அருளும் சிறப்புடையவள் அவளேயாம்.

ஆக, அன்னையை இவ்வாறு மனதில் கற்பித்து, மனச்சுத்தி பேணி, வைதீக மரபின் வண்ணம் அக்னியிலும், ஆகம மரபின் வண்ணம் விக்கிரகத்திலும், தாந்திரீக மரபின் வண்ணம் ஸ்ரீசக்கரத்திலும் ஆராதித்து வழிபடுவர். இவ்வாறு சாக்த தந்திர மரபின் வண்ணம் வழிபடுவது என்பதும் தமிழகத்தின் மிகப் பழமையான வழிபாட்டு மரபுகளுள் ஒன்று.. திருமந்திரம் தந்த திருமூலர் பெருமானே இவ்வழிபாட்டு மரபு பற்றி விளக்கிச் சொல்லியிருக்கின்றமையை காண்கிறோம்.

**"ககராதி ஓரைந்தும் காணிய பொன்மை**

**அகராதி ஓராறு அத்தமே போலும்**

**சகராதி ஓர்நான்கும் தாள் சுத்த வெண்மை**

**ககராதி மூவித்தை காமிய முக்தியே**

– (திருமந்திரம்- புவனாபதி சக்கரம்)"

அறுபத்து நான்கு உபசாரங்களை அளித்து அன்னையை வழிபடுவர். இவற்றை எல்லாம் ஸ்ரீசக்கர சிம்மாசனத்தில் எழுந்தருளியிருக்கிறவளாக, அன்னையைப் பாவித்து வழிபடுவதும் சிறப்பானதாகும்.

## செம்மைசார் மரபின் வழியே ஸ்ரீசக்கரபூஜை

அம்பிகையை ஸ்ரீசக்கரம் என்ற யந்திரத்தின் நடுவில் பிந்துவில் எழுந்தருளச் செய்து, அவள் பரிவார தேவதைகளை அன்னையை நோக்கி அவளைச் சுற்றி ஒவ்வொரு கோணங்களில் எழுந்தருளியிருப்பதாகப் பாவித்து வழிபடுவதே ஸ்ரீசக்கர பூஜையாகும்.

பூஜா மந்திரத்தாலும் ஆசமனத்தாலும் தூய்மை செய்த ஒருவர் குரு வழிபாடு புரிந்து சங்கல்ப்பித்துக் கொண்டு, தேகரட்சை செய்துகொள்ள வேண்டும். தேவி எழுந்தருளும் ஸ்ரீசக்கரத்தினைச் சுற்றிலும் மதில்களாகவும், கோட்டைகளாகவும், நாற்பத்து நான்கு வரிசைகளை பாவனையுடன் பூசிக்க வேண்டும். இதுவே ஸ்ரீசக்கர பூஜையின் முதலம்சமாகச் சொல்லப்பெறுகிறது.

அடுத்துப் பூஜை செய்பவர் தமது பௌதீக உடலை மந்திரங்களின் மூலம் தெய்வீகமாக்கிக் கொள்ளவேண்டும். விக்நோத்ஸாரணம் என்கிற விக்னங்களை நீக்கிடும் வழிபாட்டையாற்ற வேண்டும். இதன் பின், தெய்வீகச் சரீரமெங்கும் தேவர்களை ஆராதித்துத் தெய்வமயமாகச், சக்தி மயமாகத் தன்னையும் தன்னைச் சுற்றியிருக்கிற இடத்தையும் சாதகன் அமைத்துக் கொள்கிறான்.

உடம்பில் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுக்தி, ஆக்ஞா என்கிற ஆறு சக்கரங்களையும் எழுப்பி தேவதைகளை நியாசம் செய்தல்வேண்டும். இவ்வாறு பதினெட்டு வகையான நியாசங்கள் உள்ளன. இப்படியெல்லாம் தன்னை சுத்தி செய்து தெய்வீகப்படுத்திக் கொண்ட பின்னரே, ஒருவர் ஸ்ரீசக்கரபூஜையினுள் நுழைகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீசக்கரபூஜையில் பாத்திரங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. கலச பாத்திரம், சாமான்யார்க்கிய பாத்திரம், குரு பாத்திரம், சுத்தி பாத்திரம், விசேஷார்க்கிய பாத்திரம், அலி பாத்திரம், பலி பாத்திரம், ஆத்மபாத்திரம், இவ்வாறாக அப்பாத்திரங்கள் பலதிறத்தன. அவை பூஜையின் ஒவ்வொரு நிலைகளில் சாதகனால் பாவிக்கப்பெறுகிறது.

உள்ளக் கமலத்தில் உறையும் உன்னதமானவளை, மானசீகமாக, உள்ளே, அந்தராத்மாவில் பூஜித்துப் பின்னர், சுழு முனை வழியே பிரமரந்திரம் வரை கொண்டுசென்று, உபசாரங்கள் வழங்கி நாசித்துவாரத்தின் வழியே திரிகண்டமுத்திரையில் குவித்து, புஷ்பாஞ்சலியுள் புகுவித்து, புறத்தே அமைந்துள்ள ஸ்ரீசக்கர மஹாயந்திர மத்தியில் ஆவாஹனம் செய்வர்.

சதுஷ்ஷ உபசாரங்கள் என்ற அறுபத்து நான்கு உபசாரங்களை அன்னைக்கு வழங்கிப் பூஜித்து, அம்பாளைச் சுற்றி எட்டெட்டு வரிசையில் சேரும் ஆவரண சக்திகளை பூஜிப்பர். இது பரிவாரார்ச்சனை என்று குறிப்பிடப் பெறும். நிறைவாக, நவாவர்ணபூஜையும், லலிதா ஸஹஸ்ரநாம அல்லது திரிசதி நாம அர்ச்சனையும், நைவேத்தியத்துடன் விசேட பூஜையும் செய்வர். அதன் பின் பலிதானம், சுபாஸினீ பூஜை என்பவற்றினையும் ஆற்றுவர்.

எம் தாயே, நாயோம் தவறே செய்யினும் பொறுத்தருள வேண்டும். என்று விண்ணப்பம் செய்து பூஜாபலனையும் நிறைவில் அன்னையின் வரதஸ்தம் என்ற வரமருளும் இடது திருக்கரத்தில் சமர்ப்பிக்கப்பெற்று ஸ்ரீசக்கரபூஜை நிறைவுபெறும்.

**ஸ்ரீசக்கர உபாசனையில் பயமும், பயனும், அருளும்.**

ஆதிசங்கரபகவத்பாதர் ஸ்ரீசக்கர வழிபாட்டை சீரமைத்துப் பரவச்செய்தார் என்பது நம்பிக்கை. ஸ்ரீவித்யோபாசனை என்று போற்றப்பெறுகிற ஸ்ரீசக்கர வழிபாடு இன்று சக்தி வழிபாட்டாளர்களிடம் சிறப்புற்று விளங்குகிறது.

ஆதிசங்கரபகவத் பாதர் சிருங்கேரியில் ஸ்ரீசக்கரத்தின் மீது சாரதா தேவியைப் பிரதிஷ்டை செய்திருப்பதாகச் சொல்லுவர். காஞ்சியில் காமகோடி பீட வாசினியாக எழுந்தருளியிருக்கிற அன்னை காமவல்லி முன்பாக ஆதிசங்கரர் ஸ்ரீசக்கரபூஜை செய்திருக்கிறார். சிதம்பரத்தில் ஆடவல்ல பெருமானின் வலப் பக்கத்தில் சிவசக்கரமும் சக்தி சக்கரமும் இணைந்து சம்மேளனமாக இருக்கிறது. இதனையே சிதம்பர ரகசியமாக வழிபடுகிற சிறப்பும் அமைந்திருக்கிறது. அன்னை சிவகாமி சந்நிதியில் சிறப்பான ஸ்ரீ சக்கரம் ஒன்று அமைந்திருப்பதாகவும் குறிப்பிடுவர்.

திருக்குற்றாலத்தில் ஸ்ரீசக்கர பீடம் இருப்பதாயும், திருப்பெருந்துறை ஆவுடையார் கோயிலில் அம்பாள் சந்நதியில் ஸ்ரீசக்கரமே பிரதிஷ்டை செய்யப்பெற்றிருப்பதாகவும் (அம்மைக்கு இங்கு திருவுருவம் இல்லை) திருவானைக்காவில் அகிலாண்டநாயகியின் காதணிகளில் ஸ்ரீ சக்கரம் பொறிக்கப் பெற்றிருப்பதாகவும் குறிப்பிடுவர். இவ்வாறாக, தேவாரப் பாடல் பெற்ற புகழ்மிக்க சிவஸ்தலங்களிலும் அன்னையின் ஸ்ரீசக்கரம் சிறப்புடன் வழிபாடு செய்யப்பெற்று வருகிறது.

ஸ்ரீவித்யா உபாசனையை நன்கு நெறிப்படுத்தியவர்களில் ஆதிசங்கர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவத்பாதர், வித்யாரண்யர், நீலகண்டர், பாஸ்கரராஜர் ஆகியோர் முதன்மை பெறுகின்றனர்.

ஸ்ரீ சக்கரம் கைலாசப்பிரஸ்தாரம், மஹாமேருப்ரஸ்தாரம், அர்த்தமேரு பிரஸ் தாரம், பூபிரஸ்தாரம் எனப்பலவகை உண் டென்பர். இலங்கையில் பல பெரியவர் களுடன் பேசியதில் சிலர் ஸ்ரீ சக்கர வழி பாடு பற்றி சிறிது அச்சம் கொள்கின்றனர். தொடர்ச்சியாகச் செய்யவேண்டிய வழி பாடு என்றும் விதி முறை வழுவாது செய்யவேண்டிய வழிபாடு என்றும் இது குறித்து அவர்களின் அச்சம் இருக்கிறது.

இன்னொரு நூலொன்றில் படித்த தில் அதில், ஸ்ரீ சக்கிரோபாசனையைச் செய்பவர்கள் மனச்சலனம் இல்லாதவர் களாக இருக்கவேண்டும். ஏனெனில் திரிபுரசங்காரத்தின் பின் திரிபுராரியான பரமேஸ்வரனே ஸ்ரீ சக்கர ரூபிணியாக, தேவியாக இருக்கிறார் என்றும் கண்டிருந் தது. ஆனால், இந்தியாவில் தற்போது ஸ்ரீசக்கரபூஜை பலராலும், பல நிலைகளி லும் சுருக்கமாகச் செய்யப்பெறக் காண் கிறேன். அங்கெல்லாம் பெரியளவில் ஆசார மரபுகள் பேணப்படுவதாகவோ, அச்சம் கொள்வதாகவோ, தெரிய வில்லை. கடைகளிலும் சிறியனவாயும், பெரியனவாயும் பல ஸ்ரீசக்கரங்கள் விற் பனைக்கு இருக்கக்கண்டேன்.

வழமையான யந்திரங்களில் எழுத்துக்கள் நிறைய இருக்கும். ஸ்ரீசக் கரத்தில் எழுத்துக்கள் இருப்பதில்லை. ஸ்ரீ சக்கரம் பண்டைய இந்துக்களின் பாரத நாட்டினரின் கேத்திரகணித அறிவையும், ஆற்றலையும், விஞ்ஞான உணர்வையும் காட்டுவதாயும் சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். சக்கர ராஜாவாக இருப்பதால் ஸ்ரீசக்கரத்தை சக்ரராஜம் என்றும் போற்றுவர்.

தத்தாத்திரேயர் வழி நின்று பரசு ராமர் ஸ்ரீவித்யையைக் கற்றுப் பரப்பிப் பின் தன் சீடரான ஸமேதஸ் வழியே நமக்கு இன்று கிடைத்திருக்கிற நூலாகப் பரசுராம கல்பத்தைக் குறிப்பிடுவர். இதன் வழியே இன்றைய தென்னகத்துச் ஸ்ரீசக்கர வழிபாடுகள் நடைபெறுவதா கவும் தெரிகிறது.

சீராக முறைப்படி ஸ்ரீவித்யையை அனுசரித்து ஸ்ரீ சக்கரபூஜை செய்பவர் யோகமும், குரு பலனும், கிடைத்து பரம ரஹஸ்யங்களை அறிந்து தேவியின் விஸ்வரூபக் காட்சியைப் பெறுவார் என்று குறிப்பிடுவர். பாஸ்கரராஜர் போன்ற முக்கிய ஆச்சார்யார்களின் வரலாற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடுவர்.

ஆக, சக்கரசக்தியாக நின்ற ருளும் அன்னையை பற்றிய சிந்தனைக்கு வித்திட்டு, இது தொடர்பான சிந்தனை பெருகப் பிரார்த்திக்கிறோம். ஆபத்து சூழ்ந்துள்ள இந்நேரத்தில் 'ஓம் காளி' என்ற மந்திரம் சிறந்த பாதுகாப்பைத் தரும்.☐

(நன்றி - தமிழ் இந்து)

பழந்தமிழர் வாழ்வோடு கலந்து வழிபாட்டில் முக்கிய இடம்பெற்ற மற்றொரு தெய்வம் முருகன் ஆகும். முருகனைப் பற்றிக் கூறும்போது அம்முருகனும் கொற்றவையின் மைந்தனாகவே போற்றப்படுவதைக் காண்கின்றோம்.

"வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ" என்றும்

"இழையணி சிறப்பிற் பழையோள் குழவி" என்றும் திருமுருகாற்றுப்படை பாடுகின்றது.

"பைம்பூண் சேய் பயந்த மாமோ ட்டுத்

துணங்கையஞ் செல்வி" என்பது பெரும்பாணாற்றுப்படைச் செய்தியாகும். இது போன்று முருகன், கொற்றவை சிறுவனாகக் கருதப்பட்ட செய்திகள் சங்கச் செய்யுளிற் பரந்து காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சரசாலை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத் தொண்டர் சபை - 1994
(இ - வ) : ப.றமேஸ், வே.கதிரேசன், எஸ்.பாலச்சந்திரன், ச.லலீசன், சி.சிதம்பரநாதக் குருக்கள், சி.கிருபாகரக் குருக்கள், அ.புரந்தரன், வை.விஜயகுமாரன், எஸ்.ராஜ்குமார்



1990 ஆம் ஆண்டு நவராத்திரி நிறைவுநாளில் மேடையேற்றப்பட்ட
ஆலயச் சிறுவர்கள் நடித்த 'கற்புக்கரசி' - பக்தி நாடகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ மாதா

சுகி. சிவம்
சென்னை

அம்மா
தமிழில், இது ஒரு சொல் எனப் பலர் நினைக்கிறார்கள்.
இல்லை....! இல்லை.....!

ஓரேசொல்லில் தமிழில் எழுதப் பட்ட காவியம் தான் அம்மா. அன்பு, அபரிதமான கருணை, ஆவேசம், ஆக்ரோஷம், அசட்டுத்தனம், அதிசயமான அறிவாற்றல், ஆனந்த அனுபூதி இவற்றின் இனிய கலவையே அம்மா.

உலகத்தில் ஐம்பத்தொரு சக்தி பீடங்களே உண்டு என்று புராணக்காரர் கள் சொல்கிறார்கள். தவறு, ஒவ்வொரு தாயின் கருப்பையும் ஒரு சக்தி பீடமே. ஈ, எறும்பு, பசு முதல், சகல ஜீவராசிகளின் கர்ப்பப்பையும் பராசக்தியின் சக்தி பீடமே என்பதை சாக்தர்கள் நன்கு அறிவார்கள். "ஆ பிரம்ம கீட ண்ணி" என்கிறது லலிதா சகஸ்ரநாமம்.

கோயில் கும்பாபிஷேகங்களில் அம்பிகைக்கான ஹோமகுண்டங்கள் அமைக்கும்போது யோனி வடிவில் அமைப்பதின் சூட்சுமம் இதுதான். பராசக்தி அதன் மூலமே வெளிப்படு கிறது. பசுவை வணங்கும்போது அதன் பின்புறத்தை வணங்குதல் என்கிற பண்பாடும் இதனாலேயே தோன்றியது.

நாம் உண்டாகி, வாழ்ந்து மறையும் இந்த பூமி பராசக்தியின் கர்ப்பப்பை என்பதே சாக்தத்தின் ரகசியம். இது புரியாமல் சக்தி வழிபாடு செய்கிறவர் களும் உண்டு.

ஒரு பெண்ணின் கர்ப்பத்தில், சிசு எவ்வாறு தோன்றி, குடியிருந்து பிள்ளை யாகிப் பேறு பெறுகிறது? கர்ப்பப்பை பயிர் உருவாக்கத்துக்குரிய வகையில் வடி வமைக்கப்பட்டது. பிண்டமாய்க் கருவாகி கண், மூக்கு, காது என்று உருவாகி, குழந்தை என்ற திருவாகிப் பூமியில் விழுவதற்கேற்ற சகல வசதிகளுடன் அமைந்த அற்புத அமைப்பு கருப்பை.

குழந்தை வளர வளர இடவசதி ஏற்படுத்தித்தரும் Elasticity .......... அது கை, கால், அசைத்து நீந்தி விளையாடச் செய்யும் திரவச்சுரப்பு... வளர்ச்சிக்குத் தேவையானவை - சக்தியை ஊட்டும் தொப்புள்கொடி தொடர்பு.... வெளியுலகக் கெடுதல்கள் உட்புகாவண்ணம் சீல் செய்யப்பட்ட பனிக்குட மூடுதல் ... இப்படிப்பட்ட வசதிகள் தாயின் கருப்பையில் இருப்பதால் அல்லவா குழந்தை கருவாகி - உருவாகி - திருவாக முடிகிறது!

இந்த ஏற்பாடுகள் அப்படியே பூமியில் இருப்பதைக் கவனியுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையை சீல் வைத்து பாதுகாக்கும் பனிக்குடம் போல, சூரியனின் புற ஊதாக் கதிர்கள் புகாதபடி பாதுகாக்கும் ஓஸோன் வளையம் கருப்பையில் உருண்டு விளையாட திரவவசதி தரப்பட்டது போல, பூமியில் நீர்ச் சுரப்பு உண்டாக உலகம் முழுவதும் சூழ்ந்து நிற்கும் கடல் நீர். தண்ணீர் இல்லையேல் தாவரம் இல்லை. எந்த உயிருக்கும் பூமியில் இடம் இல்லை. தொப்புள்கொடி தொடர்பால் சிசுவுக்கு உணவூட்டும் கருப்பை போலவே, தாவர தானியங்கள் விளைந்து தன்னுள் வளரும் மானுட ஜாதியை ரட்சிக்கும் பூமியின் தாய்மை நிலை. இவற்றை உற்றுக் கவனித்தவர்கள் இந்தப் புவனம் அம்பிகையின் கருப்பை என்பதை உணர்வார்கள்.

இந்தப் பூமிக்கு புவனம் என்று வடமொழியில் பெயர். இந்தப் புவனத்தின் தலைவி புவனேஸ்வரி. புவனேசி, புவனா என்ற சொல்லில் இருந்து பிறந்ததே பவானி என்கிற திருநாமம். அந்த பவானியின் தாய்மையைக் கொண்டாடும் தனிவிழாவே நவராத்திரி.

சிவபெருமான் வித்து, அம்பிகை பூமி, ஒரு விதையைத் தன்னுள் வாங்கி, பலநூறு விதைகளாக்கி மாயாஜாலம் செய்யும் பூமியைப்போல, ஒன்றை ஒன்பதாக்கும் மாயையே பராசக்தி. மூலவித்தான ஒன்றை, தன் மாயா சக்தியால் ஒன்பதாக்கி - அதாவது ஒரு சிவனைப் பல ஜோடிச் சிவனாக்கி - சிவனைச் சீவனாக்கும் மகா மாயாவே மகமாயி அம்பிகை. பராசக்தி ஒன்றை ஒன்பதாக்குவதை விளக்கவே சிவராத்திரி ஒரு நாளும், நவராத்திரி ஒன்பது நாளும் கொண்டாடப்படுகின்றது.

தந்தையின் உயிர் அணு தாயின் கருப்பையில் நுழைந்ததும் கருவில் உள்ள சினை முட்டை வாய்திறந்து அதனை விழுங்கி விடுகிறது. வேறெதுவும் உட்புக முடியாதபடி சீல் வைத்த மாதிரி மூடிக் கொள்கிறது. அது வரை ஆத்மனாகத் தந்தையின் விந்தில் இருந்த ஒன்று, தாயின் சினை முட்டையால் விழுங்கப் பெற்ற பின் அது சரீரம் பெற்று வளர ஆரம்பிக்கிறது.

ஆத்மாவை, சரீரமாக அடையாளம் காட்டும் மாயவேலை தாயின் கருப்பையில் நிகழ்கிறது. இதனால் தான் பெண்களை மாயப்பிசாசு என்றெல்லாம் வறட்டுத்துறவியர் குற்றம் சொல்கின்றனர். வடிவமற்ற, குணமற்ற ஆத்மா, எலும்பு, நரம்பு, ரத்தம், மாமிசம், மஜ்ஜை மற்றும் மெய், வாய், கண், மூக்கு, செவி இத்துடன் தாமஸ, ராஜஸ, சத்வகுணம் உடைய மானுடப் பிறவி எய்துகிறது.

உலக வாழ்வு அந்த உயிருக்குள் தொடங்கிவிடுகிறது! இன்ப துன்பங்களை உடலாலும், மனத்தாலும் நுகருகிற மானுட வாழ்க்கையில் அது பந்தப்படுகிறது. எனவே உலகில் வாழ விரும்புகிறவர்கள் பராசக்தியின் கட்சி உறுப்பினர்கள். உலக வாழ்வை வெறுத்து விலக்குபவர்கள் சிவபெருமான் கட்சி உறுப்பினர்கள். ஆனால் இந்த பிரபஞ்சமோ சிவசக்தி ஐக்கியத்தின் விளைவு! எனவே முத்திக் குச் சிவன் மூலகாரணம். முக்தி வேண்டுவோர் சிவவழிபாடு செய்க. சக்தி வேண்டுவோர் அம்பிகை வழிபாடு அவசியம் செய்க.

உலக வாழ்வில் பந்தப்படுத்துபவள் தான் அம்பிகை என்றால், அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடியவள் என்று கொள்வதா? கூடாது. அவள் 'பந்த மோசினி' என்கிறது லலிதா சகஸ்ரநாமம் . அம்பிகையை " பேதித்து நம்மை வளர்தெடுத்த பெய்வளை" என்கின்றார் மாணிக்கவாசகர். உயிர் களை எந்த அம்பிகை உடம்பில் வைத்துக் கட்டுகிறாளோ அவளே அதை அறுத்து விடுவிக்கவும் வல்லவள். அவள் கருணை இருந்தால் தான் முத்தியைப் பெறவே முடியும். இந்திய அரசாங்கத்தில் வேலை பார்க்கும் ஒருவர் வெளிநாட்டுக்குப் போவது என்றால் இந்திய அரசாங்கத்தின் N.O.C.(No Objection Certificate) தேவை யல்லவா?

அதுபோல் புவனத்தில் பாவ புண்ணியங்களில் கட்டுண்ட ஆன்மா வீடுபேறு என்ற வெளியுலகம் செல்ல அம்பிகையின் N.O.C. அவசியம் தேவை. நம்முடைய தாயார் என்பவள் பரா சக்தியின் பிரதிநிதி . அதனால் சந்நியாசம் பெறுகிறவர்கள் தாயின் அனுமதி N.O.C. பெறவேண்டிய கட்டாயம் இருக்கிறது. ஆர்யாம்பாள் என்கிற தாயின் N.O.C. பெற்றுத்தான் ஆதிசங்கரர் சந்நியாசம் வாங்கினார். அந்த நன்றிக்கடனாகத் தான் சங்கரசந்நியாசிகள் சாரதாம் பாளுக்கும், காமாட்சிக்கும் பூஜைசெய்து பெற்ற கடனை அடைக்கிறார்கள்.

தொட்டிலில் அசிங்கம் செய்து விட்ட குழந்தையை அப்பா எடுப்பதில்லை. கர்ப்பத்தில் இருந்த கசடுகளோடு வெளிப் பட்ட குழந்தையை அப்பாவிடம் கொடுப்ப தில்லை. குழந்தையின் மலத்தை (அழுக்கை) அம்மா சுத்தம்செய்து பளிச்சென்று பவுடர்போட்டு அப்பாவிடம் தருகிறாள். ஆன்மாக்களின் மூன்று மல மான ஆணவமலம், கன்மமலம், மாயா மலம் என்கிற அழுக்குகளை நீக்கி, பவுடர் போடுகிற மாதிரி விபூதி பூசவைத்து - சிவபெருமான் என்கிற அப்பாவிடம் தருகிற அம்மா தான் பராசக்தி. அதனால் தான் லலிதா சகஸ்ரநாமத்தின் முதல் நாமம் - ஸ்ரீமாதா. □

(நன்றி - மதுரை மீனாட்சி அம்மன் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா 2009 சிறப்பு மலர்)

## மடப்பள்ளி சாம்பல்

மதுரையை ஆண்ட கூன்பாண்டியன் வெப்பு நோயினால் மிகவும் வருந்தினான். யாராலும் தீர்க்க முடியாத இந்த வெப்புநோயை மாற்றுவதற்கு, பாண்டியன் மனைவி மங்கையர்க்கரசியார் திருஞானசம்பந்தரை மதுரைக்கு அழைத்துவந்தார்.

மதுரைக்கு வந்த திருஞானசம்பந்தர் கோயில் மடப்பள்ளி சாம்பலை எடுத்து வரச்செய்து, "மந்திரமாவது நீறு" என்று தொடங்கும் திருநீற்றுப்பதிகம் பாடினார். அதனால் மடப்பள்ளி சாம்பல் மருந்தாக மாறி கூன்பாண்டியனின் நோய் தீர்த்தது. அந்த மடப்பள்ளி சாம்பல் இக்கோயிலில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சாம்பலை அணிவார் துயரும் பிணியும் அகலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயத்தின் பொருள் விளக்கம்

தெ. சந்திரசேகரப்பட்டர்
மதுரை

ஆலயம் என்பது கோவில் கோ + இல் என்பது இறைவனின் இருப்பிடம். இறைவன் எங்கும் எல்லா இடங்களிலும் இருப்பினும், பசுவின் மடியில் இருந்து பால் சொரிவதுபோல் இறைவன் கோயிலில் இருந்துதான் அருள்புரிவார்.

**ஆலயம்**

இருதய பிரஸ்தாரம் : இருதயத்தை விரித்துக் குறிப்பது

சரீர பிரஸ்தாரம் : சரீரத்தை விரித்துக் குறிப்பது

**ஆலயத்தை மனித வடிவாக கொண்டால்**

| | | |
|---|---|---|
| கர்ப்பகிருகம் | : | சிரசு |
| அர்த்த மண்டபம் | : | கழுத்து |
| மஹா மண்டபம் | : | மார்பு |
| யாகசாலை | : | நாடி |
| கோபுரம் | : | பாதம் |

**மற்றொரு வகையில்**

| | | |
|---|---|---|
| கோபுரம் | : | வாய் |
| நந்தி | : | நாக்கு |
| கொடிமரம் | : | உள்நாக்கு |
| தீபங்கள் | : | இந்திரியங்கள் |
| கர்ப்பக்கிருகம் | : | இதயம் |
| சிவலிங்கம் | : | உயிர் |

**கர்ப்பக்கிருகத்தின்**

முதல் பிரகாரம் : அந்தர் மண்டலம்

இரண்டாம் பிரகாரம் : அந்தர் வாரம்

மூன்றாம் பிரகாரம் : மத்திய ஹாரம்

நான்காம் பிரகாரம் : மாயாதா

ஐந்தாம் பிரகாரம்: மஹா மாயாதா

**ஆன்மாவிற்கு 5 வகையான சரீரம் உண்டு**

காரண சரீரம் : ஆனந்த மயகோசம்

கஞ்சுக சரீரம் : விஞ்ஞான மயகோசம்

குண சரீரம் : மனோ மயகோசம்

சூக்கும சரீரம் : பிராமண மயகோசம்

தூல சரீரம் : அன்ன மயகோசம்

ஐந்து பிரகாரங்களும், அன்ன மயகோசம் முதலான ஐந்து கோசங்களையும் குறிக்கும்

ஐந்தாவது பிரகாரத்தை நோக்க நான்காவது பிரகாரம் நுண்மையானது

அன்னமயகோசத்தை நோக்க பிராமண மயகோசம் நுண்மையானது

நான்காவது பிரகாரத்தை நோக்க மூன்றாவது பிரகாரம் நுண்மையானது

பிராமண மயகோசத்தை நோக்க மனோ மயகோசம் நுண்மையானது

மூன்றாம் பிரகாரத்தை நோக்க இரண்டாம் பிரகாரம் நுண்மையானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோ மயகோசத்தை நோக்க விஞ்ஞான மயகோசம் நுண்மையானது

இரண்டாம் பிரகாரத்தை நோக்க முதல் பிரகாரம் நுண்மையானது

விஞ்ஞான மயகோசத்தை நோக்க ஆனந்தமய கோசம் நுண்மையானது

காரண சரீரமாகிய ஆனந்தமயகோசம் நுண்மையானது

கர்ப்பகிருக ஆவரணமும் மிக நுண்மை யானது

சரீர தத்துவமே ஆலய தத்துவம் ஆகும்

மேற்படி ஆலயங்களில் காணப் படும் பிரகாரங்கள் ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு என இருக்கும்

ஏழு - சரீரத்தில் உள்ள இரசம், இரத்தம், மாமிசம், மேதை, எலும்பு, மச்சை, சுக்லம் என்ற ஸப்த தாதுக்களைக் குறிக்கும்

ஐந்து - சரீரத்தில் உள்ள ஸ்தூல, சூட்சும, காரண தேகங்களைக் குறிக்கும்

ஒன்று - எல்லாவற்றையும் குறிக்கும்

**கதவு**

ஆலயங்களில் கடவுளை தெரிய விடாமல் மறைத்து நீக்கிய வழி சிவ பெருமானை காட்டி நிற்கும் கதவுகள் ராகம் துவேஷம், லோபம், மோஹம், மதம், மாற்சரியம் என்பதற்கு காரண மாகும்.

**திரைச்சீலை**

திரைச்சீலை மாயையை குறிக்கும்

**சிவலிங்கம்**

லிங்கம் என்றால் குறி அல்லது அடையாளம். எங்கும் வியாபித்து அருவமாய் காணமுடியாத இறைவனை காணுவதற்குரிய இடமே சிவலிங்கம். பிரம்மா, விஷ்ணு முதலியவர்களை தன்னுள் (தனது சக்தியில்) அடக்கிக் கொண்டு தான் ஒன்றிலும் அடங்காதவர் சிவபெருமான் என்பதைக் குறிக்கும்.

**நந்தி, பலிபீடம்**

ஆலயங்களில் சிவலிங்கத்திற்கு எதிரில் நந்தியும், பலிபீடமும் அமைந் திருப்பது சிவலிங்கம் பதி எனவும், நந்தி பசு எனவும், பலிபீடம் - பாசம் எனவும் கொள்ளப்படும். சைவாகமங்களில் பதி, பசு, பாசம் என்று மூன்று பதார்த்தங்களே என்பதும் அவை மூன்றும் பதி எப்போது உண்டோ, அப்போதே பசு, பாசங்களும் அநாதி நித்யமாக உள்ளன என திருமூலர் பாடலில் கூறுகிறார்.

**கொடிமரம்**

இது மூலஸ்தான இறைவன் பிம்பத்திற்கு நேராக நிறுத்தப்பட்டிருக்கும். ஸ்தம்பத்தை போல சரீரம் இருந்து பிர காசிக்கும் இடை, பிங்கலை என்னும், இருநாடியின் வழியே போய் திரும்பும் பிராணவாயுவை நடுநாடியில் நிறுத்தி சிறிதும், அசையாமல் தியானித்தால் பிராணவாயு நிற்கும். பிராணவாயு நிற்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமும் நிற்கும். மனம் நிற்க ஐம்பொறி களும் நிற்கும்.


உபநிடதத்தில் கூறியபடி,

"ஓம் பூர்ணமத:பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ண முதச்யதே

புர்ணஸ்ய பூர்ண மாதாய பூர்ண டேவா வசிஷ்யதே"

இறைவன் முழுமையானவன். இந்த உலகம் முழுமையானது. முழுமையான இறைவனிலிருந்து முழுமையான உலகம் தோன்றியுள்ளது. முழுமையிலிருந்து முழு முழுமையை எடுத்த பின்பும், முழுமையே முழுமையாக உள்ளது.□

*(நன்றி - மதுரை மீனாட்சி அம்மன் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா 2009 சிறப்பு மலர்)*



இந்துக்களிடையே சக்தி வழிபாடு மிகவும் மேலான இடத்தினை பெறுகின்றது. இச் சக்தி வழிபாட்டிலே நவராத்திரி விரதம் மிகச் சிறப்பு மிக்கது. அந்த வகையில் நவராத்திரி விரதமானது புரட்டாதி மாத வளர்பிறையின் முதல் ஒன்பது தினங்களும் நோற்கப்படும்.

இவ்வொன்பது தினங்களிலே முதல் மூன்று தினங்களும் துர்க்கைக்காகவும் அடுத்த மூன்று தினங்களும் இலக்குமிக்காகவும் இறுதி மூன்று தினங்களும் சரஸ்வதிக்காகவும் அனுஷ்டிக்கப்படுதல் மரபு. இவ்வழிபாட்டின் மூலம் வீரம், செல்வம், கல்வி என்னும் பேறுகள் கிடைக்கும் என்பது விரதத்தை நோற்போரின் நம்பிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2011 ஆம் ஆண்டில் ஆலயத்தின் முகப்புத் தோற்றமும் பக்கத்தோற்றமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்ட பந்தனம் எனப்படும் மருந்து சாத்துதல்

பெ. ராம. லெ. ராம. ராமனாதன் செட்டியார்
நச்சாந்துப்பட்டி

அட்டமா சித்திகளை அடைந்தால் உலகியல் வாழ்வில் நிலைபெற்று வாழலாம் என்ற கருத்துக்கேற்ப, எட்டுச் சக்திகளோடு இறை உருவத்தைப் பீடத்துடன் இணைப்பது தான் அட்ட பந்தனம் எனப்படும் மருந்து சாத்துதலாகும்.

திருஉருவங்கள் ஆடாது அசையாது இருக்கவேண்டும் என்பதே கருத்தென்றாலும், அபிஷேகம் செய்யும் பலவித பொருள்களிலிருந்து தங்கிவிடும் துகள்களுடன், அபிஷேக நீரும் சேர்ந்து எண்பில்லா உயிரினங்கள் தோன்றிவிடக்கூடாது என்பதே உட்கருத்தாகும்.

கொம்பரக்கு, சுக்கான்தூள், குங்குலியம், கற்காவி, செம்பஞ்சு, சாதிலிங்கம், தேன்மெழுகு, எருமை வெண்ணெய் ஆகிய எட்டுப் பொருட்களையும் சேர்த்து ஏழுமுறை இடிக்கச்செய்து உருண்டைகளாக்கி, உறவு சேர்வதற்காகச் சிலகாலம் வைத்திருந்து, கும்பாபிஷேகத்திற்கு குடங்களில் மூர்த்தங்களின் அருட்கலையை எழுந்தருளச்செய்ததன் பின்னர், உடல், உள்ளத்தூய்மை உடையவர்களைக் கொண்டு எருமை வெண்ணெய் சேர்த்து கைதாங்கும் சூடு ஏறும் வரை, சிவசிவ என்று உச்சரித்தவாறு எட்டாவது முறையாக இடிக்கச்செய்து, சூடு ஆறும் முன்னர் மூர்த்தங்களையும், பீடத்தையும் இணைத்து பந்தனம் செய்வதுதான் மருந்து சாத்துவதாகும்.

மருந்து சாத்தியதன் பின்னர், யாகசாலையிலிருந்து மூர்த்தங்களுக்கு, தர்ப்பைக் கயிறு, தங்கக்கம்பி, வெள்ளிக்கம்பி இவற்றால் இணைப்பு ஏற்படுத்தி, கலசங்களிலிருந்த அருட்கலையை மூர்த்தங்களுக்கு எழுந்தருளச்செய்து, பின்னர் அக்கலச நீரைக்கொண்டு அபிஷேகம் செய்யும்போது, அம்மூர்த்தங்களிலிருந்து பலவித சக்திகள் வெளிவந்து வழிபடும் மக்களுக்கு பலவகையிலும் அருள்புரிகின்றன.

இறைத்திரு உருவங்களுக்கு எப்போது வேண்டுமானாலும், அபிஷேகம், அலங்காரம், ஆராதனை, யாகங்கள், ஹோமங்கள் செய்யலாம். ஆனால் மருந்துசாத்துதல் அவ்வாறு நினைத்த மாத்திரத்தில் செய்யமுடியாது. யாகசாலையை முறைப்படி அமைத்துக் கொண்டு கலசங்களில் மூர்த்தத்தின் அருட்கலையை எழுந்தருளச்செய்ததன் பின்னர்தான் மருந்து சாத்தமுடியும். மேலும், பாலாலயம் செய்துகொண்டு கோபுரங்கள், மற்றும் மேல் தளங்களைச் சீர்செய்வதுபோல இதனைச் செய்யவும் முடியாதென்பது சிந்திக்கத்தக்கதாகும். எனவே மருந்து சாத்துதல் என்பது கும்பாபிஷேகத்தில் ஈடுபடும் தொண்டில் எல்லாம் தலையாயதொண்டாகும்.

இத்தொண்டில் ஈடுபடுவோர், மிகவும் உள்ளத்தூய்மையுடன், மருந்து இடிக்கத் துவங்கியதிலிருந்து எல்லா மூர்த்தங்களுக்கும் மருந்து சாத்தி நிறைவுபெறும் வரை சிவசிவ என்று உச்சரித்தவாறே ஒரு மனத்துடன் இருத்தல் வேண்டும்.□

(நன்றி - மதுரை மீனாட்சி அம்மன் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா 2009 சிறப்பு மலர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலந்தைத்திடலில் நான்கண்ட அன்னை பராசக்தி

சிவஸ்ரீ கி. சோமசுந்தரக்குருக்கள்
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.

"ஆடக சிதம்பர அணங்குமையணங்கிலா
நாடகனனந்தசுக நன்கு புனை பங்கினாள்
ஏடக மணம்பொருவ எங்கணும் - இயன்றுளாள்
பாடகமிலங்கு சிறுபங்கஜ மிறைஞ்சுவாம்"

"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தரும் சக்தி
பின்னிமிலான் எங்கள் பிரான்"

எனும் திருவருட்பயன் வாக்கின் படி இறைவன் பஞ்சகிருத்தியங்களை ஆற்றும்போது உடனுறைந்து அவற்றை நிகழ்த்துபவளும், இறைவன் மூலம் ஆன்மாக்களுக்கு போகமோட்சங்களைக் கொடுப்பவளும் சக்தியே.

அப்பெரும் சக்தி ஆதிபராசக்தி யாகி அதன் மூலம் துர்க்கை, லக்ஷ்மி, சரஸ்வதி எனும் முச்சக்திகளாகி வீரம், செல்வம், கல்வி எனபவற்றைக் கொடுப்ப தோடு! சண்டிகாபரமேஸ்வரியாகி தீயவை களை அழித்து நன்மைகளைச் செய்து ஆன்மாக்களுக்கு கருணை புரிகின்றாள்.

இவ்வம்பிகை எங்கள் பிரானோடு பின்னமிலாது விளங்கி எமது ஈழத்திரு நாட்டிலே இறைவனுடனுறைந்து பல் வேறு ஆலயங்களிலும் விளங்கு கின்றாள். அதாவது கீரிமலையில் நகு லேஸ்வரிசமேத நகுலேஸ்வரப் பெரு மானாகவும், சாவகச்சேரியில் அமிர்த பாஷினி சமேத வாரிவனநாதஸ்வாமியா கவும், யாழ் நகரில் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானாகவும், நல்லை நகரில் கமலாம்பிகா சமேத கைலாச நாதப்பெருமானாகவும், பாடல் பெற்ற தலங்களாகிய திருக்கேதீஸ்வரத்தில் கௌரி அம்பிகா சமேத திருக்கேதீஸ்வர நாதனாகவும், திருக்கோணேஸ்வரத்தில் மாதுமையம்மை சமேத கோணேஸ்வரப் பெருமானாகவும், முன்னேஸ்வரத்தில் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னை நாதப்பெரு மானாகவும் வீற்றிருந்து அம்பிகையு டனுறைந்து திருவருள்பாலிக்கின்றார் கள். எனினும் அம்பிகை ஆதிபராசக்தி சுதந்திர சக்தியாக தனித்து வீற்றிருந்து திருவருள் பாலிக்கின்ற அம்பிகையின் ஆலயங்கள் சிவாகம முறைப்படியும், சாக்த முறைப்படியும் அமைந்துள்ளன. அவற்றிலே அம்பிகை மகாகாளியாகி, மஹாமாரியாகி இன்னும் பல மூர்த்தங் களாக எமது நாட்டிலே அமைந்திருக்கின் றன. இவற்றில் தெல்லிப்பளை துர்க்கை அம்பாள், சாவகச்சேரி துர்க்கை அம்பாள், திருகோணமலை பத்திரகாளி அம்பாள் நயினை நாகபூஷணி அம்பாள் நல்லூர் வீரமாகாளி அம்பாள், வல்வை முத்துமாரி அம்பாள் போன்றவை குறிப்பிடத்தக்க ஆலயமாகும்.

இவ்வண்ணம் பல ஆலயங்களில் அம்பிகை சுதந்திர சக்தியாக வீற்றிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணை புரிகின்றாள். கருணை புரிகின்ற அன்னை ஆதிபரா சக்தி அகில லோக நாயகி எமது சாவகச் சேரி நகரில் சரசையம்பதியில் இலந்தைத் திடல் என்னும் பழம்பெரும் திவ்யஷேத் திரத்தில் அழகிய கருணை பொருந்திய திரு முகமும், பாசம், டமருகம், திரிசூலம், கபாலம் என்பவற்றைக் கொண்ட நான்கு திருக்கரங்களுடன் கருணை வடிவமான அன்னை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆதிகாலம்தொட்டு வீற்றிருந்து திரு வருள் பாலிக்கின்றாள்.

இவ்வம்பிகையை வணங்கித் திருவருள் பெற்ற அநேகம்பேர் அதாவது சரசையம்பதி வாழ் சைவமக்கள் அவ்வம்பிகையை வணங்காமல் எக் காரியங்களையும் செய்யமாட்டார்கள். நோய், பிணி தீர்ப்பதிலிருந்து சகல விமோசனங்களுக்கும் அம்பிகைக்கு நேர்த்தி வைத்து சகல கருமங்களையும் செய்தார்கள். அக்கருமங்களும் நன்றாக நடைபெறுவதே வழமையுமாகும்.

இவ்வகையில் பிரசித்தி பெற்ற அம்பிகையினுடைய ஆலயம் பல பெரியார்களால் பரிபாலிக்கப்பட்டு வந்தது. எமக்குத் தெரிந்த காலத்தி லிருந்து எமது தந்தையார் பொன்னுச் சாமிக்குருக்கள் அவர்களும், அக்காலத் தில் ஆலய தர்மகர்த்தாவாக இருந்த திரு. ச. பொன்னுச்சாமி அவர்களும், அவர் களின் உறவினர்களும் சேர்ந்து ஆலயத்தை நன்நிலைக்கு பூஜைகள், திருப்பணிகள் என்பவற்றால் உயர்த்தி வந்துள்ளார்கள். அக்காலத்தில் காளி யம்பாளுக்குரிய விசேட நாட்கள் சுருக்கமாக நடைபெற்றாலும் நவராத்திரி விழா மட்டும் மிகவும் சிறப்பாக நடைபெற்று வந்தது. திருவெம்பாவை நாட்களில் பூஜைகளுடன் புராணபடன மும் நடைபெறும் இங்ஙனம் நடைபெற்று வந்த ஆலயம் அடுத்த பரம்பரையினரான சிவாச்சாரியாராக எமது மைத்துனர் சிதம்பரநாதக்குருக்களும்,பரிபாலன சபையில் ஆசிரியர் வைரவிப்பிள்ளை அவர்கள் அதிபர் மகேஸ்வரன் அவர்கள், இன்னும் அவர்களுடைய உறவினர்கள் அனைவரும் சேர்ந்து சரசாலை வாழ் பெருமக்களின் பொருளுதவியுடன் ஆலயத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக நன்நிலைக்கு உயர்த்தி வந்துள்ளார்கள்.

இக்காலங்களில் ஆலய மண்ட பங்கள் கோபுர வாசல் வரைக்கும், யாக சாலை, களஞ்சியம், விநாயகர், முருகன், தில்லைக்காளி, வைரவப்பெருமான் ஆகிய பரிவார ஆலயங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டு ஆலய உள்வீதி கொட்டகைகள், சுற்றுமதில்களுடன் என அழகுற அமைந்திருந்தன. அத்துடன் நித்திய நைமித்திய கிரியைகள் விசேட மாக மாதப்பூரணை உற்சவங்கள், நவராத் திரி, திருவெம்பாவை என்பன விசேடமாக நடைபெற்று வந்தன. அத்துடன் பிரதம சிவாச்சாரியாருடைய ஊக்கத்தின் பேரில் மஹோற்சவ விழாவும் தொடர்ந்து நடை பெற்று வருகின்றது.

இவ்வகையில் சிறப்புடனும் திரு வருளோடு விளங்குகின்ற அம்பிகை ஆல யம் பிரதம சிவாச்சாரியார் காலத்தில் மூன்று கும்பாபிஷேகங்களைக் கண்டுள் ளது. மூன்றாவது கும்பாபிஷேகமாகிய தற்போது நடைபெற்ற பிரதிஷ்டை விழாவிலும் தமது இயலாத நிலையிலும் கும்பாபிஷேக விழாவை அம்பிகையின் திருவருளோடு நடாத்தி வைத்தமை மிகவும் சந்தோஷத்திற்கும், பெருமைக் குரிய விடயமாகும்.

மூன்றாவது கும்பாபிஷேகம் நடைபெற்ற இவ்விழாவில் ஆலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புடையதாகும். இவ்விழாவிலே சிவாச்சாரியார்கள், அறங்காவலர்கள், அடியார்கள் அனைவரும் மூன்றாவது பரம்பரையை அடைந்துள்ளார்கள். இவ்வாலயத்தில் இன்னுமொரு சிறப்பு ஆலயத்தின் ஆஸ்தான மங்களஇசை வித்துவானாக விளங்கிய அமரர் தவில் வித்துவான் முருகப்பா அவர்கள் புதல்வன் நாதஸ்வர வித்துவான் பஞ்சாபிகேசன் அவர்கள் புதல்வர்கள் நாதஸ்வர வித்துவான் நாகேந்திரன் அவர்கள், திரு. விக்கினேஸ்வரன் அவர்களும், இவ்வாலயத்திற்கு மூன்று தலை முறையாக நாதாஞ்சலி செய்துள்ளார்கள். இவ்வண்ணம் பலவகைச் சிறப்புள்ள மஹா காளியம்பாள் திவ்யபிரபந்தங்களைப் பற்றி எவ்வளவோ எடுத்துரைக்கலாம்.

**காளியம்பாள் பற்றிய எம்மனத்திலிருந்து சிலவரிகள்**

எமது குலதெய்வமாக விளங்கும் நெல்லியடி விநாயகப் பெருமானுக்கு அடுத்ததாக காளியம்பாள் எமது குடும்பத்தில் தந்தையார் காலம் தொட்டு குல தெய்வமாக விளங்குகின்றாள். எனக்கு நினைவுதெரிந்த காலத்திலிருந்து காளி கோவில் என்றால் நவராத்திரி நவராத்திரி என்றால் காளிகோவில் என்கின்ற நினைவே இருந்துவந்தது.

உபநயனம் நடைபெற்ற காலத்திலிருந்து தந்தையாரோடு அம்பிகை ஆலயத்திற்குச் சென்று மந்திரங்களை உச்சாடனம் பண்ணி, தோத்திரங்களைப் படித்து, தந்தையாரோடு இணைந்து நவராத்திரி வைபவங்களில் பங்குகொண்டு வந்தோம். அதன்பின்பு மைத்துனர் பிரதம குருக்களாக வருவதோடு, நவராத்திரி விழாவை அவரோடு சேர்ந்து நடத்தத் தக்க வாய்ப்புக்கிடைத்தது பெரும்பாக்கியம். இன்று நேற்றல்ல 1999 ஆம் ஆண்டு வரையில் இடைவிடாது நவராத்திரி பூஜையில் கலந்துகொள்ளத்தக்க பெரும்பேறுகிடைத்தது. இடையில் நடைபெற்ற இரு கும்பாபிஷேகங்களிலும் பிரதம குருக்களுடன் இணைந்து செயற்படத்தக்க காலம் அமைந்தது.

மூன்றாவது நடந்த இந்தக் கும்பாபிஷேகத்தில் உடல்நலம் குன்றியதால் கலந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்டமை மிகவும் வேதனைக்குரியதாகும். எனினும் சகல நிறைவுடன் இக் கும்பாபிஷேகம் நடைபெற்று மண்டலாபிஷேகமும் பூர்த்தியாகின்றது என்பதை எண்ணி மிகவும் சந்தோஷமும், பெருமையும் கொள்கின்றேன்.

அன்னை மகாகாளியம்பாள் மூத்த சிவாச்சாரியராகிய பிரதம குருக்கள், தற்போதைய சிவாச்சாரியார் அவர்களின் ஏனைய சகோதரர்கள் அந்தணப் பெருமக்கள், மஹாகும்பாபிஷேகத்தை நிர்வகித்துச்செய்த பரிபாலன சபையினர் அறக்கொடை வள்ளல்கள், உபயகாரர்கள், அனைவரும் பெரியவர்கள்! பெருமைக்குரியவர்கள்! எல்லோருக்கும் ஸ்ரீ வீரமாகாளியம்பாள் திருவருள் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்து, பிரதம சிவாச்சாரியார் அவர்கள் திருவடியை வணங்கி அனைவரையும் வாழ்த்தி அமைகின்றேன்.☐

வாழ்க! வளர்க! வணக்கம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சக்தி விரதங்கள்

ஜோதிடமணி
பிரம்மஸ்ரீ சி. ஜெகதீஸ்வரசர்மா J.P.

## நவராத்திரி விரதம்

சைவமக்கள் விரத அநுஷ்டானங்களில் மிகுந்த நம்பிக்கை உள்ளவர்கள். விரதங்களை அனுஷ்டிப்பதால் புறத்தூய்மை, அகத்தூய்மை ஏற்பட ஏதுவாகும். உணவைக் குறைத்து வழிபாடு செய்வதால் உடலில் நோயின்றி சுகமாக வாழலாம். விரதங்களை அனுஷ்டிப்பதில் வெவ்வேறு நிலைகள் காணப்படுகின்றது. சில விரதங்களில் காலை உணவை விடுத்து மதிய உணவையருந்தலாம். உபவாசமாயின் அன்று உணவருந்துதல் தவிர்க்கப்படுகின்றது. மேலும் விரதங்களைக் கைக்கொள்வதில் பல பேதங்கள் உண்டு. இதில் விநாயக விரதங்கள், சிவவிரதங்கள், ஸ்கந்த விரதங்கள், சக்தி விரதங்கள், பொதுவான விரதங்கள் எனப் பலவுண்டு. ஒவ்வொருவரும் தத்தமக்கு ஏற்றவகையிலே விரதம் அனுட்டித்துக் கொள்ளலாம். இங்கு சக்தி விரதங்களை நோக்குவோம்.

இவ்விரதம் உலக மாதாவாகிய அன்னை பராசக்தியை வழிபாடு செய்யும் விரதமாகும். இது சாந்திர முறைப்படி அனுஷ்டிக்கப்படும் விரதமாகும். சாந்திரமாத ஆஸ்விஜ சுத்த பிரதமை முதல் நவமி ஈறாகிய நவ திதிகள் கொண்ட காலப்பகுதியில் இவ்விரதம் நோற்கப்படும். திதி வியாபகங்களின் காலத்தைப் பொறுத்து அனேகமாக ஒன்பது நாட்களும் சில வேளைகளில் எட்டு நாட்களும் இவ்விரதம் கொள்ளப்படுகின்றது. பிரதமை திதியில் அதுவும் காலையிலே கும்பம் வைத்து இவ்விரதம் ஆரம்பிக்கப்படல் வேண்டும். அமாவாசை சேராத பிரதமை கவனத்தில் கொள்ளவேண்டும். மறுநாள் பிரதமை இல்லாவிடின் அமாவாசை சேர்ந்த பிரதமையில் ஆரம்பிக்கலாம். விஜயதசமி அன்று நவராத்திரிக்கும்பம் அபிஷேகம் காலையில் செய்யப்படும். மாலையில் மானம்பு உற்சவம் நிகழும். மாலை பிரதோஷ காலமாகிய மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரையுள்ள காலப் பகுதியில் தசமித்திதி வியாபித்திருப்பதை வைத்தே விஜயதசமி தினம் தீர்மானம் செய்யப்படும்.

நவராத்திரி வழிபாடு சக்தியின் மகிமையை விளக்குவதாகும். மனிதனின் முக்கிய தேவைகளான வீரம், செல்வம், கல்வி இம் மூன்றையும் வேண்டி அவற்றுக்கு அதிபதிகளாகிய துர்க்கை லட்சுமி சரஸ்வதி ஆகிய மூன்று சக்தி அம்சங்களையும் மும்மூன்று நாட்களில் வழிபடுவதே இவ்விரதத்தின் நோக்கமாகும்.

முதல் மூன்று தினங்கள் வீரத்தை வேண்டி துர்க்கா தேவியையும், அடுத்த மூன்று தினங்களும் செல்வத்தை வேண்டி லட்சுமி தேவியையும், இறுதி மூன்று தினங்களும் கல்வியை வேண்டி சரஸ்வதி தேவியையும் வழிபாடு செய்யப்படும். இறுதி நாளாகிய சரஸ்வதி பூஜையன்று கலைத்தாயின் முன் கலைப் பொருட்கள், இசைக் கருவிகள், தொழிற் கருவிகள் , புத்தகங்கள் , ஆயுதங்கள் என்பவற்றை வைத்து வழிபடுவதுடன் அந்நாளில் இவற்றைப் பயன்படுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதும் தவிர்க்கப்படுகின்றது. மறுநாள் விஜயதசமி என்னும் வெற்றித் திருநாளன்று இவற்றைப் பயன்படுத் துவது மரபாக உள்ளது.

விஜயதசமி தினத்தன்று மாலை யில் ஆலயங்களில் மகிஷாசுர வதம் (வாழை வெட்டுதல்) இடம்பெறும். தேவியின் வெற்றியைக் குறிக்கும் விஜய யாத்திரை இனிது வெற்றியுடன் நிறை வேறும். இத்தினத்தில் வன்னி மரத்தைப் பூசித்து வழிபட்டால் பாவ விமோசனம் சத்துரு நாசம் என்பன கிட்டும்.

நவராத்திரி விரதம் புரட்டாதிச் சனியுடன் சேர்ந்துவரும்போது காலை யில் எண்ணெய் இன்றி ஸ்நானம் செய்து எள்ளெண்ணெய் எரித்து சனிக்கு வழி பாடுசெய்து பின் நவராத்திரி விரதத்தை யும் சேர்த்துக் கைக்கொள்ளலாம்.

புரட்டாதி மாதத்தில் வருகின்ற இந்த நவராத்திரி சாரதா நவராத்திரி யென்றும் பங்குனி மாதத்தில் (சாந்திர மாத சைத்ர பிரதமை முதல் நவமி வரை வருகின்ற நவராத்திரி வசந்த நவராத்திரி என்றும் கூறப்படும். வசந்த நவராத்திரி காலத்தில் மகாசண்டீ ஹோமம் சில ஆலயங்களில் சிறப்பாக இடம்பெறும்.

## கேதார கௌரி விரதம்

விஜயதசமி தினம் முதலாக ஐப்பசி அமாவாசை வரையுள்ள 21 திதிகள் கொண்ட காலம் இவ்விரதம் அனுஷ்டிக்கவேண்டிய காலமாகும். திதி வியாபகங்களின் காலத்தைப் பொறுத்து 21 நாட்களும் சில வேளைகளில் 22 நாட்களும் இவ்விரதம் நோற்கப்படும். கேதாரேஸ்வரர் என்னும் பெருமானை நோக்கி அன்னை கௌரி அனுஷ்டித்த விரதம் இதுவாகும். அன்னை ஈஸ்வரனை நோக்கி விரதமிருந்து (இடது பாகம்) பாதி உடம்பைப் பெற்றது இவ்விரதத் தினாலேயே ஆகும். அதாவது ஈஸ்வரன் அர்த்தநாரீஸ்வரப் பெருமான் ஆகிய புண்ணிய நாள் ஆகும்.

இருபத்தோரிழைகள் கொண்ட நூலை கும்பத்தில் வைத்து தினமும் ஒவ்வொரு முடிச்சுக்களாகப் போட்டு, 21-ம் நாள் அந்நூலை இடது கையில் கட்டவேண்டும். உமாதேவியார் சிவனுக்கு இடது புறத்தில் இருப்பதாலும் அர்த்த நாரீஸ்வர உருவத்தில் பெண்ணின் கையாக இடது பகுதி விளங்குவதாலும் இடது கையிலே இந்நூல் கட்டப்படுவது பொருத்தமானது.

சுமங்கலிப்பெண்கள் இவ்விர தத்தை அனுஷ்டிப்பதால் மகிழ்ச்சியான இல்லற வாழ்வும், நன்மக்கட்பேறும் கிடைக்கும். திருமணமாகாதவர்களுக்கு சிறப்பான மணவாழ்க்கை கிடைக்கும்.

## வரலட்சுமி விரதம்

வரங்களைக் கொடுக்கும் தாயா கிய லட்சுமி தேவியைக் குறித்து பெண் களால் நோற்கப்படும் விரதமாகும். இது சாந்திரமாத அடிப்படையிலே தீர்மானம் செய்யப்படுகின்றது. சிராவண பௌர்ண மிக்கு முன்வரும் வெள்ளிக்கிழமையில் அனுஷ்டிக்கப்படவேண்டும். சௌரமாத ஆடி மாதத்திலும் சிலவேளை ஆவணி மாத்திலும் வரும்.

விரதமிருந்து கும்பத்திற்கு தேங் காய், பழம், பூ, வெற்றிலை, பாக்கு என்பவற்றைப் படைப்பதுடன் நல்ல கழி நூலிலே மஞ்சள்தோய்த்து ஒன்பது இழைகள் கொண்டதாக முறுக்கி எடுத்து பூஜை செய்யவேண்டும். இத்தினத்தில் தீபபூஜை செய்வதும் சிறப்பாகும். பூஜை, வழிபாடுகள் முடிந்ததும் நோன்பு நூலை வலது கையில் கட்டவேண்டும். கேதார கௌரி விரதத்துக்கு இடது கையில் நோன்பு நூல் கட்டப்படவேண்டும். சிவபெருமான் தனது இடது பாகத்திலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை பராசக்தியை வைத்துள்ளார். வரலட்சுமி விரதத்தில் மகாவிஷ்ணு லட்சுமியை தனது வலது மார்பில் அமர்ந்திருக்கச் செய்துள்ளார். இதனால் வலது கையிலே நோன்புநூல் இவ்விரதத் துக்கு மட்டுமே கட்டப்படும். சுமங்கலிப் பெண்களும், கன்னிப் பெண்களும் இவ் விரதத்தை அனுஷ்டிக்கலாம். சுமங்கலிப் பெண்களுக்கு மாங்கல்யபலம் கிடைப்ப தோடு கன்னிப் பெண்களுக்கு விரைவில் மகிழ்ச்சியான மணவாழ்வு கிடைக்கப் பெறும்.

### காரடையா நோன்பு

இவ்விரதத்தை திருமணமான பெண்கள் மட்டுமே அனுட்டிப்பர். மாசி மாதம் முடிந்து பங்குனி மாதம் பிறக்கும் நேரத்தில் இவ்விரதம் கைக்கொள்ளப் படவேண்டும். அதிகாலையில் எழுந்து கார அடை செய்து, பால், பழம், வெற்றிலை, பாக்கு என்பனவற்றை வைத்து அம்பிகையைப் பிரார்த்திக்க வேண்டும். அத்துடன் "மாசிக்கயிறு பாசி படியும்" என்பது வழக்கு. எனவே தாலி மஞ்சள் புதிய நூலை அம்பிகையின் பாதங்களில் வைத்து பூஜை, வழிபாடு முடிந்ததும் கணவனை வணங்கி பின் பழைய தாலி நூலைத் தவிர்த்து, புதிய மஞ்சள் நூலை மாற்றிக்கொள்ள வேண்டும். இத்தினத்தில் இல்லத்துக்கு வரும் சுமங்கலிப் பெண்களுக்கு கார அடை, மஞ்சள், குங்குமம், சட்டைத் துணி என்பவற்றைத் தானமாகக் கொடுத்தல் வேண்டும். தமது கண வனுக்கு நீண்ட ஆயுள் வேண்டியே இவ் விரதம் அனுஷ்டிக்கப்படும்.

### சாவித்திரி விரதம்

இது ஆனிமாதப் பௌர்ணமி யன்று அனுஷ்டிக்கப்படும் விரதமாகும். தேவியின் அம்சத்தால் அசுவபதி மகாராஜாவின் மகளாகத் தோன்றியவள் சாவித்திரி. சத்தியவான் அற்ப ஆயுள் உடையவன் என்பதை அறிந்திருந்தும் அவனையே மணந்தாள். சாவித்திரி விரதமிருந்து யமனிடமிருந்து தம்பதியைக் காப்பாற்றினாள். எனவே இவ்விரதம் மேற்கொள்பவர்கள் சகல சௌ பாக்கியங்களும் புத்திரச் செல்வமும் பெற்று யம பயமின்றி நீடு வாழலாம் என்பது இவ்விரதத்தின் சிறப்பாகும்.

### மகாலட்சுமி விரதம்

ஒவ்வொரு மாத கடைசி வெள் ளிக்கிழமையில் இவ்விரதம் அனுஷ் டிக்கப்படும். அதிகாலை துயில் எழுந்து காலைக்கடன்களை முடித்து, விரத மிருந்து ஆசாரத்துடன் விநாயகர், அனந் தபத்மநாபன், மகாலட்சுமி ஆகியோரை வணங்க வேண்டும். மகாலட்சுமி ஸ்தோத்திர பாராயணம் செய்வது நன்று. இவ்வாறு குறித்த வெள்ளிக்கிழமையில் மனத்தூய்மையோடு வழிபாடியற்றின் சகல ஐஸ்வரியங்களும் கிடைக்கும்.

### ஆடிச்செவ்வாய் விரதம்

ஆடி மாதத்தில் வருகின்ற செவ்வாய்க்கிழமைகளில் இவ்விரதம் அனுஷ்டிக்கப்படும். மங்களகாரகன் என்று செவ்வாய்க்கிரகத்தைச் சொல்லப் படும். அதனால் மங்கள வாரமாகிய செவ்வாய்க்கிழமை சூரியன் சந்திரனின் வீட்டில் இருக்கும் காலத்தில் இவ்விரதம் மேற்கொள்வதால் மங்கள வாழ்க்கை கிட்டும். சுமங்கலிப் பெண்கள் தமது மண வாழ்க்கை மகிழ்ச்சியுடன் சிறப்புற்று விளங்குவதற்கும், கன்னிப் பெண்கள் சிறந்த மாங்கல்யப்பேறு கிடைப்பதற்கும் அம்பிகையை வழிபட்டு இவ்விரதத்தை அனுஷ்டிப்பர்.

### பராசக்தி விரதம்

ஒவ்வொரு மாதமும் இறுதிச் செவ்வாயன்று காலையில் எழுந்து ஸ்நானம் மேற்கொண்டு ஆசாரத்துடன் விநாயகரை வணங்கி, பராசக்தியைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்நிற மலர்களால் அர்ச்சித்து வழிபட வேண்டும். காலையில் ஆகாரத்தைத் தவிர்த்து வழிபாடு நிறைவெய்தியதும் மதியம் உணவருந்தலாம். இதனால் மாங்கல்யபலம் கிடைக்கப்பெறும்.

## பூரணை விரதம்

ஒவ்வொரு மாதப் பூரணையன்றும் அம்பாள் ஆலயங்களில் விசேட அபிஷேகம், பூஜை என்பவற்றுடன் தீபபூசை நடைபெறுகின்றது. இத்தீப பூசையில் பெண்கள் கலந்துகொண்டு வழிபாடாற்றுவதூல் மனச்சந்தோஷம் கிடைப்பதோடு, மங்கல வாழ்வும் அமையப்பெறும். சில ஆலயங்களில் இந் நாளில் ஸ்ரீசக்கர யந்திர பூசை இடம்பெறு கின்றது. இப்பூசையில் கலந்து கொள்வ தால் மனதில் ஓர் புதிய உற்சாகம் கிடைக் கப்பெறும்.

## மங்களகௌரி விரதம்

திருமணமான பெண்கள் மாங்கல்ய விருத்திக்காக அனுஷ்டிக்கப் படும் விரதமாகும். வெள்ளிக்கிழமை களில் இவ்விரதத்தை நோற்கலாம். அதிகாலையில் எழுந்து காலைக் கடன்களை நிறைவேற்றி திருவிளக்கில் 16 திரிகள் இட்டு நெய்யால் விளக்கேற்ற வேண்டும். திருவிளக்கின் முன் மஞ்சள், குங்குமம், அரிசி, வெற்றிலை, பாக்கு, பழம், சட்டைத் துணி என்பனவற்றை வைத்து வழிபாடாற்ற வேண்டும். வழிபாடு முடிந்ததும் விரதம் இருப்பவரின் தாய் சுமங்கலியாக இருப்பின் அவருக்கும் அல்லது வேறு சுமங்கலிப் பெண்களுக்கு மேற்கண்ட பொருட்களை தானமாகக் கொடுக்கலாம். பின்னர் தானம் கொடுத்த பெண்ணுக்கு உணவளித்த பின்னரே விரதம் அனுஷ்டித்தவர் உணவருந்த வேண்டும்.

இவ்விரதத்தினை திருமணமான முதல் ஆண்டு தாய் வீட்டிலும் பின்னர் நான்கு ஆண்டுகள் கணவன் வீட்டிலும் செய்தல் வேண்டும். இவ்வாறு ஐந்து ஆண்டுகள் விரதம் இருப்போருக்கு நீண்ட ஆயுளும் திருமாங்கல்யப் பலனும் கிட்டும்.

## ராகுகால துர்க்கை அம்மன் வழிபாடு

இந்து மக்களாகிய நாம் எக் காரியத்தைச் செய்வதானாலும் நாளும், நேரமும் பார்த்தே ஆரம்பிப்பது வழக்கம். இதனையொட்டியே நம்முன்னோர் "மங்களம் தரும் மங்களவாரம் தனம் தரும் சுக்கிரவாரம்; பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது என்று கூறியுள்ளனர். இதையொட்டியே ஒவ்வொரு நாளிலும் குறிப்பிட்ட காலத்தை ராகுகாலம், யமகண்டம், குளிகை எனப் பிரித்தனர். இதில் ராகுகாலம், யமகண்டம் என்பன வரும் காலத்தில் நல்லவை செய்வதைத் தவிர்க்க வேண்டும் என்றும் குளிகைக் காலம் நல்ல நேரம் என்றும் கூறுவர். இந்த வகையில் ராகுகாலம் கூடுதலான பாதிப்புக்களை ஏற்படுத்தும். இக்காலத் தில் எந்த சுபகருமமும் செய்வதில்லை.

ஆனால் ராகுகாலம் தான் துர்க்கையை வழிபட உகந்த காலமென்று கருதப்படும். அதிலும் செவ்வாய், வெள்ளி வாரங்களில் ராகுகாலம் ஏற்படும் நேரத்தில் துர்க்கை வழிபாட்டினை மேற்கொண்டால் சகல செல்வங்களும் கிடைக்கப்பெறும். செவ்வாய்க்கிழமை பகல் 3-00 மணி முதல் 4-30 வரையும், வெள்ளிக்கிழமை பகல் 10-30 முதல் 12-00 மணிவரையும் ராகுகால நேரங்களாகும். திருவாரூரில் ராகுகால துர்க்கை அம்மனுக்கென்று தனியான சன்னிதி அமைக்கப்பட்டு ராகுகாலத்தில் விசேட வழிபாடு நடத்தப்படுகின்றது. இவ்வழிபாடு செய்வோர் அவ்வாரங்களில் விரதமிருந்து அவ்வழிபாட்டை நிறை வேற்றிய பின் உணவருந்த வேண்டும்.□



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலாவது மகோற்சவ குரு கௌரவிப்பு - 2003



ஆலய பிரதம குருவும் நித்திய குருவும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரதங்களை அனுட்டிக்கும் போது கைக்கொள்ள வேண்டிய

# விதிகளும் மரபுகளும்



கோப்பாய் சிவம்

விரதங்களுட்சில, நித்திய விரதங்களென்றும் வேறு சில காமிய விரதங்களென்றும் சொல்லப்படும். சில தேவைகளை முன்னிட்டு இறைவனிடம் நமது வேண்டுதல்களை முன்வைத்துக் குறிப்பிட்ட காலத்திற்கு அனுஷ்டித்து அதன் பின் உத்தியாபனம் செய்யப்படுபவை காமிய விரதங்கள், அப்படியல்லாமல், எதுவித பலன்களையும் எதிர்பாராமல் அமாவாசை முதலிய விரதங்களைத் தொடர்ந்து அனுஷ்டித்தல் நித்திய விரதங்களாம்.

"தாய் தந்தையர் இறந்த திதிகளாக ஆண்டுதோறும் வரும் சிரார்த்த தின விரதம், மாதந்தோறும் வரும் அமாவாசை விரதம், சித்திரை, ஐப்பசிமாதப் பிறப்புக்களான விஷ புண்ணிய கால விரதங்கள், ஆடி, தை மாதப்பிறப்புக்களான அயன புண்ணியகால விரதங்கள் என்பன பிதிரர் விரதங்களுள் சிறந்தவை. இவை கால எல்லை கருதாமல் அறிவு உள்ளவரை கடைப்பிடிக்கவேண்டிய விரதங்களாம்." (க. வை. ஆ. சர்மா. ஈழநாடு)

பொதுமக்கள் பெரிதும் காமிய விரதங்களை விரும்பி அநுஷ்டிக்கின்றனரெனினும், உரியமுறைப்படி சரியான விதிமுறைகளை அறிந்து கைக்கொள்வோர் மிகச் சிலரே! இன்னும், "ஏனைய சமயிகளிடத்துள்ள அபிமானம் சைவர்களிடத்தில் இல்லாதால், நான்கு சைவர் சேர்ந்து எக்கருமத்தையும்செய்ய இயலாதவர்களாயுள்ளனர். ஒருவர் போனவழி இன்னொருவர் போகமாட்டார். ஒருவருக்கொருவர் அபிப்பிராய பேதமுடையவராய்க் காணப்படுவர். வைஷ்ணவம் முதலிய பிறசமயங்களில் இத்திறத்தனவான உட்பிரிவுகள் அதிகமாக இல்லாமையால் போலும், அவற்றை அநுசரிப்போர் பல்கியிருக்கின்றனர். இதற்குச் சான்று வைகுண்டஏகாதசிவிரதம் அநுஷ்டிப்போர் பலரும், சிவராத்திரி சோமவாரம் அநுஷ்டிப்போர் சிலருமாயிருப்தேயாம்."(திருமயிலை சே.வெ. ஜம்புலிங்கம்பிள்ளை )

இன்ன இன்ன விரதங்கள் இன்ன இன்ன நோக்கத்துக்காக அநுஷ்டிக்கப்படவேண்டும். இதனை எத்தனை வருடங்கள் கைக்கொள்ளப்படவேண்டும். இவ்வாறு கைக்கொள்ளப்பட வேண்டும். என்றெல்லாம் விதிமுறைகள் உண்டு. அவற்றை அறிந்து முறையாகக் கைக்கொள்வது அவசியம்.

இந்நூலில் முக்கியமான விரதங்களுக்கெல்லாம் இவ்விதிமுறைகள் இயன்றவரை சொல்லப்பட்டிருக்கின்றன. வாரவிரதங்கள் முதலிய சாதரண விரதங்களுக்கு விதிமுறைகள் கட்டுப்பாடுகள் அவ்வளவாக இல்லை. இவை நித்திய விரதங்களாகக் கணிக்கப்பட வேண்டியவை.

பூஜை முறைகள், வழிபாட்டு முறைகள் உணவுக்கட்டுப்பாடுகள் சிறப்பாகக் குறிப்பிடப்படாத எல்லா விரதங்களுக்கும் பொதுவான விதிமுறைகள் இங்கு சொல்லப்படுகின்றன.

அதிகாலைத் துயிலெலுதல், நீராடி தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிதல், சந்தியாவந்தனம் முதலிய நித்தியகர்மா அநுஷ்டானங்களை (அநுட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டானம் பார்த்தல்) முறைப்படி செய்தல், காலை மாலை வீட்டில் சுவாமி அறையில் விளக்கேற்றி வழிபட்டு இயன்றவரை திரு முறைப்பாடல்களைப் பாடுதல், வீபூதி, உருத்திராக்கம் முதலிய சமய சின்னங் களை அணிந்திருத்தல் காலை உண வினை நீக்கி, மதியம் ஒருவேளை மட்டும் அன்னமும் இரவில் பால் பழம் அல்லது பலகாரம் உண்ணல் என்பன எல்லா விர தங்களுக்குமே முக்கியமாக வேண்டப் படும் கட்டுப்பாடுகளாகும்.

விரத நாளிலும் அதற்கு முதல் நாளிலும், மறுநாளிலும் மச்சம், மாமிசம், முட்டை முதலியவற்றை முற்றாக நீக் குதல், தம்பதிகள் குடும்ப உறவை தவிர்த்தல் என்பனவும் அவசியமாகும். உபவாச விரதமெனில் முதல்நாளிலும், அடுத்த நாளிலும் ஒரு நேரஉணவுண்டு விரதமிருத்தல் வேண்டும்.

தாமச குணங்களை அதிகப் படுத்தும் வெங்காயம், உள்ளி முருங் கைக்காய், சுரைக்காய், நீற்றுக்காய், இவற்றையும் இந்நாட்களில் உணவில் சேர்க்கக் கூடாது. தாம்பூலம் தரித்தலும் தவிர்க்கப்படல் வேண்டும். விரதநாட் களில் இயன்றளவு தானதர்மங்கள் செய்யவேண்டும். மஹேஸ்வரபூஜை செய்வது மிகநன்று.

உரிய காலம் முடிந்ததும் விரத உத்தியாபனம்செய்து விரதத்தை நிறுத்த வேண்டும். விரதத்துக்குரிய மூர்த்தியின் வடிவத்தைப் பொன்பிரதிமைகளைச் செய்து வீட்டிலே வைத்து முறைப்படி கும்பங்கள் ஸ்தாபித்து சங்கல்பபூர்வ மாகப் புண்ணிய யாகவாசனம் முதலிய பூர்வாங்கக் கிரியைகளுடன் ஆரம்பித்து சமஸ்தோபசார பூஜைகளையும் செய்து முடித்து அன்று முழுவதும் உபவாச மிருத்தல் வேண்டும். மறுநாள் அதி காலையில் நீராடி நித்திய கர்மா நுஷ்டானங்கள் செய்து மறுபடியும் அவற்றுக்குப் பூஜைகள் நடத்திய பின் கும்பப்பொருட்களும், பொன்பிரதிமையும் மற்றும் தானப்பொருட்கள் யாவும் சேர்த்து (வேட்டி, சால்வை, அரிசி, காய்கறி, தாம்பூல தட்ஷிணைகள்) பூஜைகளைச் செய்வித்த குருவுக்கு வழங்கி," முறைப்படி நான் கைக்கொண்ட இந்த விரதத்தை இன்று உத்தியாபனம் செய்து முடிக்கின்றேன். சாஸ்திரங்களில் சொல்லப்பட்டபடி இவ்விரதத்திற்குரிய பலன்களைத் தந்தருளவேண்டும்." என்று பிரார்த்தனை செய்யவேண்டும். தம்பதி பூஜை, சுமங்கலிபூஜை முதலியன குறித்த விரதத்துக்குச் சொல்லப்பட்டிருந்தால் அவற்றையும் செய்துமுடித்த பின் மஹேஸ்வரபூஜை செய்து விட்டுப் பாரணை பண்ணவேண்டும். பாரணை காலை எட்டரை மணிக்கு முன் செய்து முடிக்க வேண்டுமென்பது விதி.

இங்கு குறிப்பிட்ட விதத்தில் வீட்டிலே பூஜைகளைச் செய்வதும், பொன் பிரதமைகளைச் செய்து தானம் கொடுப்ப தும் யாவருக்கும் எளிதானதன்று. இதனால் உத்தியாபனமே செய்யாது விடுவதும் முறையன்று. எனவே, உரிய காலத்தில் ஆலயம் சென்று விரத உத்தியாபனம் செய்யப்போகிறேன் என்று குருமுகமாகச் சங்கல்பம் செய்து இயன்ற வகையில் விஷேச அபிஷேகம், பூஜை, அர்ச்சனை, வழிபாடுகளைச் செய்து குருவுக்கு தாம்பூல தட்ஷிணைகளும் முன்னர் கூறிய தானங்களுள் இயன்ற வற்றையும் வழங்கி விரதத்தை மனநிறை வோடு முடித்து இறைவனிடம் சமர்ப்பிக் கலாம்.

இவ்விதம் விரதோத்தியாபனம் செய்பவர்களுக்காகவும் சாதாரணமாக பாரணை சமயத்தில் ஆலய தரிசனம் செய்து விட்டுப்போக வருபவர்களுக் காகவும் உபவாச விரதங்களுக்கு மறுநாள் காலையில் ஆலயங்களில் நிகழும் விசேஷ பாரணைப் பூஜையை அதிகாலை யிலேயே நிறைவேற்றி விரதமநுஷ்டிப் போர் எட்டரை மணிக்கு முன் தமது பாரணையை முடித்துக்கொள்ளும் வகையில் உதவிசெய்ய ஆலய பரிபால கர்களும், குருமாரும் முன்வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய நேரத்தில் பாரணை பண்ணுவதற்குத்தடைகள் ஏற்பட்டால் பாரணைக்காகச் சமைத்த உணவைச் சாமிப்படத்திற்கு முன் படைத்து அதனை இந்த உரிய நேரத்தில் முகர்ந்து விடுதல் போதுமானது. பின்னர் இயன்ற பொழுதில் சாப்பிடலாம்.

சமையல் தயாராவதிலும் தாமதம் ஏற்படின் சாமிப்படத்துக்கு முன் ஒருசிறு பாத்திரத்தில் நீரெடுத்து வைத்து அதில் துளசியை இரண்டு அடியிலைகளுடன் கூடிய கதிராக எடுத்து அந்த நீரில் இட்டுப் பூஜை வழிபாடு முடிந்ததும் அந்த நீரை உரிய காலத்தில் அருந்திப் பாரணையை நிறைவு செய்யலாம். பின்னர் வசதியான போது சாப்பிடலாம்.

ஒருவிரதத்தின் முடிவில் - அதாவது பாரணை நாளில் இன்னொரு விரதம் வந்தால் இந்த முறையையே கடைப்பிடிக்கவேண்டுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இரண்டாவது விரதமும் உபவாசமாக இருந்தால் முதலாவது விரதத்தின் பாரணையைத் துளசி தீர்த்தம் அருந்தி நிறைவேற்றிவிட்டு இரண்டாவது விரதத்தை முறைப்படி உபவாசமாக அநுஷ்டித்து அதற்கு மறுநாள் பாரணை செய்யவேண்டும்.

பெரும்பாலும் கேதாரகௌரி நோன்பின் மறுநாள் ஸ்கந்தஷஷ்டி விரதாரம்பம் அல்லது ஸ்கந்த ஷஷ்டி விரத முடிவில் அதாவது பாரணையன்று சோமவார விரதம் வருவதுண்டு. இந்த சந்தர்ப்பத்தில் மேற்கூறிய விதிமுறையே அநுசரிக்கப்பட வேண்டும்.

சிலர் உதயத்திற்கு முன் முதல் விரதத்திற்குரிய பாரனையை முடித்து விடுவதுண்டு. ஆனால் சூரியோதயத்துக்கு முன் பாரணைசெய்தல் விதியன்று.

விரத நியமங்களை ஆரம்பத்திலேயே அளவுடன் கைக்கொள்வது நன்று. கடமையான முறையில் ஆரம்பித்துப் பின்னர் அரைகுறையாக நிறுத்துவது கூடாது. "விரதத்தைக் கிரமப்படி அநுசரிக்க முடியாதவர் தம்மாலியன்றளவு அநுசரிப்பதே தகுதி. தம்மளவுக்கு மீறித் தேகத்தைக் வருத்த நேரிடின் விரதத்தில் வெறுப்புத்தோன்றும், இதனால் விரத பலன் இல்லாமல் போய்விடும்." (திருமலையிலே சே. வெ. ஜம்புலிங்கப் பிள்ளை)

இனி, விரதங்களை அநுஷ்டிக்கத் தகுதியானவர்கள் யார், தகுதியற்றோர் யார் என்றொரு கேள்வி எழுகிறது. சுத்த போசனமுடையோராயும் தீக்ஷை பெற்றவர்களாயும், ஆசாரசீலர்களாயும் இருப்பவர்களே விரதங்களை கைக்கொள்ளத் தகுதியுடையோர் என்று விரத நூல்கள் எடுத்துரைக்கின்றன.

நோயாளார்களுக்கும், ஆசௌசமுடையோரும், பாலர்களும் , மாதவிலக்கான பெண்களும் விரதம் அநுஷ்டிக்கும் தகைமை இல்லாதவர்கள் இவர்கள் விரதம் கைக்கொள்ள வேண்டுமாயின் தமக்காக வேறொருவரை வரித்துக் கொள்ளவேண்டும். பெண்கள் தம் கணவரை அல்லது மகனை வரித்துக் கொள்ளலாம். நோயாளர், பிள்ளைகளை அல்லது குருமாரைக்கொண்டு விரதத்தை நோற்கலாம். பாலர்களுக்காகப் பெற்றோர் நோற்கலாம் . ஆசாரமில்லாதோர் அல்லது ஆசௌசமுடையோரும் குருமாரை வரித்துக் கொள்ளலாம்.

இவை விரத அநுஷ்டானங்களுக்கான பொது விதிகளாகும். இவற்றோடு சம்பிரதாயபூர்வமாகத் தத்தமது பிரதேசங்களில் நிகழும் நடைமுறைகளையும், குருமூலமாக உபதேசிக்கப்பட்டவற்றையும் சேர்த்து முழுமனதாக விரதங்களை நம்பிக்கையோடு அநுசரிப்பது முறையாகும்.☐

(நன்றி : சைவ விரதங்களும் விழாக்களும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரசாலை – இலந்தைப்பதி ஸ்ரீ வீரமாகாளியம்பாள் பேரில்
சாவகச்சேரி. வித்துவான் திரு. ச. பொன்னம்பலபிள்ளையவர்கள் இயற்றிய

# திருவூஞ்சல்

## காப்பு

சீர்பூத்த நறுநிழற்றன் காவும் பாங்கிற்
செஞ்சாலி விளைமருத வைப்புஞ் சூழ
நீர்பூத்த கமலமலர்த் தடமும் மன்னி
நீடுவளஞ் சால்சரசைத் திருவாழ் நாட்டை
வார்பூத்த வருண்முகமாய்க் காக்கும் வீர
மாகாளி யம்மைதனக் கூஞ்சல் செப்பக்
கார்பூத்த கருணைமதம் பொழியும் முக்கட்
கற்பகத்தி னுபயபதங் காப்பதாமே. (1)

## ஊஞ்சல்

சீருலவுஞ் செம்பவளத் தூண்க ணாட்டி
திருத்தமுறச் செயும்வயிரச் சட்டம் மாட்டி
பாருலவுந் தனிச்செம்பொற் கயிறு தூக்கி
பசுமைதிகழ் மரகதத்தின் பலகை வீக்கி
ஏருலவும் படியடியே மியற்றித் தந்த
வேற்றமுறு மூஞ்சலிதி னெம்மைக் காப்பாள்
வாருலவுந் திரிசூலப் படையாய் வீர
மாகாளி யம்மையரே யாடீ ரூஞ்சல். (2)

தும்புரு நாரதனு மிசைகள் பாட
தூயபுலோ மசைமுதலோ ருருகு நாட
செம்பதுமை வாணியிவர் முன்பு கூட
திலோத்தமையு மூர்வசியும் பற்றி யாட்ட
நம்புநரு மதைமாத ரன்பு காட்ட
நாடியமே னகையரம்பை மலர்கள் சூட்ட
வம்பவிழு மலரளகஞ் சோர வீர
மாகாளி யம்மையரே யாடீ ரூஞ்சல். (3)

தக்கதிறல் பெற்றவுருத் திரநற் காளி
சார்ந்ததமிட் டிரகாளி மேற்கங் காளி
மிக்கவிற றருந்தண்ட காளி யின்று
விளங்குதரி சனகாளி திருஷ்டி காளி
தொக்கசப்த மாத்திரநற் காளி மேலும்
துலங்குமட்ட காளியெனச் சொல்லு மிந்த
வக்கிரந்தீர் பரிசனரோ டமரும் வீர
மாகாளி யம்மையரே யாடீ ரூஞ்சல். (4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகம்பிரமத் தக்கனரி தன்னை வைத்தே
யயனமர ரரிவையர்மற் றெவுருஞ் சூழச்
சகம்பரவப் பெருவேள்வி யியற்றக் கண்டே
சங்கரனங் கதையழிப்பான் றோற்றச் செய்த
வுகம்பரவு தனிவீர னுடனே தோன்றி
யுற்றவர மங்கையரைத் தடிந்தே செய்த
மகஞ்சிதைக்கும் பத்திரைநீ யன்றோ வீர
மாகாளி யம்மையரே யாடீ ருஞ்சல். (5)

சீதரனும் பிதாமகனும் பெரிது மஞ்சச்
சினங்காட்டித் திருவாலங் காட்டி லோர்நாள்
நாதனுட னின்றுநடஞ்செய்யும் போதி
நம்பனுனை வென்றிபெறக் கருதித் தானோ
பேதமுற வொருகாலைத் தூக்கிக் காட்டப்
பெருநாண முற்றோட்டம் பிடித்துப்போன
மாதரசே விளைந்துவிளை யாடும் வீர
மாகாளி யம்மையரே யாடீ ருஞ்சல். (6)

தஞ்சைநக ராண்டுவரும் வண்மை யுள்ள
சரபோசன் றன்துவித்து வானே யான
விஞ்சுபுகழ் பெறுங்காளி தாச னுக்கும்
விரும்புகவிச் சக்ரவர்த்தி கம்ப னுக்குந்
தஞ்சமெனும் புலவருக்குந் தயங்க நாவிற்
றனிப்பீச வக்கரத்தைப் பொறித்துத் தந்து
வஞ்சமிலா கலைமானு மான வீர
மாகாளி யம்மையரே யாடீ ருஞ்சல். (7)

ஆரணிநீ சண்டிகைநீ சிவையி னோடு
மமலியுநீ யம்பணத்தி சூலி யுமநீ
பூரணிநீ சயமகணீ சூரி யுமநீ
போற்றுபாலைக் கிளத்தியுமநீ விசையை யுமநீ
நாரணிநீ மாலினிநீ குமரி யுமநீ
காரணிநீ வைரவிநீ தேவி யுமநீ
வாரணியுங் கலசமுலைத் தாயே வீர
மாகாளி யம்மையரே யாடீ ருஞ்சல். (8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்ந்தபெருந் தவம்புரிந்தோ னசுர வேந்த
னமரநினை வாட்டுதிறல் மகிடன் றன்னைத்
தோய்ந்தவமுத தீர்த்தமதி னொளிக்கத் தேடிச்
சூலவிறற் படைப்பிடித்துக் குத்தி மாய்த்தே
ஓய்ந்தவலிப் புரந்தரனை யாதி யான
வும்பரினை யஞ்சாமற் காத்துத் தந்த
வாய்ந்ததிற லாயெமையுங் காக்கும் வீர
மாகாளி யம்மையரே யாடீ ரூஞ்சல். (9)

தந்திரத்தா லாகுமதோ முன்னி யுன்னைச்
சாலவருள் பெறவேண்டி யழைக்குங் காலை
யந்திரத்தால் முக்கோண மட்ட கோண
மணிவிருத்த மட்டவித ளான விந்த
வெந்திரத்தா நறுந்தூப தீப மிட்டே
யெண்ண மொன்றாய்க் குறித்தளவு செபங்கள் செய்யு
மந்திரத்தாற் றோன்றியருள் புரியும் வீர
மாகாளி யம்மையரே யாடீ ரூஞ்சல். (10)

துன்னுதிரு வருளிலந்தைப் பதியாய் வாழி
தொல்சரசைத் திருநாட்டைப் புரப்பாய் வாழி
உன்னுமவர் தமக்குமுனம் வருவாய் வாழி
உற்றகுறை தீர்ந்துவரந் தருவாய் வாழி
பன்னுமறைப் பொருளுருவ மானாய் வாழி
பரமனருட் சத்தியுரு வானாய் வாழி
மன்னுமிவ ணின்றுநடஞ் செய்யும் வீர
மாகாளித் தாயேநீ வாழி வாழி. (11)

## எச்சரிக்கை

மன்னுசிவ சத்தியிலங் குரித்தா யெச்சரிக்கை
வயங்குமணி யாரமுலை தரித்தா யெச்சரிக்கை
மாறமரின் மகிடனுட றிரித்தா யெச்சரிக்கை
மாதவஞ்செய் வார்க்குவரம் வரித்தா யெச்சரிக்கை

வடவாலங் காட்டுநடந் தருவா யெச்சரிக்கை
மந்திரஞ்செய் வார்க்குமுனம் வருவா யெச்சரிக்கை
வஞ்சகர்மு னச்சமுறு முருவா யெச்சரிக்கை
மருவலர்க ளோடுசமர் புரிவா யெச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராக்கு

| | |
|---|---|
| மாமகத்தின் மங்கையரை வென்றாய் | பராக்கு |
| வன்றிறல்கொள் வீரனொடு சென்றாய் | பராக்கு |
| குழல்விரியக் கையெறிந்து நின்றாய் | பராக்கு |
| குறைதவிரக் காட்டுகுணக் குன்றாய் | பராக்கு |
| செய்யவெறி யாட்டயருந் தேவி | பராக்கு |
| சேயிளைகண் மார்கருமை யாவி | பராக்கு |
| திருந்திளைக டமக்குறுநோ யோவீ | பராக்கு |
| செயவீர மாகாளித் தாயே | பராக்கு |

## மங்களம்

ஆதிபர மேஸ்வரிக்கு மங்களம் - சிவ
அங்கயற் கண்ணம்பிகைக்கு மங்களம்
தீதையா பரிக்கு மங்களம் - திகழ்
திவ்யசிவ நாயகிக்கு மங்களம்
நான்முகன் நாயகிக்கு மங்களம் - நல்ல
நாரணி சியாமளைக்கு மங்களம்
செங்கமலச் செல்விக்கு மங்களம் - சிந்தை
செம்மனத்தர் அருகிருப்பாய் மங்களம்
சங்கரியே சாம்பவியே மங்களம் - சர்வ
சக்தி ஸ்வரூபிணியே மங்களம்
சரசையம் பதியுறைவாய் மங்களம் - வீர
மாகாளி யம்மையர்க்கு மங்களம்
மங்களம் சுப மங்களம் நித்ய
ஜெய மங்களம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு - I

## ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயம்
## பதிவிலக்கம் HA/5/JA/735
### பரிபாலனசபை

| | |
|---|---|
| தலைவர்:- | சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள் |
| உபதலைவர்:- | திரு. கு. நகுலேஸ்வரன் |
| செயலாளர்:- | திரு. வை. விஜயகுமாரன் |
| உபசெயலாளர்:- | திரு. ச. லலீசன் |
| பொருளாளர்:- | திரு. த. சுலோஜன் |
| உறுப்பினர்கள்:- | திரு. கு. ஜெகதீஸ்வரன் |
| | திரு. பொ. தர்மலிங்கம் |
| | திரு. அ. பிறேமதாஸ் |
| | திரு. கு. மதனகுமார் |

ஆலய வங்கிக்கணக்கு

Sri Veeramakali Ambal Kovil, Sarasalai

ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் கோவில், சரசாலை

கணக்கு இலக்கம்

AC / No:- 07790738

வங்கி:- இலங்கை வங்கி, சாவகச்சேரி

Bank of Ceylon Chavakachcheri



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயம் வழங்கிய கௌரவப்பட்டங்கள்



**சிவாச்சார்ய திலகம் (1985)**
சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக்குருக்கள்
(கல்வயல்)



**இலக்கியச் செல்வர் (1993)**
கவிஞர், த. நாகேஸ்வரன்
(பெரியமாவடி, சாவகச்சேரி)



**சிற்பக்கலாஜோதி (2013 )**
திரு மு. ததீஸ்கரன்
(அராலி)



**வர்ணக்கலாஜோதி (2013)**
திரு. த. துரைசிங்கம்
(கெருடாவில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது மனமார்ந்த நன்றிகள்

வை. விஜயகுமாரன்
செயலாளர்
ஆலய பரிபாலனசபை

வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் சர்வலோக நாயகி அன்னை பராசக்தி இலந்தைத்திடல் ஸ்ரீ வீரமா காளி அம்பாள் ஆலயம் இன்று புதுப் பொலிவு பெற்று விளங்குகின்றது. இப் புதுப்பொலிவுக்கு அன்னை காளியின் பேரருளே காரணமாகும். இதற்காக எம் காளியின் பாதக்கமலங்களை மனம் மொழி மெய்களினால் வாழ்த்தி எம் மனமார்ந்த நன்றிகளை பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

முதலில் எங்கள் பரிபாலன சபைக்குத் தலைவராகவும், வழிகாட்டியா கவும், வலுவூட்டுபவராகவும் விளங்குபவர் எங்கள் ஆலயப் பிரதம சிவாச்சாரியார் கலாபூஷணம் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள் அவர்கள் உடல் நலம் குன்றி யிருந்தாலும் மஹாகும்பாபிஷேகத்தினை பிரதிஷ்டா பிரதம குருக்களாக இருந்து மிகவும் சிறப்பாக எல்லோரும் வியக்கத் தக்க வகையில் மிகவும் பக்தி பூர்வமாக நடாத்தி முடித்திருக்கிறார். அவர் மட்டு மல்ல அவர் குடும்பத்தினரும் பெருந் துணை புரிந்திருக்கிறார்கள். இவை எல்லாவற்றிற்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றிகளை பணிவோடு சமர்ப்பிக்கின் றோம்.

ஆலயத்தின் நித்திய, நைமித்திய பூசைகளை இயற்றுகின்ற நித்திய குருவாக விளங்குபவர் வேதாகம ஜோதி கிரியாவித்தகர் சிவஸ்ரீ சி. கிருபாகரக் குருக்கள் அவர்களும் கும்பாபிஷேகக் கிரி யைகளைத் தந்தையாருடன் இணைந்து சிறப்பாக நடாத்துவதற்குப் பெருந்துணை யாக இருந்தார். இவர்கள் கும்பாபி ஷேகத்தைத் தொடர்ந்து ஆலய நித்திய பூசைகளை நேரமுறைக்கு அமைய நடாத்த முன்வந்திருக்கிறார்கள். இதற் காக இவர்களுக்கும் எமது நன்றிகள் அத்தோடு துணையாக நின்ற இவரது துணைவியார் கௌரியம்மாவுக்கும் எமது நன்றிகள்.


ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக் கப்பட்டு காட்சி தருகின்ற திரிதள இராஜ கோபுரத்தை திரு.கந்தசாமி திருப்பதி யம்மா குடும்பத்தினர் தாமாகவே முன் வந்து நிர்மாணித்து அளித்திருக்கிறார். இந்த உன்னதமான திருப்பணிக்கு நிக ரெதுவுமில்லை. இதனைத் தரிசிக்கின்ற அடியவர்களுக்கு கிடைக்கின்ற கோடி புண்ணியத்திற்கு வழிசமைத்த கந்தசாமி திருப்பதியம்மா குடும்பத்தினருக்கு எமது கோடி நன்றிகள்.

கோபுரத்திற்கு முன்பு பல அடியார்களுக்கு ஆறுதல் அளிக்கின்ற மிகவும் அழகாக அமைக்கப்பட்டிருக் கின்ற கோபுர முன்மண்டபத்தை முன் வந்து அமைத்து உதவியவர்கள் திரு. க.அருண்மொழித்தேவன் குடும்பத்தினர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைஞர் கௌரவிப்பு



கும்பாபிஷேகத்தில் கோபுர நிர்மாணக் கலைஞர் கௌரவிப்பு - 2013



கும்பாபிஷேகத்தில் வர்ண வேலைக் கலைஞர் கௌரவிப்பு - 2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவார்கள். இவர்கள் ஆலயத்தோடு மிகவும் நெருங்கிய தொடர்புகொண்ட வர்கள் இவர்களுக்கும் அன்னை காளியின் திருவருள் கிடைக்கப் பிரார்த் திப்பதோடு நன்றிகளையும் நவில் கின்றோம்.

ஆலயத்தின் வடக்குநோக்கி வீற்றிருக்கின்ற தில்லைக்காளிக்கான முன் மண்டபம் மற்றும் தோரண வாயில் ஆகியன புதிதாக நிர்மாணிக்கப்பட் டுள்ளன. இத்தெய்வீகத் திருப்பணிக்குப் பெருந்துணை புரிந்தவர்கள் ஆலயப் பரிபாலகர் திரு. கு. நகுலேஸ்வரன் அவர் களின் புதல்வர் திரு. ந. ஞானசம்பந்தன் அவர்கள் ஆவார். இவர்கள் ஆலயத்தை சிறந்தமுறையில் வழிநடத்த வேண்டு மென லண்டனில் இருந்து அவ்வப்போது வேண்டிய ஆலோசனைகளையும் வழி காட்டல்களையும் வழங்குபவர். அவர் களுக்கும் எமது நன்றிகள் பல.

அடுத்து நன்றிக்குரிய நல் லுள்ளங்கள்.

1. கோபுர வைரக்கல் வேலையை வடிவமைத்த சுன்னாகம் திரு. பே. இரா சரத்தினம் குழுவினர்.
2. கோபுரத்தை நிர்மாணித்த அராலியூர் பு. வின்ரன் சிற்பக்கலையக சிற்பக் கலா ஜோதி திரு. மு. ததீஸ்கரன் (நிஷாந்தன்) குழுவினர்.
3. அற்புதமாக சிற்பங்களை வடிவமைத்த அராலியூர் திரு. அற்புதராஜா குழுவினர்.
4. ஆலய கட்டட நிர்மாணப் பணிக்குப் பெருந்துணைபுரிந்த சரசாலை திரு. மு. ஜெயரத்தினம் குழுவினர்.
5. கண்களைப் பறிக்கும் வர்ணப்பூச்சு வேலைகளை ஆற்றிய கெருடாவில் வர்ணக் கலாஜோதி திரு. சு. துரைசிங்கம் குழுவினர்.
6. ஆலய நிர்மாணப் பணிகளுக்கு வேண் டிய கருவிகள் வாகனங்கள் தொழில்நுட்ப ஆலோசனைகள் என்பவற்றை இலவ சமாக வழங்கி உதவிய KUMAR BUILDING CONSTRRUCTION உரிமையாளர் திரு. கு. மதனகுமார் அவர்கள்.
7. ஆலய மின்னிணைப்பு வேலை கள்,நீர்குழாய் இணைப்பு வேலைகள் என்பவற்றை அவ்வப்போது சிறப்பாக ஆற்றி உதவுகின்ற சாவகச்சேரி வடக்கு T.M தொழிநுட்ப சேவைகள் நிலைய உரிமையாளர் திரு. அ. பிறேமதாஸ் (பப்பி), தாஸ் குழுவினர்.
8. ஒலிபெருக்கிச் சாதனங்களை இலவசமாக வழங்கியதோடு மட்டுமல்லா மல் அவற்றை தொடர்ந்து பயன்படுத்து வதிலும் நவீனமயமாக்குவதிலும் தொடர்ந்து உதவிகளை புரிந்து வருகின்ற வவுனியா கணனி கற்கை வள நிலைய முகாமையாளர் திரு. மா. தயாகரன் அவர்கள்.
9. வாகன உதவிகளை இலவசமாக வழங்கி உதவிய

திரு. ச. மனோகரன் (பாப்பா)
திரு. பொ. தர்மலிங்கம்
திரு. ப. கலாரூபன்
திரு. சண்முகநாதன்

10. ஆலயத்தோடு பல வழிகளில் தொடர்பு பட்டு பரிபாலன சபையுடன் இணைந்து ஊடகத்துறை இணைப்புப் பணிகள் மலர் உருவாக்கம் ஆகியவற்றிற்கு அளப்பரிய பணியாற்றியுள்ள விரிவுரையாளர் திரு. ச. லலீசன் அவர்கள்.
11. ஆலய விழாக்களின் போது மங்கல நாதம் இசைக்கின்ற திரு.ச. சுப்பிர மணியம் (சங்கத்தானை) திரு. சு. விபூ சணன் குழுவினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. பலதரப்பட்ட இரும்பு வேலைகளை அவ்வப்போது இலவசமாக ஆக்கித்தரு கின்ற திரு. பரமநாதன், பகீரதன், பகிந்தன் ஆகியோர்.

13. ஆலயத்திற்கு வேண்டிய உதவிகளை வழங்கிவரும் பிரதேசசபை உறுப்பினர் ஓய்வுபெற்ற அதிபர் திரு. ச. ஞானலிங்கம் அவர்கள் நில அளவை அத்தியட்சகர் திரு. பொ. சிவதாஸ் அவர்கள். திரு. திருமதி தேவேஸ்வரன் அவர்கள். திரு. ப. றமேஸ் அவர்கள்

14.பூமாலை அலங்காரம் வழங்கி வருகின்ற திரு. சோ. ஞானம் அவர்கள்

15. ஆலய பூசைகள், விழாக்கள் சிறப்பாக இடம்பெற மாதப்பூசை நவராத்திரி, திருவிழா, திருவெம்பாவை, பௌர்ணமி, அன்னதானம், மற்றும் விசேடதின உபயகாரர்கள்

16. ஆலயப் பணிகளில் பங்கெடுக்கின்ற திரு. வே. கதிரேசு, மணியக்கா, திரு. அ. கைலாயபிள்ளை திரு. கு. பரமானந்தன் சண், நிறோஜடன் போன்றோர்கள்

17. ஆலயப் பணிகளில் பெருமளவு பங்கெடுக்கின்ற இளைஞர் அணிகளைச் சார்ந்த கேதீஸ், குமரன்,தாஸ், பகிர், பகிந்தன்,சுகிர்தன்,ஜனா, சம்பத், ஜெயக்குமார், தர்சன் போன்றோர்கள்.

18. கும்பாபிஷேக மலர் உருவாக்கத்திற்கு வேண்டிய தகவல்களை இயற்றைப்படுத்த உதவிய திரு.க.மு. சித்தானந்தன், திரு. க. மு. சதானந்தன் போன்றோர்கள்.

19. சிறப்புற அச்சிட்டு உதவிய திருக் கணிதப்பதிப்பகத்தினர்.

குறிப்பாக கும்பாபிஷேக தினத் தன்று வருகைதந்து அருளாசியுரை, சிறப்புரை ஆற்றிய சான்றோர்களுக்கும், மண்டலாபி ஷேக நாட்களில் உபயம் ஏற்று நிறைவேற்றிய காளிதேவியின் அடியார்களுக் கும் அருள்கிடைப்பதாக.

இறுதியாக ஆலயத்தில் மேற் கொள்ளப்பட்ட பலதரப்பட்ட திருப்பணி வேலைகள், வர்ணப்பூச்சு வேலைகள் கும்பாபிஷேகம் என்பவற்றிற்கு வேண்டிய நிதியை வாரி வழங்கிய அனைத்து அம்பிகை அடியார்களிற்கும் அன்னை காளியின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திப்பதோடு அனைவருக்கும் எமது நன்றிகள் மிகப் பல.

## தேர்த்திருப்பணி

ஏறத்தாழ எட்டுத் தசாப்தங்களை கடந்து ஆலயத்திற்கு வடக்குப் பக்கமாக நிழல் பரப்பி அடியார்களுக்கு ஆறுதல் அளிப்பதில் பக்கபலமாக இருந்த இரு மருத மரங்கள் வீதி விஸ்தரிப்பு மின்சார விரிவாக்கப் பணிகளுக்கு உதவும் பொருட்டு அவற்றைத் தறிக்கவேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது. ஆலயச செலவில் தறித்து பாதுகாத்து வருகின் றோம் மரக்குற்றிகளையும் உள்வாங்கி அடியார்களின் உதவியோடும் அன்னை காளிக்கு சித்திரத்தேர் ஒன்றை அமைப் பதற்கான திருப்பணி நிதியத்தை மஹா கும்பாபிஷேக தினத்தன்று ஆரம்பித்துள் ளோம். இத்திருப்பணிக்கும் அன்னை காளியின் அடியார்களே நிதியுதவி நல்கி தேர்த்திருப்பணி நிறைவுற தங்கள் அனைவரின் பேராதரவை பெரிதும் வேண்டிநிற்கின்றோம்.

**அனைவருக்கும் அம்பாளின்**
**அருட்கடாட்சம் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய வடக்கு வீதியில் தில்லைக்காளியின் தோரண வாயில்



ஆலய மேற்கு வீதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org